# நெகேமியா



www.tamilchristianassembly.com

# நெகேமியா

இடிந்து, அழிந்து உருமறைந்து கிடக்கும் சாலோமோனின் தேவாலயம் திரும்ப கட்டப்பட வேண்டுமானால் கடவுள் ஓர் எஸ்றாவை எழுப்ப வேண்டும். எருசலேமின் அலங்கம் திரும்ப எழும்பப்பட வேண்டுமானால் கடவுள் ஒரு நெகேமியாவை ஆயத்தம்செய்யவேண்டும்.

அப்படிப்பட்ட கடவுளால் ஆயத்தம் செய்யப்பட்ட நெகேமியாதான் பகைவராலும், இயற்கை செயற்கை சூழ்நிலைகளாலும் தன் சொந்த மக்களாலும் ஏற்படும் தொல்லைகளையும் மனவருத்தங்களையும் பொருட்படுத்தாமல் பணிபுரிய முடியும். அரண்மனையில் பணி புரிந்த நெகேமியா எப்படிப் பணித்தளத்தில் பிறரைக் கண்காணிக்க முடியும்? கடவுள் நடப்பிக்கும் அதிசயம் இதுவே. கடவுள் உன்னை அவர் பணிக்கு அழைத்திருந்தால் நெகேமியாவைப்போல அவர் பணி செய்யப் புறப்படு.

பொருளடக்கம்


1. நெகேமியாவின் ஜெபம்
2. எருசலேமமைச் சேர்தல்
3. ஜனங்கள் அலங்கங்களைக் கட்டுதல்
4. பணியும் போராட்டமும்
5. உள்ளிடைக் குழப்பம்
6. பகைஞரின் வஞ்சனை
7. பெயர்ப்பட்டியல்
8. தேவனின் கட்டளை வாசிக்கப்படல்
9. உடன்படிக்கை பண்ணப்படுதல்
10. உடன்படிக்கை முத்திரை போடப்படல்
11. எருசலேமில் வாழ்ந்த மக்கள்
12. ஆசாரியர்களின் பெயர்கள்
13. நெகேமியா செய்த இதர காரியங்கள்

# 01. நெகேமியாவின் ஜெபம்

அதிகாரம் 1

நெகேமியாவின் ஜெபம்

வசனம் 1:1

அகலியாவின் குமாரனாகிய நெகேமியாவின் நடபடிகள்: இருபதாம் வருஷம் கிஸ்லேயுமாதத்தில் நான் சூசான் என்னும் அரமனையில் இருக்கும்போது சம்பவித்தது என்னவென்றால்,

நெகேமியாவின் புத்தகம் நெகேமியாவினாலேயே எழுதப்பட்டுள்ளது என்பது தெளிவு. தேவனுடைய மனுஷனாகிய நெகேமியாவைப்பற்றிய மகழ்ச்சிகரமான விளக்கங்களை இப்புத்தகம் நமக்களிக்கிறது. வேதபாரகனாகிய எஸ்றாவிற்கு நேர் எதிரான கொள்ளைகளைக் கொண்டவர் நெகேமியா என்ற போதிலும் இவ்விருவரின் தாலந்துகளையும் தேவன் வெவ்வேறு காரணங்களுக்காகப் பயன்படுத்தி ஆசீர்வதித்துள்ளார். ஒருவிதத்தில் இருவரும் ஒரே வழியில் செயல்ப்பட்டனர் எனலாம். இருவரும் தேவனுடைய பிள்ளைகளாக விளங்கினர். இருவரும் தேவன் அருளிய வேலைகளைச் செய்ய ஆவலுடன் முற்பட்டனர்.

பெர்சியா (பாரசீக) நாட்டில் யூதர்கள் சிறைபிடிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்த காலத்தில் நெகேமியாவும் சிறைவைக்கப்பட்டிருந்தான். பாரசீக நாட்டு மன்னரான அர்த்தசஷ்டா இராஜாவின் அரண்மனைப் பணியாளரில் ஒருவனாக நெகேமியா இருந்தான். இராஜாவிற்குத் திராட்சைரசம் பரிமாறும் பானபத்திரக்காரனாக அவன் இருந்ததினால் அரண்மனை வழிமுறைகளை நன்கு அறிந்திருந்தான். மோசே பார்வோன் மன்னரின் அரண்மனையில் வளர்ந்ததால் அரண்மனையின் வழிமுறைகளை நன்கு அறிய முடிந்தது (யாத்.2:1-10, 1.சாமு.18:5, 19:9). தாவீது சவுலுக்காகப் பணியாற்றியதால் இத்தகைய அனுபவம் பெறமுடிந்தது. தானியேல் நேபுகாத்நேச்சாரின் அரண்மனையில் இளைஞனாக சிறைவைக்கப்பட்டிருந்தபோதும் இத்தகையதோர் நல்லனுபம் பெற்றான் (தானி.1:19). தேவன் தமது பிள்ளைகளைத் தமது பணிக்காக ஆயத்தப்படுத்த அரச அரண்மனைக் கூடங்களைக்கூடப் பயன்படுத்த வல்லவராய் இருக்கிறார்.

வசனம் 1:2-4

என் சகோதரரில் ஒருவனாகிய ஆனானியும், வேறே சில மனுஷரும் யூதாவிலிருந்து வந்தார்கள். அவர்களிடத்தில் நான் சிறையிருப்பில் மீந்து தப்பின யூதரின் செய்தியையும், எருசலேமின் செய்தியையும் விசாரித்தேன். அதற்கு அவர்கள்: சிறையிருப்பில் மீந்திருக்கிறவர்கள் அந்தத் தேசத்திலே மகா தீங்கையும் நிந்தையையும் அநுபவிக்கிறார்கள். எருசலேமின் அலங்கம் இடிபட்டதும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய்க் கிடக்கிறது என்றார்கள். இந்த வார்த்தைகளைக் கேட்டபோது நான் உட்கார்ந்து அழுது, சில நாளாய்த் துக்கித்து, உபவாசித்து, மன்றாடி, பரலோகத்தின் தேவனை நோக்கி:

ஒருநாள் நெகேமியாவின் சகோதரரில் ஒருவனாகிய ஆனானியும் வேறே சில மனுஷரும் எருசலேமில் இருந்து நெகேமியாவைக் காண வந்தனர். எருசலேமின் செய்தியையும் யூதர்களின் செய்தியையும் குறித்து நெகேமியா அவர்களிடத்தில் விசாரித்தான். அதற்கு அவர்கள் பிரதியுத்தரமாக எல்லாம் குழப்பமாக உள்ளதென்றும், அங்கே மக்கள் மகா தீங்கையும் நிந்தையையும் அனுபவிக்கின்றனர் என்றும் கூறினர். மேலும் எருசலேமின் அலங்கங்கள் இடிக்கப்பட்டும் அதன் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய்க் கிடக்கின்றன. ஆலயம் மறுபடியுமாய்க் கட்டப்பட்டது. ஆனால் பகைவரிடமிருந்து மக்களுக்குப் பாதுகாப்பே இல்லாமல் உள்ளது என்றும் நெகேமியாவுக்கு அறிவிக்கப்பட்டது. எருசலேமின் மோசமான நிலையை நெகேமியா

ஓரளவு அறிந்திருந்தான். ஆனால் ஆலயத்தைப் பற்றிய இத்தகைய அதிர்ச்சியான செய்திகளை அவன் எதிர்பார்க்கவில்லை. இந்த வார்த்தைகளைக் கேட்டபோது நெகேமியா மிகவும் துக்கித்து உட்கார்ந்து அழுதான். சிலநாட்கள் வரை அவன் துக்கித்துக் கொண்டேயிருந்தான். ஆனால் உதவிக்கு எங்கே போவது என்று அவனுக்குத் தெரியும். அவன் தேவனிடத்திற்குச் சென்றான். அவன் அங்கே தேவனிடத்தில் உட்கார்ந்து அழுது உபவாசித்து பரலோகத்தின் தேவனை நோக்கிப் பிரார்த்தனை பண்ணினான்.

வசனம் 1:5

பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மில் அன்புகூர்ந்து, உம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு, உடன்படிக்கையையும் கிருபையையும் காக்கிற மகத்துவமும் பயங்கரமுமான தேவனே,

நெேகமியா எவ்வாறு தேவனிடத்தில் வேண்டுதல் செய்தான் என்பதைனை 5 முதல் 11 வரையிலான வசனங்களில் நாம் வாசிக்கிறோம். அது ஒரு முன்மாதிரி ஜெபம். முதலாவது அவன் பரலோகத்தின் தேவனை அழைக்கிறான். கர்த்தர் (இயேசு கிறிஸ்து) பூலோகத்தில் தமது சீஷர்களுக்கு ஜெபம்பண்ண போதித்ததுபோல இது உள்ளது. (லூக்.11:2). அடுத்து, அவன் தேவனை மகத்துவமுள்ளவர் என்றும் பயங்கரமானவர் என்றும் கூறுகிறான். கர்த்தருடைய ஜெபத்தில் உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக எனப்பட்டுள்ளதுபோல் இது உள்ளது. அடுத்து கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் தமது உடன்படிக்கையையைக் காக்கிற தேவன் என்றும் கூறுகிறான். கர்த்தருடைய ஜெபத்தில் அவர் நமக்குப் போதித்து, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுவதுபோல் பூமியிலேயும் செய்யப்படுவதாக என்று போதித்துள்ளார் அன்றோ?

வசனம் 1:6

உமது அடியாராகிய இஸ்ரவேல் புத்திரருக்காக இன்று இரவும் பகலும் உமக்கு முன்பாக மன்றாடி, இஸ்ரவேல் புத்திராகிய நாங்கள் உமக்கு விரோதமாகச் செய்த பாவங்களை அறிக்கையிடுகிற அடியேனுடைய ஜெபத்தைக் கேட்கிறதற்கு, உம்முடைய செவி கவனித்தும், உம்முடைய கண்கள் திறந்தும் இருப்பதாக. நானும் என் தகப்பன் வீட்டாரும் பாவஞ்செய்தோம்.

பிறகு நெகேமியா, தன் ஜெபத்திற்கு தேவன் செவிசாய்க்கவேண்டுமென்று தேவனை நோக்கி மன்றாடினான். அவன் விடா முயற்சியோடு இருந்தான் என்று நாம் காண்கிறோம். ஏனென்றால் அவன், தனது மக்களுக்காக இரவும் பகலும் தேவனிடத்தில் ஜெபித்தான். தனது நாடும் மக்களும் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்தனர் என்று தேவனிடத்தில் மனம் கசந்து அறிக்கையிட்டான். அதில் அவனும் அவன் குடும்பத்தாரும் சேர்ந்தே பாவம் செய்தனர் என்பதையும் சேர்த்து அறிக்கையிட்டான். எஸ்றா செய்ததுபோலவே நெகேமியாவும் தனது மக்களோடு சேர்ந்து தானும் ஒரு பாவி என்று அறிக்கையிட்டான். நமது கர்த்தராகிய இயேசுவும் கர்த்தருடைய ஜெபத்தில் எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும் என்று ஜெபிக்கக் கற்றுத் தந்தார்.

வசனம் 1:7

நாங்கள் உமக்கு முன்பாக மிகவும் கெட்டவர்களாய் நடந்தோம். நீர் உம்முடைய தாசனாகிய மோசேக்குக் கற்பித்த கற்பனைகளையும், கட்டளைகளையும், நியாயங்களையும் கைக்கொள்ளாதேபோனோம்.

நெகேமியா தனது ஜெபத்தில் நாங்கள் பாவம் செய்தோம் என்பதற்காக மட்டும் சொல்லவில்லை. ஆனால் உமக்கு முன்பாகவும் மிகவும் கெட்டவர்களாய் நடந்தோம்

என மிகவும் பணிவாக அறிக்கை செய்தான். நாம் ஒருவேளை அதுபோல் சொல்வதற்குப் பின்வாங்கலாம். ஆனால் நெகேமியா அப்படித்தான் ஜெபித்தான்.

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார் (1.யோ.1:9) என்று வேதம் கூறுகிறது. நாம் நமது பாவங்களை உள்ளது உள்ளபடி அறிக்கையிடவேண்டும் என்று தேவன் நம்மை எதிர்பார்க்கிறார். அப்போது அவர் நமக்கு மன்னிப்பு அருளுகிறார்.

வசனம் 1:8

நீங்கள் கட்டளையை மீறினால், நான் உங்களை ஜாதிகளுக்குள்ளே சிதறடிப்பேன் என்றும்,

எஸ்றா ஒரு கற்றறிந்த வேதபாரகனாயிருந்தான். அதுபோல் நெகேமியாவும் வேதத்தை நன்கு அறிந்திருந்தான். அவன் தனது ஜெபத்திலே, மோசே வேதத்தில் எழுதிவைத்துள்ள சில உண்மைகளை மேற்கோளாகக் கூறுகிறான். அதாவது, நீங்கள் கட்டளையை மீறினால், நான் உங்களை ஜாதிகளுக்குள்ளே சிதறடிப்பேன் என்று கூறியிருந்தார். யூதர்களுக்கு நடந்தேறியதும் அதுவேதான்.

வசனம் 1:9

நீங்கள் என்னிடத்தில் திரும்பி, என் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்வீர்களானால், உங்களிலே தள்ளுண்டுபோனவர்கள் வானத்தின் கடையாந்தரத்தில் இருந்தாலும், நான் அங்கேயிருந்து அவர்களைச் சேர்த்து, என் நாமம் விளங்கும்படி நான் தெரிந்துகொண்ட ஸ்தலத்துக்கு அவர்களைக் கொண்டுவருவேன் என்றும் தேவரீர் உம்முடைய தாசனாகிய மோசேக்கு கட்டளையிட்ட வார்த்தையை நினைத்தருளும்.

தேவன் கிருபையோடும் மேலும் நீங்கள் என்னிடத்தில் திரும்பி, என் கற்பனைகளைக் கைக்கொண்டும் அவைகளின்படி செய்வீர்களானால், உங்களிலே தள்ளுண்டு போனவர்கள் வானத்தின் கடையாந்தரத்தில் இருந்தாலும் நான் அங்கேயிருந்து அவர்களைச் சேர்த்து, என் நாமம் விளங்கும்படி நான் தெரிந்துகொண்ட ஸ்தலத்திற்கு அவர்களைக் கொண்டுவருவேன் என்றும் கூறியிருந்தார். (உபா.30:1-6). நெகேமியா தனது ஜெபத்தில் மிகவும் உறுதியாய் இருந்து வேண்டுதல் செய்தான். கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை அவன் நன்கு அறிந்திருந்ததால் அவன் தனது ஜெபத்தில் ஒழுங்கீனமாய்ப் பேசவில்லை.

வசனம் 1:10

தேவரீர் உமது மகா வல்லமையினாலும், உமது பலத்த கரத்தினாலும், மீட்டுக்கொண்ட உமது அடியாரும் உமது ஜனங்களும் இவர்கள்தானே.

மோசே கர்த்தரை நோக்கி, இஸ்ரவேலர்களை மன்னிக்கும்படி செய்த அந்த ஒரு ஜெபத்தை இப்போது நெகேமியாவும் ஜெபமாகச் சொல்லுகிறான் (உபா.9:25-29). கர்த்தர், அன்று கடுங்கோபம் கொண்டு அந்த ஜனங்களை முற்றிலும் அழிக்க நினைத்தார். ஆனால் கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட தமது பிள்ளையாகிய மோசே அவர்களை அவர் அழிக்காதபடிக்கு, அவருடைய உக்கிரத்தை ஆற்றும் பொருட்டு அவருக்கு முன்பாகத் திறப்பின் வாயிலே நின்றான் (சங்.106:23). நெகேமியாவும், அதுபோன்றதொரு நிலையே இன்றும் வந்துள்ளது என தீர்மானித்து, அன்று மோசே செய்த அதே ஜெபத்தையே இன்றும் தேவனை நோக்கி ஜெபித்தான். இவர்கள் அனைவரும் கர்த்தருடைய பிள்ளைகள் தமது வல்லமையாலே அவர்களை மீட்டார் இப்போது அவர்களுக்காக தேவனுடைய சமுகத்தில் நெகேமியா வந்து நின்றான்.

வசனம் 1:11

ஆண்டவரே, உமது அடியானின் ஜெபத்தையும், உமது நாமத்துக்குப் பயப்படவேண்டும் என்று விரும்புகிற உமது அடியாரின் ஜெபத்தையும் உமது செவிகள் கவனித்திருப்பதாக. இன்றைக்கு உமது அடியானுக்குக் காரியத்தைக் கைகூடி வரப்பண்ணி, இந்த மனுஷனுக்கு முன்பாக எனக்கு இரக்கம் கிடைக்கப்பண்ணியருளும் என்று பிரார்த்தித்தேன். நான் ராஜாவுக்குப் பானபாத்திரக்காரனாயிருந்தேன்.

அன்றைய தினத்திலே அவன் தேவனிடத்திலே மன்றாடினான். அன்றைய தினம் தேவன் அவனுடைய ஜெபத்தைக் கேட்கும்படி மன்றாடியது ஏனென்றால் அந்த நன்னாளிலே அவன் இராஜாவோடே பேச இருந்தான். அவனுடைய வேலை இராஜாவின் சமுகத்திலே என்னவென்றும் நாம் இங்கு அறியமுடிகிறது. அவன் இராஜாவிற்குப் பானபத்திரக்காரனாயிருந்தான். அது அந்நாட்களில் மிகவும் சிக்கலான ஒருவேலையாகும். இராஜாவிற்கு பரிமாறப்படும்முன் அந்த திராட்சைரசத்தை அவன் ருசி பார்த்து, அதில் விஷம் ஏதுமில்லையென்று திட்டப்படுத்திக்கொள்ளவேண்டும். மேலும் இப்பணி அவனை இராஜாவின் சமுகத்திலேயே அடிக்கடி தங்கியிருக்கச் செய்ததினால் அவன் இராஜாவுக்கு நன்கு அறிமுகமானவனாக இருக்க வேண்டும். இப்போது அவன் ஜெபிக்கிறான். இன்றைக்கு உமது அடியானுக்குக் காரியத்தைக் கைகூடிவரப்பண்ணி, இராஜாவுக்கு முன்பாக எனக்கு இரக்கம் கிடைக்கப்பண்ணியருளும் என்று ஜெபித்தான்.

நெகேமியா எருசலேம் நகரத்திலே வசிக்காதிருந்தபோதிலும் அந்த நகரத்தைப்பற்றியும், நகர மக்கள் பற்றியும் உளம் உறுத்தப்பட்டிருந்தான். அவன் அவைகளை எண்ணி அழுதான். அதற்காக உபவாசித்திருந்தான். தேவனை நோக்கி ஜெபித்தான். மோசேயின் ஜெபத்தை மேற்கோள் காட்டி தேவனிடத்தில் அந்த மக்களுக்காக மன்றாடினான். இப்போது செயல்ப்படத் துவங்குகிறான்.

# 02. எருசலேமைச் சேர்தல்

அதிகாரம் 2

எருசலேமைச் சேர்தல்

வசனம் 2:1-3

அர்தசஷ்டா ராஜாவின் இருபதாம் வருஷம் நிசான் மாதத்திலே, திராட்சரசம் ராஜாவுக்கு முன்பாக வைத்திருக்கையில், நான் அதை எடுத்து அவருக்குக் கொடுத்தேன். நான் முன் ஒருபோதும் அவர் சமுகத்தில் துக்கமாயிருந்ததில்லை. அப்பொழுது ராஜா என்னைப் பார்த்து: நீ துக்கமுகமாயிருக்கிறது என்ன? உனக்கு வியாதியில்லையே, இது மனதின் துக்கமே ஒழிய வேறொன்றும் அல்ல என்றார். அப்பொழுது நான் மிகவும் பயந்து, ராஜாவை நோக்கி: ராஜா என்றைக்கும் வாழ்க. என் பிதாக்களின் கல்லறைகள் இருக்கும் ஸ்தலமாகிய நகரம் பாழானதும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய்க் கிடக்கும்போது, நான் துக்கமுகத்தோடு இராதிருப்பது எப்படி என்றேன்.

நெகேமியா மிகவும் விடாமுயற்சியாய் இருந்தான். அவனுடைய உபவாசமும் ஜெபமும் மாதங்கள் தொடர்ந்து நடந்தேறின. நாம் சில வேளைகளில் ஒரு காரியத்தைக் குறித்து ஜெபிக்கும்போது இரண்டு, மூன்று, இரவுகள் ஜெபித்தபின் சோர்ந்து போகிறோம். ஆனால் நெகேமியா அவ்வாறு சோர்ந்துபோகவில்லை. கர்த்தர் பதிலளிக்கும் நாள்

வந்தது. வழக்கம்போல அன்றும் நெகேமியா இராஜாவின் அரண்மனைப் பணியைச் செய்தவண்ணமேயிருந்தான். இராஜாவும் அவரது ஆசனத்தில்தானேயிருந்தார். நெகேமியா திராட்சைரசம் பரிமாறிக்கொண்டு இருந்தான். இங்கே நெகேமியா ஓர் அருமையான செய்தியை அறிவிக்கிறான். அவன் எப்போதும் இராஜாவிற்கு முன்பாக இதற்குமுன், அவர் சமுகத்தில் துக்கமாய் இருந்ததில்லை. எப்போதும் மகிழ்ச்சியான முகத்துடனே இருந்தான். இதுபோல நம்மைப்பற்றிக் கூறமுடியுமோ? ஓர் உண்மைக் கிறிஸ்தவனைவிட யாரும் மனமகிழ்ச்சியாய் இருக்கமுடியாது.

ஆனால் நாம் பல நேரங்களில் பலவகைத் தொல்லைகளினால் பாதிக்கப்பட்டவர்களாய்க் காண்கிறோம். இன்று நெகேமியாவின் முகமும் அவனது மனதின் துயரத்தைக் காண்பித்துக்கொண்டிருந்தது.

இராஜா அதைப் பார்த்தான். நீ துக்கமாயிருக்கிறது என்ன? உனக்கு வியாதியில்லையே. இது மனதின் துக்கமே ஒழிய வேறொன்றும் அல்ல என்று இராஜா சொன்னான். அந்த வார்த்தைகள் நெகேமியாவை மிகவும் பயப்படச்செய்தன. ஓர் இராஜாவைத் துக்கப்படுத்துவதென்பது அந்நாட்களில் மிகவும் அஞ்சப்படவேண்டிய ஒரு காரியம். பலவேளைகளில் இத்தகைய காரணங்களுக்குச் சிலர் சிரச்சேதம் செய்யப்பட்டும் இருக்கின்றனர். ஆனால் இராஜா அதைப் பற்றிக் கேட்டபோது நெகேமியா பயந்து மயங்கிவிழவில்லை. உடனே அவன் பதில் சொல்லுகிறான். அவன் பதிலிலே வழக்கமான வாழ்த்துதல் வார்த்தைகளை நாம் காண்கிறோம். இராஜா என்றைக்கும் வாழ்க (தானி.3:9 ஒப்பிடுக). அதன் பிறகுதான் அவன் செய்தியைச் சொல்லுகிறான். என் பிதாக்களின் கல்லறைகள் இருக்கும் நகரம் பழானதும், அதன் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய் கிடக்கும்போது நான் துக்கமுகத்தோடு இராதிருப்பது எப்படி? எருசலேம் நகரம் என்ற பெயரை அவன் குறிப்பிடவில்லை. அதை உரிமையான ஓர் இடமாகக் குறிப்பிட்டு, என்னுடைய முன்னோர்களின் நகரம் என்று குறிப்பிட்டுப் பேசுகிறான். எஸ்தரும், ஒருமுறை அகாஸ்வேரு இராஜாவினிடத்தில் பேசும்போது அவ்வாறே கூறுகிறாள்.... என் ஜீவன்.... என் மன்றாட்டு.... என் ஜனங்கள்... (எஸ்.7:3). இந்த இரண்டு முறையும் யார் இவ்வார்த்தைகளைப் பேசினார்களோ அவர்கள் நிமித்தம் அரசர்கள் இவ்வார்த்தைகளுக்குச் செவி சாய்த்தனர். நெகேமியா தன் வார்த்தைகளை வளர்க்கவில்லை. அவனுடை மாறுத்தரம் யாவும் சுருக்கமாயிருந்தது.

வசனம் 2:4-5

அப்பொழுது ராஜா என்னைப் பார்த்து: நீ கேட்கிற காரியம் என்ன என்றார். அப்பொழுது நான்: பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபம்பண்ணி ராஜாவைப் பார்த்து: ராஜாவுக்குச் சித்தமாயிருந்து, அடியேனுக்கு உமது சமுகத்தில் தயை கிடைத்ததானால், என் பிதாக்களின் கல்லறைகளிலிருக்கும் பட்டணத்தைக் கட்டும்படி, யூதா தேசத்துக்கு நீர் என்னை அனுப்ப வேண்டிக்கொள்ளுகிறேன் என்றேன்.

இராஜா தனது பரிவர்த்தனைகளிலும் மிகவும் சுருக்கமாய் இருந்தான். நீ கேட்கிற காரியம் என்ன? என்று கேட்டான். இதுபோன்ற ஒரு கேள்வி நம்மை வியப்பில் ஆழ்த்தவல்லதாய் இருக்கிறது. ஆனால் நெகேமியாவை அல்ல, அவன் நன்றாகச் சிந்தித்து, பலநாள்களுக்கு முன்னதாகவே தேவனிடத்தில் ஜெபித்து, முடித்து இருந்தான். இப்போது இராஜா அவனைப் பார்த்து அந்தக் கேள்வியைக் கேட்டவுடனே ஒரு நொடிப்பொழுது - இடைவெளி - தேவனை நோக்கிய ஒரு ஜெபம். நான் பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபம்பண்ணி, ஒரிடைவெளி மிகச் சிறிய இடைவெளிநேரம். இராஜாவைப் பார்த்து பதிலிறுத்தி, என்று வாசிக்கிறோம். அவனுடைய அறைக்குள் ஓடி முழங்கால் படியிட்டு ஜெபம் செய்ய நேரமில்லை. அதற்குரிய நேரம் வந்தவுடனே, செயல்படத் தயாராக இருந்தான். நமது வாழ்விலே, நாம் தயாராக இல்லாததினால் எத்தனை அரிய சந்தர்ப்பங்களை நழுவ விட்டிருக்கிறோம். நம்முடைய மனம் பரிசுத்த ஆவியின் செயல்ப்பாட்டிற்கு உகந்ததாய்

ஆயத்த நிலையில் இல்லாதிருந்ததினால் எத்தனை சந்தர்ப்பங்கள் நழுவிப் போயின. ஒருவேளை அத்தகைய சந்தர்ப்பத்தினைக்கூட, அது கடந்து போகுமுன் நாம் அறிந்துகூட இருக்கமாட்டோம்.

நெகேமியா மரியாதையான வார்த்தைகளால் பேசி, இராஜாவுக்குச் சித்தமாயிருந்தால் என்று ஆரம்பிக்கிறான். வேதம் சொல்லுவதென்ன? தேவனுக்குப் பயந்திருங்கள், இராஜாவைக் கனம் பண்ணுங்கள் (1.பேது.2:17). அடுத்து அவன் இராஜாவினிடத்தில் வேண்டுதல் செய்கிறான். யூதா தேசத்திற்கு நீர் என்னை அனுப்பும், என்று வேண்டுகிறான். என் பிதாக்களின் கல்லறைகள் இருக்கும் பட்டணம் என்று கூறுகிறான். இன்னும்கூட எருசலேம் என்ற பெயரை அவன் கூறவில்லை. அவன் மன்றாட்டு, தனிப்பட்ட அவனுக்கு மட்டும்தான். அடுத்து, ஏன் செல்லவேண்டும் என்பதற்கான காரணத்தைக் கூறுகிறான். நெகேமியா வேடிக்கை பார்ப்பதற்காக சுற்றுலா செல்லவில்லை, அல்லது துப்பறியும் பணிக்காக அவன் அங்கு செல்லவில்லை. ஒரு குறிப்பிட்ட பணிக்காக வேலை செய்ய - உழைக்க - அந்த உழைப்பு - ஒன்றைக் கட்ட. இங்கே நாம் காணும் நெகேமியா, உழைப்பின் அவசியத்தை மேற்கொள்ளுகிறான். அவன் அதற்காக அழுதான். அதற்காகவே ஜெபித்தான். உபவாசித்திருந்தான். நன்கு திட்டமிட்டிருந்தான்.

வசனம் 2:6

அப்பொழுது ராஜஸ்திரீயும் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள். ராஜா என்னைப் பார்த்து: உன் பிராயணம் எத்தனைநாள் செல்லும், நீ எப்பொழுது திரும்பிவருவாய் என்று கேட்டார். இவ்வளவுகாலம் செல்லுமென்று நான் ராஜாவுக்குச் சொன்னபோது, என்னை அனுப்ப அவருக்குச் சித்தமாயிற்று.

இராஜா இரண்டு கேள்விகள் கேட்பதை நாம் காண்கிறோம். அதற்குமுன் இராஜஸ்திரியைப் பற்றியும் வேதம் கூறுகிறது. அவளுடைய பெயர் இங்கு குறிப்பிடப்படவில்லை. ஆனால் இராஜஸ்திரியும் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள் என்று நாம் வாசிக்கிறோம். இந்தக் கேள்விகளும் உரையாடலும் நடக்கும்போது இராஜஸ்திரீயும் அருகில் இருந்தாள் என்று காண்கிறோம். ஆகையால் இந்த நடைமுறைகள் ஒரு தனி அறையில் நடைபெற்றிருக்கலாம் என்று நினைக்க இடமுண்டு. இராஜா கேட்ட கேள்விகள்: 1. உன் பிரயாணம் எத்தனை நாள் செல்லும்? 2. நீ எப்பொழுது திரும்பி வருவாய்? இந்தக் கேள்விகளுக்கு சரியான விடை அறிந்திருந்த நெகேமியா அதைக் கூறுகிறான். அப்போது இராஜா அவனை அனுப்ப சம்மதிக்கிறான். நெகேமியா என்னை அனுப்பும் என்ற வார்த்தைகளையே பயன்படுத்துகிறான். தன்னைப் போகவிடும்படி இராஜாவினிடத்தில் கேட்கவில்லை. ஆனால் அனுப்பும்படி கேட்கிறான். அந்தப் பயணத்தில், அப்படி அனுப்புவதனால் இராஜாவிற்கும் ஒரு பங்கு இருக்கிறது. இராஜா நெகேமியாவை அனுப்புகிறான். எகிப்து தேசத்தில் பார்வோன் இராஜா அப்படிச் செய்யவில்லை. மோசே கேட்டது, என் ஜனங்களைப் போகவிடு என்பது. ஒரு முழுப்பயணமாக பார்வோனைவிட்டுப் போக அவர்கள் விரும்பினார்கள்.

வசனம் 2:7

பின்னும் நான் ராஜாவைப் பார்த்து: ராஜாவுக்குச் சித்தமாயிருந்தால், நான் யூதாதேசத்துக்குப்போய்ச் சேருமட்டும், நதிக்கு அப்புறத்திலிருக்கிற தேசாதிபதிகள் என்னை வழிவிட்டனுப்பும்படிக்கு அவர்களுக்கு கடிதங்கள் கொடுக்கும்படிக்கு,

அடுத்து நெகேமியா, தனக்குத் தேவையானது என்னவென்று, இராஜாவினிடத்தில் கேட்டான். யூதா தேசத்திற்குப் போய்ச் சேருமட்டும், நதிக்கு அப்புறத்திலிருக்கிற தேசாதிபதிகளுக்குக் கடிதங்கள் கொடுக்கும்படி அவன் கேட்டான். அக்கடிதங்கள் அவனை இராஜாதான் அனுப்பினான் என்று காட்டும். ஆகையால் அவனுடைய பயணம் எளிதாய் அமையும் என்று எண்ணுகிறான். நாம் கிறிஸ்துவினால் இருதயங்களில்

எழுதப்பட்டும் சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற நிருபங்களாக இருக்கிறோமா (2.கொரி.2:3)? மக்கள் உங்களைப் பார்க்கும்போது இராஜாதி இராஜனாகிய கிறிஸ்துவினால் அனுப்பப்பட்டவன் என்று அவர்கள் நினைக்கக்கூடுமோ? நெகேமியா புறப்படவேண்டிய நேரத்தைக் குறித்தபின் அவன் எருசலேமுக்குப் புறப்பட்டான். அவன் புறப்படுவதை எதுவும் தடுக்கக்கூடாது என்று விரும்பினான். ஆபிரகாமின் வேலைக்காரனும் அவன் திரும்புகையில் யாதொன்றும் அவன் பணியைத் தடுப்பதை அவன் விரும்பாமல் கர்த்தா என் பிரயாணத்தை வாய்க்கப்பண்ணியிருக்க நீங்கள் எனக்குத் தடை செய்யாதிருங்கள் என்றான் (ஆதி.24:25).

வசனம் 2:8

தேவாலயத்துக்கு இருக்கிற அரணின் கதவு வேலைக்கும், நகர அலங்கத்தின் வேலைக்கும், நான் தங்கப்போகிற வீட்டின் வேலைக்கும் வேண்டிய மரங்களை ராஜாவின் வனத்துக் காவலாளனாகிய ஆசாப் எனக்குக் கொடுக்கும்படிக்கும், அவனுக்கும் ஒரு கடிதம் கட்டளையிடப்படுவதாக என்றேன். என் தேவனுடைய தயவுள்ள கரம் என்மேல் இருந்தபடியால், ராஜா அவைகளை எனக்குக் கட்டளையிட்டார்.

நெகேமியா தேவலாயத்திற்கு இருக்கிற அரணின் கதவுகளின் வேலைக்கும் நகர அலங்கத்தின் வேலைக்கும் தான் தங்கப்போகிற வீட்டின் வேலைக்கும் என்ன தேவை என்பதை முன்கூட்டியே கணித்துச் செயல்ப்பட்டான். அந்த வேலைகளுக்கு அதிகமான மரங்கள் தேவைப்படும் என்று அவன் அறிந்திருந்தான். அம்மரங்கள் எங்கு கிடைக்கும் என்றும் நன்கு அறிந்திருந்தான். அது இராஜாவின் வனத்துக்காவலாளன் அவன் அப் பணிக்குத் தலையானவன், தேவன் தமது பணிகளுக்கு தலையாய பணியாளர்களையே பலமுறை பயன்படுத்த வல்லவராய் இருக்கிறார். எரேமியா கிணற்றுச்சிறையில் அடைக்கப்பட்டுப்போனபோது எபெத்மெலேக் என்னும் பிரதானி அவனுக்காக நேரே இராஜாவினிடத்தில் சென்று அவனைச் சிறையிலடைத்த அதே இராஜாவினிடத்தில் பேசி அவனை விடுவிக்கச் செய்தான் என்று வேதம் கூறுகிறது (எரேமி.86:8-10).

நெகேமியா கேட்டதனைத்தையும் பெர்சியாவின் இராஜா அவனுக்குக் கொடுத்தான். நெகேமியாவும் இங்கு எஸ்றாவைப்போல் செயல்ப்பட்டதைக் காண்கிறோம். கர்த்தருக்கு ஸ்தோத்திரங்களைச் செலுத்துகிறான். என் தேவனுடைய தயவுள்ள கரம் என்மேல் இருந்தபடியால் இராஜா இவைகளை எனக்குக் கட்டளையிட்டார் என்று நெகேமியா கூறுகிறான். கர்த்தரின் உதவியில்லாமல் எந்த ஒரு திட்டமும் நடைபெறாது என்பது நெகேமியாவுக்குத் தெரியும்.

வசனம் 2:9

அப்படியே நான் நதிக்கு அப்புறத்திலிருக்கிற தேசாதிபதிகளிடத்துக்கு வந்து, ராஜாவின் கடிதங்களை அவர்களுக்குக் கொடுத்தேன். ராஜா என்னோடேகூட இராணுவச் சேர்வைக்காரரையும், குதிரைவீரரையும் அனுப்பியிருந்தார்.

நெகேமியா உடனே புறப்பட ஆயத்தமானான். வீட்டுக்குச் சென்று புறப்படுவதற்காக ஆயத்தம் செய்தான் என்று நாம் வேதத்தில் வாசிப்பதில்லை. வேதத்தில் கர்த்தர் தமது வாசலைத் திறக்கும்போதே உள்ளே செல்ல அவன் மிகவும் ஆயத்தமாக இருந்தான்.

இராஜாவோ அதிலும் அதிகம் செய்தான். நெகேமியாவுடன் ராணுவச் சோர்வைக்காரரையும் குதிரைவீரரையும் அனுப்பியிருந்தான். இதுபோலவே பவுலுக்கும் நடந்தது என்று வேதம் கூறுகிறது. பவுல் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தபோது, கர்த்தர் பவுலின் அருகே நின்று, பவுலே திடன்கொள் என்றார். அடுத்தநாள் இரவு பவுல் சிறைச்சாலையினின்று வெளியே விடுவிக்கப்பட்டு வேறு நகரத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டான். அதுமட்டுமன்றி அவனுடன் செல்ல இருநூறு காலாட்களையும், எழுபது குதிரை வீரரையும் இருநூறு ஈ ட்டிக்காரரையும்

ஆயத்தம்பண்ணி அனுப்பினான். கர்த்தர் தமது பணிக்காக எந்த ஒரு சேனையைக்கூட பணியவைக்க முடியும் என்று அறிவோமாக (அப்.23:23-24).

வசனம் 2:10

இதை ஓரோனியனான சன்பல்லாத்தும், அம்மோனியனான தொபியா என்னும் ஊழியக்காரனும் கேட்டபோது, இஸ்ரவேல் புத்திரரின் நன்மையை விசாரிக்க ஒருவன் வந்தான் என்பது அவர்களுக்கு மிகவும் விசனமாயிருந்தது.

நெகேமியா, நெடுந்தொலைவுப் பயணம் செய்து, அதற்குப்பின் நதிக்கு அப்புறத்தில் இருக்கிற தேசாதிபதிகளிடத்திற்கு வந்த இராஜாவின் கடிதங்களை அவர்களுக்குக் கொடுத்தான். நெகேமியாவும் அவனுடன் வந்த இராணுவச் சேர்வைக்காரரும், குதிரைவீரரும் எருசலேமில் காணப்பட்டபோது அங்கு ஒரு தீவிர நிலை எற்பட்டது. ஓர் ஆளையும், அவனைக் காக்க அவனோடு வந்த சேனையையும் நீ பார்த்தாயா என்று ஒருவரையொருவர் கேட்டுக்கொண்டனர்.

இந்த நெகேமியாவைப்பற்றிய செய்தி வெகுதுரிதமாக நரமெங்கும் பரவியது. நெகேமியா வந்து, யாதொரு காரியமும் செய்யத் துவங்கு முன்னரே பல எதிர்ப்புக்கள் கிளம்ப ஆரம்பித்துவிட்டன. இஸ்ரவேலர்களுக்கு உதவிசெய்ய ஒருவன் வந்திருக்கிறான் என்ற செய்தியைக் கேள்விப்பட்டவுடனே, சன்பல்லாத்து என்பவனும் தொபியா என்பவனுமான இருவர் தீவிரமடைந்தனர். இஸ்ரவேல் புத்திரரின் நன்மையை விசாரிக்க ஒருவன் வந்தான் என்ற செய்தி அவர்களை மிகவும் அலைக்கழித்தது. அவர்கள் இருவரும் யூதர்களின், இஸ்ரவேலரின் விரோதிகளுக்கு நண்பர்கள் என்பவர்களாதலின், யூதர்களுக்கு உதவிசெய்ய ஒருவன் வந்துள்ளான் என்ற செய்தியே அவர்களை நிலைகுலையச்செய்தது. அதுமுதற்கொண்டே சன்பல்லாத்தும், தொபியாவும் நெகேமியாவிற்கு அடிக்கடி தொல்லைகள் கொடுக்கத்தலைப்பட்டனர்.

இன்றைக்கு இந்த நிலைதான் நிலவுகிறது. உலக அரங்கில் யூதர்களுக்குப் பற்பல விரோதிகள் எழும்பியுள்ளனர். அவர்களைப் பலவிதங்களிலும் விரோதிகள் நெருக்கி வருகிறார்கள். இங்கே சன்பல்லாத்தும், தொபியாவும் நெகேமியாவினால் நேரடியாக எந்தவித தொல்லைக்கும் ஆளாக்கப்படவில்லை. அவர்களுடைய பதவிகளையோ அல்லது அவர்களுடைய நண்பர்களின் பதவிகளையோ பாதிக்கும் விதத்தில் நெகேமியா யாதும் செய்யவில்லை. ஆனால் யூதர்களுக்கு உதவி செய்ய வந்துள்ளான் என்ற செய்தியே அவர்களுக்கு வேதனையளிப்பதாக உள்ளது.

வசனம் 2:11-12

நான் எருசலேமுக்கு வந்து, அங்கே மூன்றுநாள் இருந்தபின்பு, நான் சில மனுஷரைக் கூட்டிக்கொண்டு, ராத்திரியில் எழுந்து நகரசோதனை செய்தேன். ஆனாலும் எருசலேமுக்காகச் செய்யும்படி என் தேவன் என் மனதிலே வைத்ததை நான் ஒருவருக்கும் அறிவிக்கவில்லை. நான் ஏறிப்போன மிருகமேயல்லாமல் வேறொரு மிருகமும் என்னோடிருந்ததில்லை.

நெகேமியா அமைதலுடன் தங்கியிருந்தான். அவர்கள் எரிச்சல் அடைந்துள்ளனர் என்ற செய்தி அவனைச் சிறிதும் கலங்கடிக்கவில்லை. முதன் முதலில் அவன் மூன்று நாள் காத்திருந்தான். அவன் கர்த்தரிடத்தில் பெற்ற அழைப்பின் கட்டளையை யாரிடமும் கூறவில்லை. அவனே அதைச் செய்ய ஆரம்பிக்கவேண்டுமென்று முதலில் விரும்பினான். பெறப்படக்கூடிய அனைத்து உதவிகளையும், தெரிந்துகொள்ளவேண்டிய அனைத்து செய்திகளையும், தங்கு தடையின்றிப் பெறவேண்டும் என்பது அவனுக்கு நன்கு தெரியும். ஆகையால் ஒரு மிருகத்தின்மீது எறிக்கொண்டு சில மனுஷரைக் கூட்டிக்கொண்டு இராத்திரியில் எழுந்து நகர சோதனை செய்து எருசலேமின் வாசல்களையும் இடிந்துபோன அலங்கங்களையும் பார்வையிட்டுக் கவனித்தான்.

வசனம் 2:13-15

நான் அன்று ராத்திரி பள்ளத்தாக்கின் வாசல்வழியாய்ப் புறப்பட்டு, வலுசர்ப்பத் துரவைக் கடந்து, குப்பைமேட்டு வாசலுக்கு வந்து, எருசலேமில் இடிந்துபோன அலங்கத்தையும், அக்கினியால் சுட்டெரிக்கப்பட்ட அதின் வாசல்களையும் பார்வையிட்டேன். அவ்விடத்தை விட்டு ஊருணி வாசலண்டைக்கு, ராஜாவின் குளத்தண்டைக்கும் போனேன். நான் ஏறியிருந்த மிருகம் அங்கே நடந்துபோகிறதற்கு வழியில்லாதிருந்தது. அன்று ராத்திரியிலேயே நான் அற்றோரமாய்ப் போய், அலங்கத்தைப் பார்வையிட்டுத் திரும்பி, பள்ளத்தாக்கின் வாசல்வழியாய் வந்துவிட்டேன்.

நெகேமியாவும் அவனுடன் சில உதவியாளர்களான நண்பர்களும் தங்கள் வாகனங்களாகிய மிருகங்களின்மேல் ஏறிக்கொண்டு, குப்பை குவியல்கள் மீது மெல்ல கடந்து வாசல்களைத் தாண்டி நகரத்தைச் சுற்றி வந்தனர். ஓரிடத்தில் அவன் ஏறி வந்த மிருகம் கடந்து செல்லக்கூட வழியில்லாதிருந்தது. அங்கே நெகேமியா காலால் நடந்து அலங்கங்களைப் பார்வையிட்டான். சென்ற சில ஆண்டுகளிலே நடந்த போர்களின் விளைவாக அலங்கங்கள் இடிபட்டு போயிருந்த அவலநிலை நெகேமியாவின் மனதை மிகவும் உறுத்தியிருக்கக்கூடும். இடிந்துபோன அலங்கங்களைப்பற்றியும் இதர பாழ்க்கடிப்புக்களைப் பற்றியும் யாதொரு முனனேற்ற முயற்சியும் செய்யப்படாமையால், அந்த நகரம் பாதுகாப்பற்ற நிலையில் இருந்தது. இத்தகைய சீர்கெட்ட அவல நிலைமையைப்பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கக் கூடும். ஆனால் நேரில் பார்ப்பது மிகவும் கடுமையான மனவெழுச்சியை உண்டாக்கவல்லது.

வசனம் 2:16-17

நான் போனதும், நான் செய்ததும் அதிகாரிகள் ஒருவருக்கும் தெரியாது. அதுவரையிலும் நான் யூதருக்காகிலும், ஆசாரியர்கள் பெரியவர்கள் அதிகாரிகளுக்காகிலும், வேலைசெய்கிற மற்றவர்களுக்காகிலும் ஒன்றும் அறிவிக்கவில்லை. பின்பு நான் அவர்களை நோக்கி: எருசலேம் பாழாயிருக்கிறதையும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்கிறதையும், நாம் இருக்கிற சிறுமையையும் பார்க்கிறீர்களே. நாம் இனி நிந்தைக்குள்ளாகாதபடிக்கு, எருசலேமின் அலங்கத்தைக் கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி,

இதனையெல்லாம் பார்த்துப் பின்பு அவர்கள் செய்யவேண்டிய வேலை எவ்வளவு பெரியதென்பதை அவன் உணர்ந்தான். ஆனால் மனச்சோர்வினாலோ, முடியாமையினாலோ அவன் அந்த வேலையைத் தள்ளிப்போட நினைக்கவில்லை. யூதர்களை ஒரு கூட்டமாகக்கூட்டித் தனது திட்டத்தைக் கூற முற்பட்டான். அவர்களோடு பேசும்போது நான் என்று ஆரம்பிக்கவோ, அல்லது அவர்களைக் கடிந்துகொள்ளவோ, அல்லது அவர்களை அந்த வேலையைச் செய்யுங்கள் என்று ஆலோசனை கூறவோ இல்லை. ஆனால் அன்று இருந்த எருசலேமின் நிலையைமட்டும் கூறி விளக்க ஆரம்பித்தான். எருசலேம் பாழாய்க் கிடக்கிறதைப் பார்க்கிறீர்களே என்று ஆரம்பித்தவன், மேலும் அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்கிறதையும் பாருங்கள் என்று கூறியபின், எருசலேமின் அலங்கத்தைக் கட்டுவோம், வாருங்கள் என்று தனது வழக்கமான பாணியிலேயே, அழைப்பு விடுவித்தான். தேவனாகிய கர்த்தரின் அனைத்துப் பணிகளிலேயும், உதவிடமுன் வருபவர்களின் வழக்கமான அறைகூவலே இது. கட்டுவோம் வாருங்கள் பெரிய இழப்புகள் நமக்குண்டு. பெரிய பின்னடைவுகள் நமக்குண்டு. துயரம் நம்மைச் சூழ்ந்திருக்கிறது. இருந்தபோதிலும் நாம், ஊக்கத்துடன் எழுந்திருந்து, வேலையில் அமர்ந்து கட்டக்கடவோம். சேர்ந்து கட்டக்கடவோம் என்றான் அவன். மேலும் அவன் ஒரு நல்ல காரணத்தைக் கூறுகிறான். நாம் இனி நிந்தைக்குள்ளாயிராதபடிக்கு..... என்று காரணம் காட்டும் நெகேமியா அவர்களை அழைக்கிறான். பல ஆண்டுகளாக அவர்களின் அவலநிலையைக் கண்டு இழிவாகவும், எரிச்சலாகவும், இதர நாட்டினர் யூதர்களைப் புறக்கணித்து வந்தனர். இப்போது கட்டப்படவேண்டிய நேரம் நெருங்கி வந்ததை அவர்கள் நன்குணர்ந்து கொண்டனர்.

வசனம் 2:18

என் தேவனுடைய கரம் என்மேல் நன்மையாக இருக்கிறதையும், ராஜா என்னோடே சொன்ன வார்த்தைகளையும் அவர்களுக்கு அறிவித்தேன். அப்பொழுது அவர்கள்: எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி, அந்த நல்ல வேலைக்குத் தங்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள்.

பின்பு நெகேமியா, தேவ அழைப்பின் வல்லமையை ஜனங்களுக்கு விளக்கினான். என் தேவனுடைய கரம் என்மேல் நன்மையாய் இருக்கிறதை இராஜா என்னோடே சொன்ன வார்த்தைகளையும் என்கிற செய்திகளை நெகேமியா ஜனங்களுக்குச் சொன்னான். இராஜா அவனுக்களித்த பொருள்கள், உதவியாட்கள் பற்றியும் கூறினான். இவைகளை அவர்கள் கேள்விப்பட்டவுடனே அந்த நல்ல வேலைக்குத் தங்கள் கைகளைத் திடப்படுத்தி, எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று ஆர்ப்பரித்தார்கள். சிலவேளைகளில் நாம் காண்கிறபடி ஒரு தனியாளின் உற்சாகத்தினால் ஒரு பெரிய வேலை தொடர்ந்து முடிக்கப்படுகிறது. இந்த நல்ல வேலைக்காக அவர்கள் தங்கள் கரங்களை வலுப்படுத்திக் கொண்டனர். நாமும் நம் வேலைகளுக்காக ஒருவர் மற்றவர்களின் கரங்களை வலுப்படுத்துவது எவ்வளவு நலமாயிருக்கும். தளர்ந்த கைகளைத் திடப்படுத்துங்கள்... (ஏசா.35:3, எபி.12:12).

வசனம் 2:19-20

ஓரோனியனான சன்பல்லாத்தும் அம்மோனியனான தொபியா என்னும் ஊழியக்காரனும், அரபியனான கேஷேமும் இதைக் கேட்டபோது, எங்களைப் பரியாசம்பண்ணி, எங்களை நிந்தித்து: நீங்கள் செய்கிற இந்தக் காரியம் என்ன? நீங்கள் ராஜாவுக்கு விரோதமாகக் கலகம்பண்ணப்போகிறீர்களோ என்றார்கள். அதற்கு நான் மறுமொழியாக: பரலோகத்தின் தேவனானவர் எங்களுக்குக் காரியத்தைக் கைகூடிவரப்பண்ணுவார். அவருடைய ஊழியக்காரராகிய நாங்கள் எழுந்து கட்டுவோம். உங்களுக்கோவென்றால் எருசலேமிலே பங்குமில்லை பாத்தியமுமில்லை. உங்கள் பேர் விளங்க ஒன்றும் இல்லையென்று அவர்களுடனே சொன்னேன்.

ஆனால் வேலை துவங்கப்படும் தருவாயில் தொல்லைகள் உருவெடுக்க ஆரம்பித்தன. சன்பல்லாத்தும், தொபியாவும், அவர்களோடு மற்றொருவனாகிய அரபியனான கெஷேமும், நெகேமியாவின் திட்டங்களைப் பற்றிக் கேள்விப்பட்டனர். முன்பு அவர்கள் இதே காரணங்களுக்காக அலைக்கழிக்கப்பட்டனர் எனக் கண்டோம். இப்போதோ அவர்கள் செயல்படத் துவங்கினர். முதலில் அவர்கள் பரிகாசம்பண்ணத் துவங்கினர். பிறகு அவர்கள் நிந்தித்து, நீங்கள் செய்கிற காரியம் என்ன? நீங்கள் இராஜாவுக்கு விரோதமாகக் கலகம் பண்ணப்போகிறீர்களோ? என்று அதட்டிப் பேசினர். இராஜா நெகேமியாவுடன் ஒரு பாதுகாப்புப் படையையே அனுப்பியிருந்த நிலையில் இது தேவையற்ற அற்பத்தனமான கேள்வியாகும்.

ஆனால் அவர்களின் பரிகாசச் சிரிப்பு வேதனையளிப்பதாயிருந்தது. ஒருவனுடைய கோபத்தையும், மற்ற வகைக் கடுமைகளையும் நாம் தாங்கிக் கொள்வது ஒருவேளை எளிதாக இருக்கலாம். ஆனால் பரிகாசம் என்பது எரிச்சலையும் கோபத்தையும் உண்டாக்கக் கூடியதன்றோ! அம் மூவரும் யூதர்களைப் பரியாசம் பண்ணினார்கள். அலங்கங்கள் கட்டப்படுவதென்பது சன்பல்லாத்துக்கும் தொபியாவிற்கும் கோபத்தை உண்டாக்கியதேனோ? தேவனுடைய மனுஷரையும், யூதர்களையும் தாக்குவதற்கென்று செலவிடப்பட்டதான பெரிய பணத்தொகைகளையும், சக்தி முயற்சிகளையும், வரலாற்று வழியாக நாம் பார்க்கும்போது வியப்படையத்தான் செய்கிறோம். ஆனால் தேவனின் விரோதிகள் இத்தகைய தாக்குதல்களைச் செய்ய மிகத் தீவிரமாக இருந்தனர். அவர்களுடைய தீய முயற்சிகள் இருந்துவிட்டுப் போகட்டுமே. பிசாசானவன் நமது சகோதரர்களின் பகைஞன் என்று வேதம் கூறுகிறது. நம்முடைய சகோதரர்மேல் இரவும் பகலும் குற்றம் சுமத்தும் பொருட்டு, என்று சாத்தனைப்பற்றி வெளி 12:10ல் வாசிக்கிறோம். சாத்தான் எப்போதும் அமைதியாக இருக்கமாட்டான். அவன் எதையும்

விட்டுக்கொடுக்க மாட்டான். கர்த்தருக்கு ஸ்தோத்திரம், சாத்தானின் நாட்கள் குறைவானது.

நெகேமியா தன்னை எதிர்க்கிறவர்களைக் கர்த்தராகிய தேவனை முன்வைத்துச் சந்திக்கிறான். இராஜாவைப்பற்றி அவன் ஏதும் கூறவில்லை. பரலோகத்தின் தேவனானவர் எங்களுக்குக் காரியத்தைக் கைகூடிவரப் பண்ணுவார் என்கிறான் நெகேமியா. பவுலும் ஒருமுறை தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? என்று கூறுகிறான் (ரோ.8:31). நெகேமியா மேலும் அவருடைய (தேவனுடைய) ஊழியக்காரராகிய நாங்கள் எழுந்து கட்டுவோம் என்று கூறுகிறான். நெகேமியா, நாங்கள் கட்டாயம் கட்டுவோம் என்கிற உண்மையை அவர்களுக்குத் தெளிவுபட விளக்குகிறான். யூதர்களின் கர்த்தராகிய தேவன்தாம் அவனை அப்பணிக்கு அனுப்பியது குறித்து மிகவும் பெருமைப்பட்டான். சன்பல்லாத்தும், தொபியாவும் எந்த விதத்திலும் அப்பணியில் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. எந்தவிதமான முன்உரிமையும் சுதந்திரமும் அவர்களுக்கு இல்லை. அவர்கள் தேவனாகிய கர்த்தருடைய ஊழியக்காரர்களும் அல்லர்.

# 03. ஜனங்கள் அலங்கங்களைக் கட்டுதல்

அதிகாரம் 3

ஜனங்கள் அலங்கங்களைக் கட்டுதல்

வசனம் 3:1

அப்பொழுது பிரதான ஆசாரியனாகிய எலியாசீபும், அவன் சகோதரராகிய ஆசாரியர்களும் எழுந்து, ஆட்டுவாசலைக் கட்டினார்கள். அதைக் கட்டி, அவர்கள் பிரதிஷ்டைபண்ணி, அதின் கதவுகளை வைத்து, மேயா என்கிற கொம்மைமுதல் அனானெயேலின் கொம்மைமட்டும் கட்டிப் பிரதிஷ்டைபண்ணினார்கள்.

இந்த அதிகாரத்தின் செய்திகள் மற்ற அதிகாரங்களைவிட வேறுபட்டிருக்கிறதைக் காண்கிறோம். வாசல்களையும், அலங்கங்களையும் கட்டுகிறவர்களின் வரலாற்றுப் பட்டியலை இதில் காண்கிறோம். சிலர் குடும்பத்தினராகவும், சிலர் குறிப்பிட்ட தொழிலாளராகவும், சிலர் நகரத்தினராகவும் உள்ள வெவ்வேறு வகைப்பட்ட குழுவினரைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. குழு முயற்சிகள் எவ்வாறு செயல்படமுடியும் என்பதை இது காட்டுகிறது. ஒவ்வொருவரும் உழைக்க உதவுகின்றனர்.

ஆசாரியர்களின் குழுபற்றி முதலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக உள்ளனர். எலியாசீயும் அவன் சகோதரராகிய ஆசாரியர்களும் எழுந்து ஆட்டு வாசலைக் கட்டினார்கள். தங்கள் பணியை, அந்த வாசலைப் பிரதிஷ்டை செய்தபின் ஆரம்பிக்கின்றனர். தங்களுடைய பணிகளிலே தேவனுடைய ஆசீர்வாதம் இருக்கத்தக்கதாய், ஜெபத்தோடு தங்கள் பணியைத் துவங்க ஆரம்பிக்கின்றனர். ஆகையால் முதல் பணி முடிந்தவுடன் அதனைத் தேவனுக்கு பிரதிஷ்டை செய்கிறார்கள். நாம் நமது காரியங்களைத் தேவனுக்குப் பிரதிஷ்டை செய்கிறோமா?

தங்கள் பணியைத் துவங்குவதற்கு ஆட்டுவாசல், ஆசாரியர்களுக்கு மிகவும் ஏற்றதென காணப்பட்டது போலும். அந்த வாசல் வழியாகத்தான் ஆசாரியர்களால்

பலியிடப்படுவதற்கு ஆடுகள் நகரத்திற்குள் கொண்டுபோகப்பட்டன. அது மக்களுக்காகச் செலுத்தப்பட்ட பலி. ஆடு என்பது கர்த்தராகிய இயேசுவுக்கு முன்னறிவிப்பான ஓர் அடையாளம். அவர் தேவ ஆட்டுக்குட்டியன்றோ! அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும் தன்னை மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார் (ஏசா.53:7). அவர்கள் ஆட்டுவாசலிலே முதற் பணியைத் துவங்கினார்கள். ஆட்டுக்குட்டியின் பலி முதலில் வரவேண்டுமன்றோ!

அதன்பிறகு ஆசாரியர்கள் அந்த வாசலின் கதவுகளைப் பொருத்தினார்கள். அங்கிருந்து மேயா என்கிற கொம்மைக்குச் சென்று அதைக் கட்டி முடித்துப் பிரதிஷ்டை செய்தனர். அடுத்து அனானெயேலின் கொம்மைக்குச் சென்று அதைக்கட்டி பிரதிஷ்டை செய்தார்கள் (கொம்மை என்பது கோபுரமான ஒரு கட்டடம்).

வசனம் 3:2

அவன் அருகே எரிகோவின் மனுஷர் கட்டினார்கள். அவர்கள் அருகே இம்ரியின் குமாரனாகிய சக்கூர் கட்டினான்.

ஆசாரியர்கள் கட்டத் துவங்கி வேலைசெய்துகொண்டிருந்தபோது அவர்களின் அருகே எரிகோவின் மனுஷர் கட்டிக்கொண்டிருந்தனர். எரிகோ பட்டணம் ஒரு சபிக்கப்பட்ட பட்டணம் ஆகும் (யோசு.6:26, 1.இராஜா.16:34). ஆனால் அந்த சபிக்கப்பட்ட நகரமாகிய எரிகோவின் மக்கள், எருசலேமின் அலங்கங்களைக் கட்ட உதவிசெய்தனர். கர்த்தர் சாபத்தின் முடிவுகளைக்கூட ஆசீர்வாதங்களாக மாற்ற வல்லவராய் இருக்கிறார். கிறிஸ்து..... சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார். (கலா.3:13). ஆகையால் இவர்கள் சாபத்தின் பட்டணத்தை விட்டு ஆசீர்வாதத்தின் பட்டணத்தைக் கட்டவந்தனர். அதற்கு அப்பால் சக்கூர் என்ற தனி மனிதன் அலங்கத்தைக் கட்டும் பணியைச் செய்வதைக் காண்கிறோம். கர்த்தர் நம்மைக் கூட்டமாகவோ அல்லது தனிமையாகவோ பயன்படுத்த வல்லவராய் இருக்கிறார். சக்கூர் என்ன வேலைசெய்து கொண்டிருந்தான் என்று வேதம் நமக்குக் கூறவில்லை. ஆனால் அது கர்த்தருக்குத் தெரியும். கர்த்தருடைய வேதத்தில் அவன் பெயர் குறிக்கப்பட கர்த்தர் கிருபை செய்துள்ளார்.

கூட்டமாகவோ அல்லது தனியாகவோ அவர்கள் வேலைசெய்தனர். ஒருவர் மற்றவரின் வேலையில் தலையிடவில்லை. அல்லது பிறர்வேலையைக் குற்றப்படுத்தவில்லை, அல்லது பொறாமைப்படவுமில்லை. அவரவர் வேலையில் கடுமையாக உழைத்தனர். அது வியத்தகு ஒற்றுமையான பணியாகும்.

வசனம் 3:3

மீன்வாசல் அசெனாவின் குமாரர் கட்டினார்கள். அதற்கு உத்தரம்பாவி, அதற்குக் கதவுகளையும் பூட்டுகளையும் தாழ்பாள்களையும் போட்டார்கள்.

அடுத்து மீன்வாசலை அசெனாவின் குமாரர் கட்டினார்கள். அதன் உத்திரங்கள் நிலைநிறுத்தி கதவுகளை மாட்டி அதன் தாழ்ப்பாள்களையும் பூட்டுகளையும் போட்டார்கள்.

வசனம் 3:4

அவர்கள் அருகே கோசின் குமாரனாகிய உரியாவின் மகன் மெரேமோத் பழுதுபார்த்துக் கட்டினான். அவர்கள் அருகே மெஷேசாபெயேலின் குமாரனாகிய பெரகியாவின் மகன் மெசுல்லாம் பழுதுபார்த்துக் கட்டினான்.

அடுத்து பழுது பார்த்துக்கட்டிய மூன்றுபேரைப் பற்றி வேதம் கூறுகிறது. 1.கொரிந்தியர் 12:28ல் தேவனுடைய சபையில் உள்ள வெவ்வேறான ஊழியங்களைச் செய்கிறவர்களைக் குறிப்பிட்டு அப்போஸ்தலர், தீர்க்கதரசிகள் முதலியவர்கள்

உள்ளது விளக்கப்பட்டு இருக்கையில் ஊழியம் என்ற ஒரு சிறுவார்த்தை பயன்படுத்தப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். நாம் ஒருவேளை அப்போஸ்தலராகவோ, தீர்க்கதரிசிகளாகவோ, அல்லது போதகர்களாகவோ இல்லாமல் போகலாம். ஆனால் உதவியாளர்களாக நிச்சயமாகப் பணியாற்ற முடியும். இங்கே இருந்த பலரும்கூட இடிந்துபோன அலங்கங்களைக்கட்ட மிகவும் உதவினார்கள். நீங்கள்கூட சிதைந்துபோன வாழ்க்கையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் ஒருவருக்கு ஓர் உதவி செய்யக்கூடும் அல்லது உமது சபையில் தேவஆலயத்தில் ஒரு வேலையில் உதவி செய்யமுடியும். தேவன் உனக்குத் தந்த வரங்களின்படி நீ ஏதாவது நல்லது ஒன்றைச் செய்ய முடிந்தால் அதைத் தவறாமல் செய்வாயாக.

வசனம் 3:5

அவர்கள் அருகே தெக்கோவா ஊரார் பழுதுபார்த்துக் கட்டினார்கள். அவர்களுடைய பிரபுக்களோ, தங்கள் ஆண்டவருடைய வேலைக்குத் தங்கள் கழுத்தைக் கொடுக்கவில்லை.

அந்த வேலையைச் செய்து வந்தவர்களிடையே இங்கு முதன் முறையாக ஒத்துழையாமையைக் காண்கிறோம். அதன் அருகே தெக்கோவா ஊரார் பழுதுபார்த்துக் கட்டிக்கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களின் பிரபுக்கள் வேலைக்குத் தோள் கொடுக்கவில்லை. அல்லது அந்த வேலையில் தங்கள் பணியின் ஒத்துழைப்பையும்கூடத் தரவில்லை. ஒருவேளை அவர்கள் பிரபுக்கள் என்ற நிலையில் அந்த வேலை இழிவானது என எண்ணியிருக்கலாம். முன்மாதிரியாய் இருக்கவேண்டியவர்களே, வேலையில் தேக்கம் காட்டுதல் எவ்வளவு விசனமான காரியம். அது தேவனுக்கடுத்த திருப்பணி. நமது பங்கு ஏதுவாயிருந்தால் என்ன? நகமான் எலிசாவின் உத்தரவிற்குக் கீழ்ப்படிய விரும்பாமல் போனபோது, அவனுடைய ஊழியக்காரர் அவனைக் கடிந்து, அந்தத் தீர்க்கதரிசி ஒரு பெரிய காரியத்தைச் செய்ய உமக்குச் சொல்லியிருந்தால் அதை நீர் செய்வீர் அல்லவா...? (2.இராஜா.5:13) என்று கேட்டதும், நாகமான் கவனித்துத் தன்னைத் தாழ்த்திச் செயல்பட்டு குஷ்டரோகம் நீங்கப்பெற்றதை நாம் வேதத்தில் வாசிக்கிறோம். அதுபோல் ஒருவேளை அந்தப் பிரபுக்கள் செய்வதற்காக வேறு பெரிய வேலை ஏதாகிலும் ஒப்படைக்கப்பட்டிருந்தால், மகிழ்ச்சியோடு அதனைச் செய்ய ஒப்புக் கொண்டிருப்பாரன்றோ? ஆனால் இங்கே அவர்கள் மற்றவரைப்போலவும் சாதாரணமான வேலை, இடிந்துபோன அலங்கங்களைக் கட்டும்வேலையை அவர்கள் செய்யவேண்டியிருந்தது.

வசனம் 3:6

பழைய வாசலைப் பசெயாகின் குமாரனாகிய யோய்தாவும், பேசோதியாவின் குமாரனாகிய மெசுல்லாமும் பழுதுபார்த்துக் கட்டினார்கள். அவர்கள் அதற்கு உத்தரம்பாவி, அதற்குக் கதவுகளையும் பூட்டுகளையும் தாழ்பாள்களையும் போட்டார்கள்.

அடுத்துக் கூறப்பட்டுள்ள வாசல் பழைய வாசல். அந்த வாசலில் உத்தரம் பாவுதல், கதவுகள் மாட்டுதல், தாழ்ப்பாள் பூட்டு அமைத்தல் ஆகிய பணிகளைச் செய்யும் இரண்டுபேர் இங்கு குறிக்கப்பட்டுள்ளனர். ஒருவருக்கொருவர் உதவி செய்யும்நிலை நன்றி பாராட்டலுக்குரியது. அந்த இருவரும் சேர்ந்து ஒரு வாசலைக் கட்டி அமைத்தனர்.

வசனம்3:7

அவர்கள் அருகே கிபியோன் மிஸ்பா ஊர்களின் மனுஷரான மெலதீயா என்னும் கிபியோனியனும், யாதோன் என்னும் மெரொனோத்தியனும், நதிக்கு இப்புறத்திலிருக்கிற அதிபதியின் சமஸ்தானமட்டும் பழுதுபார்த்துக் கட்டினார்கள்.

மறுபடியும், வேற்று நகரத்தார் இங்கு வந்து பணியில் துணை நிற்பதைக் காண்கிறோம். எருசலேமின் அலங்கங்கள் எல்லா யூதர்களுக்கும் மிக முக்கியமானது என்ற அளவில் அதனைக் கட்டும் பணியில் அனைவரும் ஒத்துழைத்தனர்.

வசனம் 3:8

அவர்கள் அருகே தட்டாரில் ஒருவனாகிய அராயாவின் குமாரன் ஊசியேல் பழுதுபார்த்துக் கட்டினான். அவன் அருகே தைலக்காரரில் ஒருவன் குமாரனாகிய அனனியா பழுதுபார்த்துக் கட்டினான். அதுமுதற்கொண்டு அகலமான மதில்மட்டும் எருசலேம் இடிக்கப்படாமல் விட்டிருந்தது.

இங்கு இரு ஒவ்வா நண்பர்கள் அலங்கத்துப் பணிகளைச் செய்வதை நாம் காண்கிறோம். ஒருவன் தட்டான் என்ற பொற்கொல்லன். மற்றவன் தைலக்காரன். அவர்கள் தங்கள் சொந்த அலுவல்களிலே மிகவும் நுட்பமான வேலைகளை மட்டும் செய்பவர்கள். இங்கே கடுமையான உழைப்புப் பணியை மேற்கொள்கிறார்கள். சாக்குப் போக்குகள் ஏதும் சொல்லாமல், கட்டும் பணியைச் செய்கின்றனர். அகலமான மதில் மட்டும் அவர்கள் பழுதுபார்த்துக் கட்டினார்கள்.

வசனம் 3:9

அவர்கள் அருகே எருசலேம்பட்டணத்தின் பாதிக்குப் பிரபுவாகிய ஊரின் குமாரன் ரெப்பாயா பழுதுபார்த்துக் கட்டினான்.

இங்கே எருசலேம் பட்டணத்தின் பாதிக்குப் பிரபுவாகிய ஒருவன் மற்றவர்களுடன் சேர்ந்து வேலைசெய்வதை நாம் வாசிக்கிறோம். தனது கையினால் வேலைசெய்து பழுது பார்க்கும் பணியைச் செய்வது அவனுடைய மதிப்பிற்கு இழிவானது என அவன் கருதவில்லை. இத்தகைய நிலையிலும் உழைப்பவர்களைக் காணும்போது எத்துணை உற்சாகம் நமக்கு எற்படுகிறது.

வசனம் 3:10

அவர்கள் அருகே அருமாப்பின் குமாரன் யெதாயா தன் வீட்டுக்கு எதிரானதைப் பழுதுபார்த்துக் கட்டினான். அவன் அருகே ஆசாப்நெயாவின் குமாரன் அத்தூஸ் பழுதுபார்த்துக் கட்டினான்.

அடுத்து நாம் காணும் யெதாயா வீட்டிற்கே சாட்சியாக இருக்கிறான். அவன் தனது சொந்த வீட்டின் எதிரிலேயே அலங்கங்களைப் பழுது பார்த்துக் கட்டுகிறான். தேவனுடைய வேலையைச் செய்ய இதுவே மிகவும் கடினமான சூழ்நிலை. நமது வீட்டாரின் கண்முன் மற்றும் அயலகத்தாரின் கண்முன், ஆனால் யெதாயா அதைத்தான் செய்தான். எல்லாரும் பார்க்கும்படி அவர்களின் கண்முன்னே செய்தான். யெதாயா என்னும் வார்த்தைக்கு யெகோவாவைத் துதியுங்கள் என்பது பொருள். அவன் தனது தியாகப்பணியின் மூலம் அதைத்தான் செய்தான். அடுத்துக் கூறப்பட்டுள்ள மூவர் சூளைகளின் கொம்மைகள் வரை பழுது பார்த்துக் காட்டினார்கள்.

வசனம் 3:12

அவன் அருகே எருசலேம் பட்டணத்தின் மறுபாதிக்குப் பிரபுவாகிய அலோகேசின் குமாரன் சல்லூமும், அவன் குமாரத்திகளும் பழுதுபார்த்துக் கட்டினார்கள்.

இவ் வசனம் ஒரு மகிழ்ச்சியான செய்தியைத் தருகிறது. ஒரு பிரபு சல்லூம் தனது குமாரத்திகளுடன் சேர்ந்து பழுது பார்த்தக் கட்டுகிறான். இந்தச் சல்லூம் எருசலேமின் மறுபாதிக்கு பிரபுவானவன். அது மிகவும் கடினமான உழைப்பு. அவனுடைய குமாரத்திகள் என்ன வேலையைச் செய்ய முடிந்தது என்பது வேதத்தில் கூறப்படவில்லை. ஆனால் அவர்கள் தந்தையோடு சேர்ந்து அந்தக் கடுமையான வேலையில் பங்குகொண்டனர்.

இதுபோன்ற உழைத்த பல பெண்களைப்பற்றி வேதம் நமக்குக் கூறுகிறது. ரெபேக்கா அந்த நகரத்து மனிதர்களின் குமாரத்திகளில் ஒருத்தி தண்ணீர் எடுக்க குடத்தை தோளின்மேல் வைத்துக்கொண்டு வந்தாள். அந்நியனுக்கும் அவனுடைய ஒட்டகங்களுக்கும் தண்ணீர்மொண்டு வார்த்தாள் (ஆதி.24:13-20). ராகேல் தனது தகப்பனுடைய ஆட்களை மேய்த்துக்கொண்டிருந்தாள் (ஆதி.29:9). ரூத் தனது மாமி நகோமிக்காக நாள் முழுவதும் வயல்களிலே கதிர் பொறுக்கினாள். (ரூத் 5:17). பவுல் அப்போஸ்தலனும் சுவிசேஷ ஊழியத்தில் தனக்கு உதவிசெய்த பெண்களைப்பற்றிக் குறிப்பிடுகிறான் (பிலி.4:3). தேவனுடைய களத்திலே எல்லாருக்கும் பணிகளில் சமபங்கு உண்டு.

வசனம் 3:13-14

பள்ளத்தாக்கின் வாசலை ஆனூனும், சானோவாகின் குடிகளும் பழுதுபார்த்துக் கட்டினார்கள். அவர்கள் அதைக் கட்டி, அதற்குத் கதவுகளையும் பூட்டுகளையும் தாழ்ப்பாள்களையும் போட்டு, குப்பைமேட்டு வாசல்மட்டாக அலங்கத்தில் ஆயிரம் முழம் கட்டினார்கள். குப்பைமேட்டு வாசலைப் பெத்கேரேமின் மாகாணத்துப் பிரபுவாகிய ரெக்காவின் குமாரன் மல்கியா பழுதுபார்த்து, அதைக் கட்டி, அதற்குக் கதவுகளையும் பூட்டுகளையும் தாழ்பாள்களையும் போட்டான்.

அடுத்துப் பள்ளத்தாக்கின் வாசல். இங்கிருந்துதான் நெகேமியா முதன் முதலில், இரவு வேளைகளில் நகரின் இடிந்துபோன நிலைகளைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டான். சானோவாகின் குடிகளும், ஆனூனும் இந்தப் பள்ளத்தாக்கு வாசலையும் அங்கிருந்து குப்பை மேட்டு வாசல் மட்டாக 1000 முழந்தூரம் உள்ள அலங்கத்தையும் கட்டினார்கள். இப்போதும் குப்பை மேட்டு வாசலைக்கட்டுவது யார்? நகரத்தின் குப்பைகள், நாள்தோறும் இந்த வாசல் வழியாகத்தான் வெளியே கொண்டுபோய் எறியப்படும். குப்பை மேட்டு வாசலை ரெக்காவின் குமாரன் மல்கியா பழுதுபார்த்துக் கட்டினான். அவன் ஒரு மகாணத்துப் பிரபுவாயிருந்தும் அந்த இழிவான இடத்தில் தேவனுடைய பணிக்காகத் தன்னைத் தாழ்த்தி ஒப்புவித்து, அப்பணியைச் செய்துமுடித்தான். அவனன்றோ ஓர் உண்மையான தலைவன்.

வசனம் 3:15

ஊரணிவாசலை மிஸ்பாவின் மாகாணத்துப் பிரபுவாகிய கொல்லோசேயின் குமாரன் சல்லூம் பழுதுபார்த்து, அதைக் கட்டி, மச்சுப்பாவி, அதற்குக் கதவுகளையும் பூட்டுகளையும் தாழ்பாள்களையும் போட்டு, ராஜாவின் சிங்காரத் தோட்டத்தண்டையிலிருக்கிற சீலோவின் குளத்து மதிலையும், தாவீதின் நகரத்திலிருந்து இறங்குகிற படிகள்மட்டாக இருக்கிறதையும் கட்டினான்.

2ம் அதிகாரம் 14ம் வசனத்திலே ஊரணி வாசல் அண்டையிலே நான் ஏறி இருந்த மிருகம் கடந்து போகிறதற்கு வழியில்லாதிருந்தது என்று வாசிக்கிறோம். நெகேமியா நடந்து செல்ல வேண்டியிருந்தது. அங்கே சீர்திருத்தப்பட வேண்டிய வேலை அதிகமாய் இருந்தது எனலாம். மிஸ்பாவின் மகாணத்துப் பிரபு சல்லூம் என்பவன் இதைப் பழுதுபார்த்துக் கட்டினான். ஜீவனுள்ள தண்ணீர்களின் ஊற்றாகிய கர்த்தர் (எரேமி.17:3).

இத்தகைய ஜீவனுள்ள ஆதாரமான ஊற்றுக்கள் அடைப்பட்டுப்போனால் நாம் அதிக தொல்லைகளுக்கு உட்பட வேண்டியிருக்கும். சல்லூம் அதனைப் பழுதுபார்த்துக் கட்டி, மச்சுப்பாவி அதற்குக் கதவுகளையும், பூட்டுகளையுமத் தாழ்ப்பாள்களையும் போட்டு முடித்தான். அதன் பின்னர் அவன் மேலும் சென்று இராஜாவின் சிங்காரத் தோட்டத்தண்டையிலிருக்கிற சீலோவின் குளத்து மதிலையும் கட்டினான்.

வசனம் 3:16

அவனுக்குப் பின்னாகப் பெத்சூர் மகாணத்தின் பாதிக்குப் பிரபுவாகிய அஸ்பூகின் குமாரன் நெகேமியா தாவீதின் கல்லறைகளுக்கு எதிரான இடமட்டாகவும், வெட்டப்பட்ட

குளமட்டாகவும், பராக்கிரமசாலிகளின் வீடுமட்டாகவும் இருக்கிறதைப் பழுதுபார்த்துக் கட்டினான்.

இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கிற நெகேமியா பெத்சூர் மாகாணத்தின் பாதிக்குப் பிரபுவானவன் பானபத்திரக்காரனாக பாபிலோனில் இருந்து புறப்பட்டு வந்த நெகேமியா 1:11 விலிருந்து வேறுபட்டவன். இவன் பராக்கிரமசாலிகளின் வீடுமட்டாக இருக்கிறதைப் பழுது பார்த்துக் கட்டினான்.

வசனம் 3:17

அவனுக்குப் பின்னாக லேவியரில் பானியின் குமாரன் ரேகூமும், அவன் அருகே கேகிலா மாகாணத்தில் தன்னுடைய பாதிப்பங்குக்குப் பிரபுவாகிய அசபியாவும் பழுதுபார்த்துக் கட்டினார்கள்.

லேவியர்களும் ஆசாரியர்களைப்போலவே பணிசெய்து பிரதான ஆசாரியரின் வீட்டின் மறுபக்கத்தில் உள்ள மதிலைப் பழுதுபார்த்துக் கட்டினார்கள்.

வசனம் 3:18-20

அவனுக்குப் பின்னாக அவனுடைய சகோதரரில் கேகிலா மாகாணத்து மறுபாதிக்குப் பிரபுவாகிய எனாதாதின் குமாரன் பாபாயி பழுதுபார்த்துக் கட்டினான். அவன் அருகே மிஸ்பாவின் பிரபுவாகிய யெசுவாவின் குமாரன் ஏசர் என்பவன் மதிலின் கோடியிலே ஆயுதசாலையின் படிகளுக்கு எதிரேயிருக்கிற வேறொரு பங்கைப் பழுதுபார்த்துக் கட்டினான். அவனுக்குப் பின்னாகச் சாபாயின் குமாரன் பாரூக் அந்தக் கோடி துவக்கிப் பிரதான ஆசாரியனாகிய எலியாசீபின் வாசற்படிமட்டும் இருக்கிற பின்னொரு பங்கை வெகு ஜாக்கிரதையோடே பழுதுபார்த்துக் கட்டினான்.

அடுத்தடுத்துள்ள அலங்கங்கள் கட்டப்பட்டன. 29ம் வசனத்தில் பாரூக் என்பவன் பிரதான ஆசாரியனின் வீடு மட்டும் இருக்கிற பங்கை வெகு ஜாக்கிரதையாகக் கட்டினான் என்று வாசிக்கிறோம். தேவனுடைய பணியில் மிகவும் கவனத்துடன் வெகுஜாக்கிரதையாக வேலைசெய்தல் என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். நாம் செய்யும் வேலைகள் கடமையுணர்வுடன் வெகு ஜாக்கிரதையாகச் செய்யப்படுகின்றனவா?

வசனம் 3:23

அவர்களுக்குப் பின்னாகப் பென்ஜமீனும், அசூபும், தங்கள் வீட்டுக்கு எதிரே இருக்கிறதைப் பழுதுபார்த்துக் கட்டினார்கள். அவர்களுக்குப் பின்னாக அனனியாவின் குமாரனாகிய மாசேயாவின் மகன் அசரியா தன் வீட்டின் அருகே இருக்கிறதைப் பழுதுபார்த்துக் கட்டினான்.

இவ்வசனத்தில் தங்கள் வீட்டிற்கு எதிரே இருக்கிறதைப் பழுது பார்த்தக் கட்டினார்கள் என்று வாசிக்கிறோம். சகோதரனே, உனது வீட்டிற்கு எதிரே இருக்கிறவர்களிடம் நீ தேவனுடைய வார்த்தைகளைப்பற்றிப் பேசுவதுண்டா?

வசனம் 3:26

ஓபேலிலே குடியிருக்கிற நிதனீமியரைச் சேர்ந்த மனிதரும் கிழக்கேயிருக்கிற தண்ணீர் வாசலுக்கு வெளிப்புறமான கொம்மைக்கு எதிரேயிருக்கிற இடமட்டும் கட்டினார்கள்.

நீதனிமீயரைச் (கோயில் பணியாளர் வழிவந்தோர்) சேர்ந்த மனிதர்கள் தண்ணீர் வாசல்வரை கட்டினார்கள். இந்தத் தண்ணீர் வாசல் நீரூற்றிற்கு எதிரே கிழக்கு மதில்களில் நடுப்பகுதியண்டை உள்ளது. தண்ணீர் கடவுளுடைய வார்த்தைக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. (எபேசி.5:26, சங்.119:9). இந்தத் தண்ணீர் வாசல் மதில்கள் பழுதுபார்க்கப்படவில்லை என்ற செய்தி சற்று வியப்பாகவேயுள்ளது. கர்த்தருடைய வார்த்தை பழுது அடைவதேயில்லை.

வசனம் 3:27

அவர்களுக்குப் பின்னாகத் தெக்கோவா ஊரார் வெளிப்புறமான பெரிய கொம்மைக்கு எதிரே ஓபேலின் மதில்மட்டும் இருக்கிற பின்னொரு பங்கைப் பழுதுபார்த்துக் கட்டினார்கள்.

சில குழுவினர் ஒன்றிற்கும் மேற்பட்ட இடங்களையும் பழுது பார்த்தனர். தெக்கோவா ஊரார் அவ்வாறுதான் செய்தனர். தெக்கோவா ஊராரின் பிரபுக்கள் இந்தப் பணிக்குத் தோள் கொடுக்கவில்லையென்றும் 50ம் வசனத்தில் வாசித்தோம். ஆனாலும் ஊரார் இரு மடங்காகச் செய்தனர்.

வசனம் 2:28

குதிரைவாசல் முதற்கொண்டு ஆசாரியர்கள் அவரவர் தங்கள் வீடுகளுக்கு எதிரே இருக்கிறதைப் பழுதுபார்த்துக் கட்டினார்கள்.

மறுபடியும் ஆசாரியர்கள் பணியில் முன் மாதரியாகத் தங்கள் தங்களின் வீடுகளுக்கு எதிரே இருக்கிறதைப் பழுதுபார்த்துக் கட்டினார்கள். இது குதிரை வாசல் முதற்கொண்டு நடைபெற்றது. வேதத்திலே குதிரைகள், யுத்தத்தோடு சம்பந்தப்படுத்தித்தான் பெரும்பாலும் எழுதப்பட்டுள்ளது. நமது யுத்தமோ நமது எதிரியான சாத்தானோடுதான் உள்ளது. இந்தக் கொடூரமான குதிரை வாசலண்டையில்தான், அரசியாயிருந்த அத்தாலியாள் கொடூரமாகக் கொன்று போடப்பட்டாள் (2.நாளா.23:15).

வசனம் 2:29

அவர்களுக்குப் பின்னாக இம்மேரின் குமாரன் சாதோக் தன் வீட்டுக்கு எதிரே இருக்கிறதைப் பழுதுபார்த்துக் கட்டினான். அவனுக்குப் பின்னாகக் கிழக்கு வாசலைக் காக்கிற செக்கனியாவின் குமாரன் செமாயா பழுதுபார்த்துக் கட்டினான்.

அடுத்த இருவர் சேர்ந்து அடுத்த இடங்களில் பழுதுபார்த்துக் கட்டுவதை வேதம் கூறுகிறது. அவர்களில் இரண்டாமவன், கிழக்கு வாசலைக் காக்கிறவன். அவன் தனது வாசல் சூரியனை நோக்கி, நிமிர்ந்து ஒழுங்காக இருக்கவேண்டுமென்ற விரும்பியிருப்பான்.

வசனம் 2:30

அவனுக்குப் பின்னாகச் செல்மீயாவின் குமாரன் அனனியாவும், சாலாபின் ஆறாவது குமாரனாகிய ஆனூனும், வேறொரு பங்கைப் பழுதுபார்த்துக் கட்டினார்கள். அவர்களுக்குப் பின்னாகப் பெரகியாவின் குமாரன் மெசுல்லாம், தன் அறைவீட்டுக்கு எதிரே இருக்கிறதைப் பழுதுபார்த்துக் கட்டினான்.

இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் ஆனூன் என்பவன் சாலாபின் ஆறாவது குமாரன் என அறிகிறோம். மற்ற ஐந்து மகன்கள் என்ன ஆனார்கள்? வேதம் அதைப்பற்றிக் கூறவில்லை. சலாப் என்பதற்கு ஆசீர்வதிக்கப்பட்டவன் என்பது பொருள் அவனை அவனது தியாகப் பணிகளுக்காக கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

மெசுல்லாம் என்பவன் தன் அறைவீட்டிற்கு எதிரே இருக்கிறதைப் பழுது பார்த்துக் கட்டினான்.

வசனம் 3:31-32

அவனுக்குப் பின்னாகத் தட்டானின் குமாரன் மல்கியா மிப்காத் என்னும் வாசலுக்கு எதிரே நிதனீமியரும் மளிகைக்காரரும் குடியிருக்கிற ஸ்தலமுதல் கோடியின் மேல்வீடுமட்டாகவும் இருக்கிறதைப் பழுதுபார்த்துக் கட்டினான். கோடியின் மேல்வீட்டுக்கும் ஆட்டுவாசலுக்கும் நடுவே இருக்கிறதைத் தட்டாரும் மளிகைக்காரரும் பழுதுபார்த்துக் கட்டினார்கள்.

இங்கே தட்டாரும், நீதனீமியரும், மளிகைக்காரரும் அடுத்தடுத்த பழுதுபார்க்கும் பணிகளைச் செய்வதை வேதம் கூறுகிறது. நாம் நகரத்தைச் சுற்றிலும் மதில்களைப் பழுது பார்த்துக் கட்டியவர்களைப்பற்றிப் படித்து மறுபடியும் ஆட்டுவாசலின் அருகே வந்து அங்கு நடைபெறும் பணியைப்பற்றி வாசிக்கிறோம். இதிலிருந்து எல்லா தொழில் செய்வோரும் ஆசாரியர்கள் மட்டுமின்றிக் கட்டும் பணியைச் செய்தனர். பலதரப்பட்ட மக்களும் சேர்ந்து, ஒவ்வொருவரின் திறமைக்குத் தக்கதாக தேவபணியைச் செய்ய வேண்டுமென்பதே முறை என்று நாம் அறிய முடிகிறது.

இவ்வாறாக எருசலேமின் அலங்கங்களையும் மதில்களையும் பற்றிய செய்தியினை நாம் அறியமுடிகிறது. இதுதான் தேவனுடைய திருப்பணியின் சிறப்பாகும். கர்த்தர், நம்மை நமது வேலை, திறமை, தகுதி, கல்வி எது எத்தகையதாயினும் தமது திருப்பணிக்கு இசைய வைக்க வல்லவராயிருக்கிறார்.

# 04. *பணியும் போராட்டமும்*

அதிகாரம் 4

பணியும் போராட்டமும்

வசனம் 4:1-2

நாங்கள் அலங்கத்தைக் கட்டுகிற செய்தியைச் சன்பல்லாத்து கேட்டபோது, அவன் கோபித்து, எரிச்சலடைந்து, யூதரை சக்கந்தம்பண்ணி: அந்த அற்பமான யூதர் செய்கிறது என்ன, அவர்களுக்கு இடங்கொடுக்கப்படுமோ, பலியிடுவார்களோ, சுட்டெரித்துப் போடப்பட்டு மண்மேடுகளான கற்களுக்கு உயிர் கொடுப்பார்களோ, என்று தன் சகோதரருக்கும் சமாரியாவின் சேனைக்கும் முன்பாகச் சொன்னான்.

தேவனுடைய வேலைகள் செய்யப்படும்போது, எதிரிகளின் தாக்குதல்கள் ஏற்படுதல் என்பது எப்போதும் நடக்கிறதொன்றேயாகும். சன்பல்லாத்திடம் இருந்துதான் மறுபடியும் தொல்லைகள் ஆரம்பமாயின. அலங்கங்கள் கட்டப்படுகின்றனவென்று கேள்விப்பட்டவுடன் கேள்விப்பட்டவுடன் அவன் மிகவும் கோபங்கொண்டான். சாதாரணமாகக் கட்டப்படும் அந்தச் சுவரின் வேலை அவனுக்குக் கோபமூட்டியது ஏன்? அந்த மதில்கள் இடிபாடுகளாக இருப்பதையே அவன் பார்த்துக்கொண்டிருக்க விரும்பினானோ? அவன் ஒரு சாதாரண முறைத்தாக்குதலை மேற்கொள்ள முயற்சித்தான். இழிவுபடுத்திப் பேசும் முறைதான் அது. அந்த எளிமையான யூதர்களைச் சக்கந்தம் பண்ணினான். அவர்கள் என்ன செய்துவிடுவார்கள்? தங்களைப் பாதுகாத்துக்கொள்ள அவர்களால் கூடுமோ? சுட்டெரித்துப் போடப்பட்டு மண்மேடுகளான கற்களுக்கு உயிர்கொடுப்பார்களோ? அவைகளைக்கொண்டு அந்தச் சுவர்களைக்கட்டி முடிப்பார்களோ? என்றெல்லாம் முட்டாள்தனமாகக் கேள்வி கேட்டான் அவன். அவர்கள் ஆரம்பித்தது மிகவும் மிகவும் பெரியதானதொரு வேலை என்பதனை அந்த யூதர்கள் நன்கு அறிவர். கற்கள், வேண்டிய அளவிற்குக் கிடைத்தன. ஆனால் எரித்து அழிக்கப்பட்டுப்போன கதவுகள் தான் சரிசெய்யப்பட வேண்டியிருந்தன (1:3, 2:13). ஆனால் சன்பல்லாத்து மிகவும் கோபமடைந்திருந்ததினால் நேரே சமாரியாவின் சேனைகளிடம் சென்று, மற்றும் அந்நகரத்தின் முக்கிய மனிதர்களையும் சந்தித்து, மேற்கண்ட கேலிப் பேச்சுக்களைப் பேசிக்கொண்டிருந்தான்.

வசனம் 4:3

அப்பொழுது அம்மோனியனாகிய தொபியா அவன் பக்கத்தில் நின்று: அவர்கள் கட்டினாலும் என்ன, ஒரு நரி ஏறிப்போனால் அவர்களுடைய கல்மதில் இடிந்துபோகும் என்றான்.

தொபியாவும் சன்பல்லாத்துடன் அவனது சக்கந்தகப் பேச்சுக்களினாலே சீக்கிரமே சேர்ந்து கொண்டான். அவர்கள் கட்டினாலும் என்ன, ஒரு நரி ஏறிப்போனால் அவர்களுடைய கல்மதில் இடிந்து போகும் என்றான் அவன். அவர்களிருவரும், யூதர்கள் செய்யம் முயற்சிகளைப் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தனர். ஆனால் இப்போது மதில்கள் கட்டப்பட ஆரம்பமாகி வளர்ந்துவருகிறதைப் பார்த்து அந்த யூதர்களைப் பரிகாசம் செய்து தாக்க முற்பட்டனர். இன்றைக்குக் கர்த்தருடைய வார்த்தைகளையும், தேவனுக்கடுத்த வேலைகளையும் கண்டு சத்துருக்கள் அவ்வாறே தாக்க முற்படுகின்றனர். நமது தன்னம்பிக்கைகளையும் செய்களையும் கண்டு பரிகசித்துச் சிரிக்கிறவர்களைக் கண்டு பொறுத்துக்கொண்டிருப்பது மிகவும் கடினமாகத்தான் இருக்கும். அத்தகைய பரிகாசச் சிரிப்புகள் ஒரே நேரடித்தாக்குதலைவிட மோசமானதாகும். அதை எதிர்ப்பது சற்று கடினமே.

வசனம் 4:4-5

எங்கள் தேவனே, நாங்கள் அவமதிக்கப்படுகிறதைக் கேட்டு, அவர்கள் நிந்திக்கிற நிந்தையை அவர்கள் தலையின்மேல் திருப்பி, அவர்களைச் சிறையிருப்பின் தேசத்தில் சூறைக்கு ஒப்புக்கொடும். அவர்கள் அக்கிரமத்தை மூடிப்போடாதேயும். அவர்கள் பாவம் உமக்கு முன்பாகக் கொலைக்கப்படாதிருப்பதாக. கட்டுகிறவர்களுக்கு மனமடிவுண்டாகப் பேசினார்களே.

ஆனால் இத்தகைய இழிவான எதிர்ப்புகளை முறியடிக்க யாரிடமும் போக வேண்டும் என்பது நெகேமியாவிற்கு தெரியும் தேவனிடம் அவன் முறையிட்டான். நாம் சரிவரப் படித்துப் பார்த்தால் அவனுடைய அந்த ஜெபம் சற்று கடினமாகத்தான் தோன்றும். அவர்கள் நிந்திக்கிற நிந்தையை அவர்கள் தலையின்மேல் திருப்பி, அவர்களைச் சிறையிருப்பின் தேசத்திலே சூரைக்கு ஒப்புக்கொடும் என்று ஜெபிக்கிறான். அது நியாயப்பிரமாண சட்டங்களின் காலம். இயேசு கிறிஸ்துவின் மரணத்தால் ஏற்பட்ட கிருபையின் காலம் அப்போது ஏற்பட்டிருக்கவில்லை. கிறிஸ்தேசு சிலுவையின்மீது செய்த வேண்டுதல், பிதாவே இவர்களுக்கு மன்னியும். தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே (லூக்.23:24) என்பது நமக்காகத்தான் என்று நாம் அறிவோம். அந்த வேண்டுதலினால்தான் இன்று நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் (எபேசி.2:9) என்று வேதம் கூறுகிறது. நெகேமியா இத்தாக்குதல்கள் தேவன்மீது தொடுக்கப்பட்ட தாக்குதல்களே என்று கூறுகிறான். அவர்கள் எள்ளிப்பேசியது தேவனுக்கடுத்த வேலைகளையே. தேவன் அதற்காகக் கோபம் அடையவேண்டும். ஆகையால்தான் நெகேமியா தேவனிடத்தில் அவருடைய உதவிக்காக மன்றாடி ஜெபிக்கிறான்.

வசனம் 4:6

நாங்கள் அலங்கத்தைக் கட்டிவந்தோம். அலங்கமெல்லாம் பாதிமட்டும் ஒன்றாய் இணைந்து உயர்ந்தது. ஜனங்கள் வேலைசெய்கிறதற்கு ஆவலாயிருந்தார்கள்.

அதுமட்டுமன்றி, நெகேமியா அவர்களின் பரிகாசங்களுக்கு ஏதும் பதில் பேசவில்லை. அவர் வையப்படும்போது பதில் வையாமலும்.... இருந்தார் (2.பேது.2:23) என்று வேதம் இயேசுவைப் பற்றிக் கூறுகிறது. அது போலவே நெகேமியாவும் இருந்தான். நாங்கள் அலங்கத்தைக் கட்டிவந்தோம், என்றுள்ள அடுத்த வார்த்தைகள் நெகேமியா என்ன செய்தான் என்று விளக்குகின்றன. தொடர்ந்து நெகேமியா கட்டும் பணியைச் செய்தான். அவனைத் தடுக்கக்கூடியது ஏதுமில்லை. சிரிப்பு, பரிகாசம், சக்கந்தம் ஏதம் அவனைத் தடுக்கவில்லை. தேவனாகிய கர்த்தருடைய வேலையை அவன் செய்து வந்ததினால், அதை நிறுத்தினால் அது சத்துருக்களின் வெற்றிக்கான வழி என அவன்

நினைத்திருந்தான். ஆகையால் அவன் கட்டும் பணிகளை நிறுத்தவேயில்லை. அவனுடைய இதர நண்பர்களும் அவ்வாறே தொடர்ந்து கட்டும் பணியைச் செய்தனர். சீக்கிரமே, அந்த அலங்கங்கள் அனைத்தும் இணைத்துக் கட்டப்பட்டு பாதி உயரத்திற்கு எழுப்பப்பட்டு விட்டன. ஒவ்வொருவரும் தங்கள் தங்களின் சிறுகட்டும் பணி, அடுத்தவரின் கட்டுமானப் பணியோடு இணைக்கப்பட்டு முழுத்தொடர் இணைப்பும், ஒரேமதிலாக எழுப்பப்பட்டு வளர்ந்து வருகிறது எனக்காணும்போது, அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

ஆறாம் வனத்தில் கடைசி பாகம் ஜனங்கள் வேலை செய்கிறதற்கு ஆவலாயிருந்தார்கள் எனக் கூறுகிறது. அந்த அலங்கத்தின் மதில்களை அவர்கள் கட்ட விரும்பினார்கள். அதைக் கட்டினார்கள். இங்கே நாம் முக்கிய ஒன்றினைக் கவனிக்க வேண்டிய முன்மாதிரியைக் காண்கிறோம். அவர்கள் கட்டாயம் அதைச் செய்யவேண்டும் என்பதில்லை, அல்லது அது அவர்களின் கடமைப்பணியுமல்ல, அல்லது அதைச் செய்யப் பயப்படுத்தப்படவுமில்லை. அதைக் கட்டவேண்டுமென்று விரும்பினார்கள். தங்கள் மனதிலே அப்படி ஒரு முடிவை முதலில் எடுத்தார்கள். நம்மில் பலரும் தேவனுடைய பணியைச் செய்ய முதலில் அத்தகைய தீர்மானத்தை எடுக்கிறோமா? அதைச் செய்கிறோமா? அதைச் செய்கிறோமா? இவர்களோடு ஒப்பிட்டு நம்மை ஆராய்வோமாக.

வசனம் 4:7

எருசலேமின் அலங்கத்தைக் கட்டுகிற வேலை வளர்ந்தேறுகிறது என்றும், இடிக்கப்பட்ட இடங்கள் அடைபட்டு வருகிறது என்றும் சன்பல்லாத்தும், தொபியாவும், அரபியரும், அம்மோனியரும், அஸ்தோத்தியரும் கேட்டபோது, அவர்கள் மிகவும் எரிச்சலாகி,

இப்போது அதே வேலை மிகவும் கடினமானதாகிவிட்டது. தேவனுடைய வேலை வெற்றியோடு செய்யப்பட்டு வளர்ந்தேறி வருவதை சத்துரு சகித்துக்கொள்ளமாட்டானன்றோ? அவன் முன்னே வந்து அப்பணியை நிறுத்திவிட முயற்சி செய்வானல்லவா? ஆகையால் சன்பல்லாத்தும், தொபியாவும் மறுபடியும் இடையூறு செய்யமுன்வருகிறார்கள். இப்போது, அவர்களுடன் அராபியரும், அம்மோனியரும், அஸ்தோத்தியரும் சேர்ந்துகொண்டார்கள். மதில்கள் கட்டப்பட்டு, வாசல்கள் பழுது பார்த்துக் கட்டப்படுகின்றனவென்று கேள்விப்பட்டவுடன் அவர்கள் மிகவும் எரிச்சலடைந்தார்கள். இந்த மதில்கள் கட்டும் விஷயத்தில் சன்பல்லாத்தும் அடிக்கடி எரிச்சலடைந்து தனது கோபத்தை எல்லாருக்கும் பரப்பிக்கொண்டிருந்தான். இந்த ஒரே கலகப்பிரியன் யாது செய்துவிடமுடியும் என்று நினைக்கும்போது நமக்கு சற்று வியப்பாகத்தான் இருக்கிறது.

அவனுடைய கோபத்தின் விளைவாக அவன் தனது நண்பர்களுடன் சேர்ந்துகொண்டு எருசலேமைத் தாக்கவும், அந்தக்கட்டுமான வேலையத் தடுக்கவும் முற்பட்டான். அவர்கள் எல்லாருமாக சேர்ந்து இந்த மதில்கள் கட்டப்படும் பணியை நிறுத்திவிட வேண்டும் என்பதற்காக ஒரு போர் முயற்சியை மேற்கொள்ளத் தலைப்பட்டனர்.

வசனம் 4:8-10

எருசலேமின்மேல் யுத்தம்பண்ண எல்லாரும் ஏகமாய் வரவும், வேலையைத் தடுக்கவும் கட்டுப்பாடு பண்ணினார்கள். ஆனாலும் நாங்கள் எங்கள் தேவனை நோக்கி ஜெபம்பண்ணி, அவர்கள் நிமித்தம் இரவும்பகலும் ஜாமங்காக்கிறவர்களை வைத்தோம். அப்பொழுது யூதா மனிதர்: சுமைகாரரின் பெலன் குறைந்துபோகிறது. மண்மேடு மிச்சமாயிருக்கிறது. நாங்கள் அலங்கத்தைக் கட்டக்கூடாது என்றார்கள்.

நெகேமியாவிற்கு அவர்களின் திட்டங்கள் தெரிய வந்தது. மனிதர்கள் தங்களின் திட்டங்கள் தனிப்பட்டவைகள் என்று நினைக்கலாம். ஆனால் அனைத்தையும் தேவன் அறிவார் (1.யோ.3:22). மேலும் 8-12 இரா 6ல் கூறியுள்ளபடி சீரியாவின் இராஜாவிற்கு எப்படித் தெரிந்துவிடுகிறதென்று சில சொந்த ஆட்களைச் சந்தேசித்து அந்தத் துரோகி

யார் என்று விசாரணை செய்யும்போது ஓர் ஊழியக்காரன்.... நீர் உம்முடைய பள்ளியறையிலே பேசுகிற வார்த்தைகளையும் இஸ்ரவேலிலிருக்கிற தீர்க்கதரிசியாகிய எலிசா இஸ்ரவேலின் ராஜாவுக்கு அறிவிப்பான் என்று சொன்னான் என்று காண்கிறோம்.

சத்துருக்களின் திட்டங்களை நெகேமியா கேள்விப்பட்டவுடன் செயல்ப்படத்துவங்கினான். யூதர்கள் தேவனிடத்தில் சென்று தேவனை நோக்கி ஜெபம்பண்ணி, அவர்கள் நிமித்தம் இரவும் பகலும் ஜாமங்காக்கிறவர்களை வைத்தோம் என்று கூறுகிறான். இதற்குமுன் செய்தது போலவே நெகேமியா சரியான முறையைப் பின்பற்றினான். பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபம்பண்ணி... ராஜாவைப் பார்த்து வேண்டிக்கொள்கிறேன் (2:4-5) என்று நெகேமியா ஜெபத்தோடு செயல்ப்பட்டான். இவை இரண்டும் ஒன்றாக இணைந்திருக்கவேண்டும். ஜெபம் பண்ணி விழித்திருங்கள்.

இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் யூதா மனிதர் சொன்னார்கள் என்பது அங்கு கட்டும் பணியைச் செய்து வந்த அனைத்து மக்களும் ஒப்புக்கொண்டு சொன்னதைத் தான் குறிக்கும். கட்டும் பணியின் அலங்கங்களின் பாதி பகுதி மட்டும் கட்டி முடித்தபின் அவர்கள் மிகவும் சோர்வடைந்திருந்தனர். அதற்குக் காரணம் அப்பணியைச் செய்தவர்கள் அனைவரும் சேர்ந்து சரீரப்படியான பணியில் ஈடுபடவில்லை. மேலும் பாதி வேலை நேரம் என்பது கஷ்டமான வேலையின் நேரமேயாகும். அவர்கள் மகிவும் சோர்வடைந்திருந்தனர். மேலும் அதிகமான குப்பை மேடுகளும் இடிபாடுகளும் சேர்ந்திருந்த குவியல்களினிமித்தம் தொடர்ந்து கட்ட முடியவில்லை. நமது வாழ்க்கையிலும் கூட எத்தனை முறை நாம் பலவகை குப்பை கழிவுகள் போன்ற இடர் பாடுகளினால் தேவனுடைய பணியைச் செய்ய முடியாமல் திகைக்கிறோம். உன்னுடைய வாழ்க்கையில் உள்ள அப்படிப்பட்ட குப்பைகள் என்னவென்பதனை நீ உணர்ந்திருக்கிறாயா? எவ்வளவு அருமையான நேரத்தையும், பணத்தையும் நீ அதற்காக, வீணாக செலவு செய்ய நேர்ந்துள்ளது? இங்கே அதுபோன்ற பயனற்ற காரணங்களுக்காகவே அவர்கள் கட்டும் பணியை நிறுத்திவைக்க வேண்டியதாயிற்று. பாவம் நெகேமியா. முதலாவது அவனுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் அவனது விரோதிகள் அடுத்து அவர்களது பணியிடங்களில் இருந்த குப்பைக்குவியல்கள்.

வசனம் 4:11

எங்கள் சத்துருக்களோவென்றால்: நாங்கள் அவர்கள் நடுவே வந்து, அவர்களைக் கொன்றுபோடுமட்டும், அவர்கள் அதை அறியாமலும் பாராமலும் இருக்கவேண்டும். இவ்விதமாய் அந்த வேலையை ஓயப்பண்ணுவோம் என்றார்கள்.

இந்தக் குப்பை குவியல்களைக்கூட நெகேமியாவின் சத்துருக்கள் பயன்படுத்த ஆரம்பித்தனர். இங்கே ஏராளமான குப்பை மேடுகள் பெரியகுவியல்களாக உள்ளன. நாங்கள் வருவதை அவர்கள் காணக்கூடாமல் அவை மறைந்துவிடும். நாங்கள் அவர்கள்மேல் விழுந்து அவர்கள் தாக்கும்வரை அவர்கள் அதை உணரமுடியாது என்றெல்லாம் சொல்லிக்கொண்டனர். அந்தக் குப்பைகுவியல்கள் மட்டும் தானாக தீங்கொன்றும் செய்யமுடியாது. அது அங்கே குவியல்களாகமட்டும் அமைந்திருந்து. ஆனால் அது சத்துருக்கள் நெருங்கி வருவதை முழுவதும் முழுவதுமாக மறைத்து நிற்கும். நமது வாழ்க்கையிலும்கூட அத்தகைய நிகழ்ச்சிகளே நடக்கின்றன. நமது வாழ்க்கையிலுள்ள சில தீய பழக்கக்குவியல்கள் நமது சத்துரு நமக்கு விரோதமாக நம்மை வஞ்சித்து செய்யும் செயல்களை அறிந்துகொள்ள முடியாதபடி நம்மைத் தடுத்து நிறுத்துகின்றன. நாம் அத்தகைய குப்பைகளை நம்மைவிட்டு அகற்றுவோமாக.

அந்தச் சத்துருக்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்பதனைத் திட்டமாகக் கூறுகின்றனர். அதாவது அந்த யூதர்களைத் தாக்கிக்கொன்று அந்த வேலையை நடைபெறவிடாமல் தடுத்துப்போட நினைக்கின்றனர். அவர்கள் அந்த வேலையை நிறுத்துமுன் அந்த யூதர்களைத் தாக்கிக் கொல்லவேண்டும் என்று நினைக்கின்றனர். கொல்லவேண்டுமே என்பது அவர்களுக்குக் கவலையளிக்கவில்லை. முதலில்

கொல்லத்தான்வேண்டுமென்றாலும் அதற்கு அவர்கள் சம்மதித்திருந்தனர். எப்படியாவது கட்டும்பணியை நிறுத்திவிட வேண்டும். அதுதான் அவர்களுக்கு மிகவும் முக்கியம்.

வசனம் 4:12

அதை அவர்களண்டையிலே குடியிருக்கிற யூதரும், பல இடங்களிலுமிருந்து எங்களிடத்துக்கு வந்து, பத்துவிசை எங்களுக்குச் சொன்னார்கள்.

வேலையை நிறுத்தச் செய்யும் முயற்சிகளில் அவர்கள் மேலும் என்ன செய்தார்கள் என்பது அறிவிக்கப்படவில்லை. ஆனால் அவர்களின் இந்தக் கொடுரமான திட்டங்கள் அங்கே அருகில் இருந்த பல யூதருக்கும் தெரிய வந்தன. அவர்கள் நெகேமியாவினிடத்தில் வந்த அதை அவனுக்கு அறிவித்தனர். விரோதிகள் எங்கும் வேண்டுமானாலும் நம்மைத் தாக்கத் தயாராக உள்ளனர் என்று அவர்கள் அவனிடம் கூறினர்.

வசனம் 4:13

அப்பொழுது நான்: அலங்கத்துக்குப் பின்னாக இருக்கிற பள்ளமான இடங்களிலும் மேடுகளிலும், பட்டயங்களையும், ஈ ட்டிகளையும், வில்லுகளையும் பிடித்திருக்கிற ஜனங்களைக் குடும்பங் குடும்பமாக நிறுத்தினேன்.

நெகேமியா உடனே செயல்ப்படத் துணிந்தான். அவன் காத்திருந்து பார்க்கவில்லை. மதில்களைப் பாதுகாக்கத் திட்டமிட்டான். அவன் அலங்கத்துக்குப் பின்னாக இருக்கிற பள்ளமான இடங்களிலும் மேடுகளிலும் பட்டயங்களையும், ஈட்டிகளையும், வில்லுகளையும் பிடித்திருக்கிற ஜனங்களைக் குடம்பம் குடம்பமாக நிறுத்திவைத்தான். அவர்கள் போரிட்டு, வென்று பாதுகாத்துக் கொள்ளத் தயாராக நிறுத்தப்பட்டனர். கர்த்தருடைய வேலைக்காக குடும்பங்குடும்பமாக உழைத்தல் என்பது மிகவும் மகிமையான செயல் ஆகும்.

வசனம் 4:14

அதை நான் பார்த்து எழும்பி, பிரபுக்களையும் அதிகாரிகளையும் மற்ற ஜனங்களையும் நோக்கி: அவர்களுக்குப் பயப்படாதிருங்கள். நீங்கள் மகத்துவமும் பயங்கரமுமான ஆண்டவரை நினைத்து, உங்கள் சகோதரருக்காகவும், உங்கள் குமாரருக்காகவும், உங்கள் குமாரத்திகளுக்காகவும், உங்கள் மனைவிகளுக்காகவும், உங்கள் வீடுகளுக்காகவும் யுத்தம்பண்ணுங்கள் என்றேன்.

அந்த ஜனங்கள் சற்றே பயந்திருந்தனர் என்பதனை நெகேமியா அறிந்தபோது பிரபுக்கள், அதிகாரிகள், மற்ற ஜனங்கள் யாவரையும் தன்னிடத்தே அழைத்து, அவர்களுக்குப் பயப்படாதிருங்கள் என்று கூறினான். தேவனாகிய கர்த்தர் இதுபோல் தமது மக்களுக்குப் பலமுறை கூறியுள்ளார். எரேமியாவைத் தமது பணிக்காக அழைத்தபோது அவனிடத்தில் தேவன் அவ்வாறுதான் கூறினார். நீ அவர்களுக்குப் பயப்படவேண்டாம். உன்னைக் காக்கும்படி நான் உன்னுடனே இருக்கிறேன் என்றார். (எரேமி.1:8, உபா.31:6-8, ஏசா.1:2,5, லூக்.12:7,32). நெகேமியாவும் அதே காரணத்தை விளக்கிக்கூறுகிறான். மகத்துவமும் பயங்கரமுமான ஆண்டவரை நினைத்து..... உங்கள் குடும்பங்களுக்காகவும் உங்கள் வீடுகளுக்காகவும் யுத்தம்பண்ணுங்கள் என்று சொன்னான். பரலோகத்தின் சிங்காசனத்திலே வீற்றிருக்கிறவர் யார் என்பதனையும் எவ்வளவு சீக்கிரம் நாம் மறந்து விடுகிறோம். நாம் இது குறித்து நினைவூட்டப்பட வேண்டியவர்களாக இருப்பது என்னே!

வசனம் 4:15

எங்களுக்குச்செய்தி தெரியவந்ததென்றும், தேவன் அவர்கள் ஆலோசனையை அபத்தமாக்கினாரென்றும், எங்கள் பகைஞர் கேட்டபோது, நாங்கள் எல்லாரும் அவரவர் தங்கள் வேலையைச் செய்ய அலங்கத்துக்குத் திரும்பினோம்.

யூதர்களுக்குத் தங்களின் திட்டம் தெரியவந்துவிட்டது என்று அந்தச் சத்துருக்கள் கேள்விப்பட்டனர். நெகேமியா கர்த்தரைத் துதித்துப் போற்றினான் கர்த்தர் ஜாதிகளின் ஆலோசனையை விருதாவாக்கி.... (சங்.33:10) என்று தாவீது கூறுகிறான். எல்லா யூதர்களும் அலங்கங்களைக் கட்டும் பணியை மீண்டும் துவக்கியுள்ளதையும் அந்தச் சத்துருக்கள் காண்கின்றனர். அவர்களின் எல்லாத் திட்டங்களும் பயனற்றுவிட்டதை அறிகின்றனர்.

வசனம் 4:16-17

அன்றுமுதற்கொண்டு என் வேலைக்காரரில் பாதிப்பேர் வேலைசெய்தார்கள், பாதிப்பேர் ஈட்டிகளையும் பரிசைகளையும் வில்லுகளையும் கவசங்களையும் பிடித்து நின்றார்கள். அதிகாரிகள் யூதா வம்சத்தார் எல்லாருக்கும் பின்னாக நின்றார்கள். அலங்கத்திலே கட்டுகிறவர்களும், சுமைசுமக்கிறவர்களும், சுமையேற்றுகிறவர்களும், அவரவர் ஒரு கையினாலே வேலைசெய்து, மறுகையினாலே ஆயுதம் பிடித்திருந்தார்கள்.

ஆனால் யூதர்களைப் பொறுத்தவரையில் அவர்களிடத்தில் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டுவிட்டது. விரோதிகளின் திட்டங்கள் அவர்களை ஆயதபாணிகளாக வைத்தது. அவர்களில் பாதிப்பேர் ஆயுதந்தரித்தவர்களாக பாதுகாப்பிற்கு நெகேமியாவினால் நிறுத்தப்பட்டனர். ஈட்டிகளையும் வில்லுகளையும் அவர்கள் பிடித்து நின்றனர். மற்றப் பாதிப்பேர் கட்டும் பணியைச் செய்தனர். சுமை சுமக்கிறவர்களும் சுமையேற்றுகிறவர்களும் ஒரு கையினாலே வேலைசெய்து மறுகையினாலே ஆயதம் பிடித்திருந்தார்கள். கட்டுகிறவர்கள் அவரவர் தங்கள் பட்டயத்தைத் தங்கள் இடுப்பிலே கட்டிக் கொண்டவர்களாய் வேலைசெய்தார்கள். அவர்கள் டீதேவைக்கேற்றபடி குறிப்பிட்ட இடங்களிலே நின்றவர்களாய் போருக்குத் தயாரான நிலையில் இருந்தனர்.

வசனம் 4:18

கட்டுகிறவர்கள் அவரவர் தங்கள் பட்டயத்தைத் தங்கள் இடுப்பிலே கட்டிக்கொண்டவர்களாய் வேலைசெய்தார்கள். எக்காளம் ஊதுகிறவன் என்னண்டையிலே நின்றான்.

கர்த்தர் நம்மை எப்போதும் ஆயத்தமாயிருக்க சொல்லியிருக்கிறாரன்றோ? தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்..... நீதியென்னும் மார்க்கவசத்தையும் தரித்தவர்களாயும் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைத் தரித்தவர்களாயும் விசுவாசமென்னும் கேடகத்தையும்... ரட்சண்யமென்னும் தலைச்சீராவையும் எடுத்துக்கொள்ளுங்கள் (எபேசி.6:10-17) என வேதத்தில் வாசிக்கிறோம். அடுத்து நெகேமியா எக்காளம் ஊதகிறவனை அவனண்டையில் நிற்கும்படி செய்தான். எக்காளம் ஊதும்போது யாவரும் அவ்விடத்தில் வந்து அவன் சொல்லியிருக்கிறபடி செய்ய அவர்களுக்குச் சொல்லிவைத்தான்.

வசனம் 4:19-20

நான் பிரபுக்களையும் அதிகாரிகளையும் மற்ற ஜனங்களையும் நோக்கி: வேலை பெரிதும் விஸ்தாரமுமாயிருக்கிறது. நாம் அலங்கத்தின்மேல் சிதறப்பட்டு ஒருவருக்கு ஒருவர் தூரமாயிருக்கிறோம். நீங்கள் எவ்விடத்திலே எக்காளச் சத்தத்தைக் கேட்கிறீர்களோ அவ்விடத்திலே வந்து, எங்களோடே கூடுங்கள். நம்முடைய தேவன் நமக்காக யுத்தம்பண்ணுவார் என்றேன்.

நெகேமியா அவர்களுக்கு விளங்க கூறி வேலைபெரிதும் விஸ்தாரமுமாயிருக்கிறது. ஒருவருக்கொருவர் நாம் தூரமாயிருக்கிறோம். எக்காள சத்தத்தை எங்கே கேட்கிறீர்களோ அவ்விடத்திலே கூடுங்கள் என்று சொன்னான். மேலும் அவன் முக்கியமான அழகிய ஒரு செய்தியைக் கூறுகிறான். நம்முடைய தேவன் நமக்காக

யுத்தம் பண்ணுவார் என்கிறான். அனைத்து சத்துவமும் எங்கே உள்ளதென்று நெகேமியா அறிவான். அதைச் சொல்ல அவன் ஒருபோதும் மறக்கவில்லை.

நாமும் தேவனுடைய வேலையைச் செய்யும் பணியில் வேறுபட்டுள்ளேர். சிலர் மிகத் தொலைவில்கூட உள்ளனர். நாம் ஒன்றுபடி வேண்டியுள்ளர். ஒருவருக்காக ஒருவர் தேவனிடத்தில் வேண்டுதல் செய்வதே அந்த ஒன்றுபடுதல் ஆகம். ஆனால் என்றோ ஒருநாள் எக்காள சத்தத்தினால் நாம் ஒன்று சேர்க்கப்படுவோம். கர்த்தர்தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். (1.தெச.4:15-18).

வசனம் 4:21

இப்படியே நாங்கள் வேலைசெய்துகொண்டிருந்தோம். அவர்களிலே பாதிப்பேர் கிழக்கு வெளுக்கும் நேரமுதல் நட்சத்திரங்கள் காணுமட்டும் ஈட்டிகளைப் பிடித்திருந்தார்கள்.

அவ்வாறே அவர்கள் செயல்ப்பட்டனர். இப்படியே நாங்கள் வேலைசெய்து கொண்டிருந்தோம் என்று கூறப்பட்டுள்ளது. அவர்களைத் தடுப்பது ஏதமில்லை. அந்தப் பகைஞரின் முயற்சிகளை அவர்கள் புறக்கணித்து அவர்களின் தாக்குதலை எதிர்க்கக் காத்திருந்தனர். தேவனுடைய வார்த்தைகளான, கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்திற்கு தகுதியானவன் அல்ல (லூக்.9:62) என்ற சத்தியத்திற்கு நெகேமியா ஒர் எடுத்துக்காட்டாக விளங்குகிறான்.

மேலும் நெகேமியா வேலைநேரத்தையும் குறிப்பிட்டு அவர்களில் பாதிப்பேர், கிழக்கு வெளுக்கும் நேரம் முதல் நட்சத்திரங்கள் காணுமட்டும் ஈட்டிகளைப் பிடித்திருந்தார்கள் என்று கூறிகிறான். இது பகலின் மிக அதிக நேரம். அது மட்டுமன்றி சூரியன் அஸ்தமித்த நேரம் தொடங்கி நட்சத்திரங்கள் தோன்றும் நேரம் வரையிலான குறகிய நேரம்கூட சேர்த்துக் கணக்கிடப்படுகின்றதன்றோ? தேவனுடைய திருப்பணியில் நம்மில் எத்தனை பேர் அத்துணைப்பகல் நேரத்தையும் செலவிடுகிறவர்களாக உள்ளோம் என்பதனை எண்ணிப் பார்க்கக்கடவோம்.

வசனம் 4:22

அக்காலத்திலே நான் ஜனங்களைப் பார்த்து: இராமாறு நமக்குக் காவலுக்கும் பகல்மாறு வேலைக்கும் உதவ, அவரவர் தங்கள் வேலைக்காரரோடுங்கூட எருசலேமுக்குள்ளே இராத்தங்கக்கடவர்கள் என்று சொல்லி,

மற்றுமொரு செயல் திட்டத்தை, நெகேமியா அறிவிக்கிறான். ஒவ்வொரு இராமாறு காவலுக்கும் பகல்மாறு வேலைக்கும் உதவ அவரவர் தங்கள் வேலைக்காரரோடுங்கூட எருசலேமுக்குள்ளே இராத்தங்க வேண்டும் என்று கூறுகிறான். எருசலேமைப் பாதுகாப்பின்றி விட்டுச் செல்ல அவன் விரும்பவில்லை. அதனால் இந்தச் செயல் திட்டம்.

வசனம் 4:23

நானாகிலும், என் சகோதரராகிலும், என் வேலைக்காரராகிலும், என்னைப் பின்பற்றிக் காவல்காக்கிற சேவகராகிலும் எங்கள் வஸ்திரங்களைக் களைந்துபோடாதிருந்தோம். அவரவருக்கு ஆயுதமும் தண்ணீரும் இருந்தது.

இந்த வசனம், யூதர்கள் எவ்வளவு தியாகமனதோடு பணியாற்றினார்கள் என்பதை விளக்குகிறது. நெகேமியாவும் அவனுடைய சகோதரரானவர்களும், வேலைக்காரர்களும், வஸ்திரங்களைக் களைந்து போடாதிரந்தனர். வஸ்திரங்களைத் துவைக்கத் தண்ணீர்களண்டையில் செல்லும்போதுகூட தங்கள் ஆயுதங்களுடன் சென்றனர்.

கர்த்தரின் ஆயுதசாலையிலே, பட்டயத்தைப்பற்றி தேவவசனமாகிய ஆவியின் பட்டயம் என கூறப்பட்டிருப்பதை நாம் எபேசியர் 36:17ல் வாசிக்கிறோம். நீ, இந்தப் பட்டயத்தை உனது தேவபணியில், தரித்துக்கொண்டு எங்னும் செல்கின்றாயா? இதன் பொருள் நீ வசனங்களடங்கிய ஒரு வேதபுத்தகத்தைச் சுமந்து செல்ல வேண்டும் என்பதல்ல. உனது மனதிலே வேதவசனங்கள் இருக்கவேண்டும். தாவீது நான் உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன் எனக் கூறக் காண்கிறோம் (சங்.119:11). தேவைப்படும் போதெல்லாம் அது அங்கிருந்து நமக்குப் பயன்படவேண்டும். அது நமது மனதில் வைக்கப்பட நாம் தினமும் வேதத்தை வாசித்து, அவசியமானால் மன்பாடம் செய்யவேண்டும். வேதத்தை எடுத்து, திறந்து ஓரதிகாரத்தை வாசித்தால் மட்டும் போதாது. தினசரி வாசித்தலும் மனப்பாடம் செய்தலும் மிக முக்கியமாகும். அப்போதுதான் அது நமது மனதில் பதிய வைக்கப்படும். பரிசுத்த ஆவியின் ஏவதலால் நமக்குத் தேவவைப்படும்போது அது நினைவிற்கு கொண்டுவரப்படும். வேதத்தை நாம் படிக்காமலும், அதைப்பற்றி தியானிக்காமலும் இருந்தோமானால் அது நமக்கு நெஞ்சில் நிற்பது எப்படி?

# 05. உள்ளிடைக் குழப்பம்

அதிகாரம் 5

உள்ளிடைக் குழப்பம்

வசனம் 5:1

ஜனங்களுக்குள்ளே அநேகரும் அவர்களுடைய ஸ்திரீகளும் யூதராகிய தங்கள் சகோதரர்மேல் முறையிடுகிற பெரிய கூக்குரலுண்டாயிற்று.

எதிரிகள் தாக்கும்போது தேவனுடைய பிள்ளைகள் ஒன்றுபட்டு செயல்ப்பட்டனர். ஆனால் யூதர்களுக்குள்ளிருந்தே பகைமையான எதிர்ப்புக்கள் தோன்றும்பொழுது, அதன் விளைவாக மனக்கசப்பும் பிரிவினையுமே ஏற்படவேண்டியிருந்தது. தங்களின் மதில்களைக் காத்துக்கொள்ள அவர்கள் எவ்வாறு ஒன்றுபட்ட செயல்ப்பட்டனர் என்பதனை நாம் வாசித்துள்ளோம். ஆனால் இப்போது நெகேமியாவிற்கு உள்ளிடைக் குழப்பம் ஒரு பெரிய தொல்லையாக மாறியது. அது சில காலமாகவே அவர்களுக்குள் இருந்து வந்திருக்கலாம். ஆனால் மதில்கள் கட்டப்படுவதில் சிக்கல்களும் நெருக்கடிகளும் தோன்றியபோது அந்த உள்ளிடைக்குழப்பம் தலை தூக்க ஆரம்பித்தது.

அவர்களின் பிரமாண கற்பனைகளின்படி ஒரு குடும்பம் கஷ்டத்தில் அகப்படும்போது மற்ற யூதர்கள் அவர்களுக்கு உதவிசெய்யவேண்டும் என்பது நிபந்தனை. அதன்படி அவர்களுக்குப் பணமும் உணவும் கடனாகத் தரப்படும். ஆனால் வட்டி வாங்குதல் கூடாது. யார் ஒருவனும் அம்மாதிரியாகப் பெறும் கடனுக்காகத் தன்னை அடிமையாக ஒப்படைக்க முன்வந்தால் அதை ஒப்புக்கொள்ளக்கூடாது என்பது நிபந்தனை. ஏனெனில் அவர்கள் அனைவரும் அடிமைகளாக இருந்துதானே இப்போது மீண்டும் வந்துள்ளனர். ஆகையால் அவர்களில் ஒருவனை அடிமையாக மற்றொருவன் நடத்தக்கூடாது. (லேவி.25:39-42).

வசனம் 5:2-6

அதென்னவென்றால், அவர்களில் சிலர்: நாங்கள் எங்கள் குமாரரோடும் எங்கள் குமாரத்திகளோடும் அநேகரானபடியினால், சாப்பிட்டுப் பிழைக்கும்படிக்கு நாங்கள் தானியத்தைக் கடனாக வாங்கினோம் என்றார்கள். வேறு சிலர்: எங்கள் நிலங்களையும் எங்கள் திராட்சத்தோட்டங்களையும் எங்கள் வீடுகளையும் நாங்கள் அடைமானமாக வைத்து, இந்தப் பஞ்சத்திலே தானியம் வாங்கினோம் என்றார்கள். இன்னும் சிலர்: ராஜாவுக்குத் தீர்வைசெலுத்த, நாங்கள் எங்கள் நிலங்கள்மேலும் எங்கள் திராட்சத்தோட்டங்கள்மேலும், பணத்தைக் கடனாக வாங்கினோம் என்றும். எங்கள் உடலும் எங்கள் சகோதரர் உடலும் சரி. எங்கள் பிள்ளைகளும் அவர்கள் பிள்ளைகளும் சரி. ஆனாலும், இதோ நாங்கள் எங்கள் குமாரரையும் எங்கள் குமாரத்திகளையும் அடிமைத்தனத்திற்கு உட்படுத்தவேண்டியதாயிருக்கிறது. அப்படியே எங்கள் குமாரத்திகளில் சிலர் அடிமைப்பட்டுமிருக்கிறார்கள். அவர்களை மீட்க எங்களுக்கு நிர்வாகமில்லை. எங்கள் நிலங்களும் எங்கள் திராட்சத்தோட்டங்களும் வேறே மனிதர் கைவசமாயிற்று என்றார்கள். அவர்கள் கூக்குரலையும், இந்த வார்த்தைகளையும் நான் கேட்டபோது, மிகவும் கோபங்கொண்டு,

இது பற்றிய கட்டளை, பிரமாணத்தில் தெளிவாகக் குறிக்கப்பட்டு இருந்தது. ஆனால் ஏழைகளான சிலரும் அவர்களுடைய மனைவிமாரும், செல்வந்தர்களான யூதர்களின் செயல்களைக் குறித்து கூக்குரலிட ஆரம்பித்தனர். தங்கள் பிள்ளைகளுக்குத் தேவயையான உணவிற்காகத் தானியம் வாங்கின வகையில் கடன் தொல்லைக்கு உட்பட்டனர். மற்றும்பலர் தங்களுடைய நிலங்களையும் வீடுகளையும் கொள்ளும்படி அடைமானமாக வைத்துவிட்டனர். சிலர் ஆயம் செலுத்துவதற்காகப் பணமாகக் கடன்வாங்கியிருந்தனர். இதுபோலக் கடன்வாங்கியவர்கள், தாங்கள் வாங்கியிருந்த கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தமுடியாத நிலை ஏற்பட்டபோது தங்களின் ஆண்பிள்ளைகளையும், பெண்பிள்ளைகளையும் அடிமைகளாக ஒப்படைக்க நிர்பந்திக்கப்பட்டனர். இது மிகவும் கடுமையான விளைவுகளை ஏற்படுத்த ஆரம்பித்தது.

அவ்வாறு அடிமையாகப் பெறப்பட்ட ஆண்களையும் பெண்களையும், கொண்டுபோய், வேறு யூதர்களுக்கு, மறுபடியும் அடிமைகளாய் விற்கப்பட்டுப்போனபொழுது, நிலைமை மிகவும் மோசமடைந்தது. அதிர்ச்சி தரக்கூடிய இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டபோது நெகேமியா மிகவும் கோபமடைந்தான். அவனுடைய சத்துருக்கள் பரிகசித்து கேலிபேசியபோதும், தாக்க நினைத்து பயமுறுத்தியபோதும்கூட அவன் அவ்வளவு கோபம் அடைந்ததில்லை. ஆனால் அவனுடைய சொந்த மக்களின் அற்ப நடவடிக்கைகளே அவனைக் கோபப்படுத்தின.

வசனம் 5:7-8

என் மனதிலே ஆலோசனைபண்ணி, பிற்பாடு பிரபுக்களையும் அதிகாரிகளையும் கடிந்துகொண்டு: நீங்கள் அவரவர் தங்கள் சகோதரர்மேல் ஏன் வட்டி சுமத்துகிறீர்கள் என்று சொல்லி, அவர்களுக்கு விரோதமாக ஒரு பெரிய சபை கூடிவரச்செய்து, அவர்களை நோக்கி: புறஜாதியாருக்கு விற்கப்பட்ட யூதராகிய எங்கள் சகோதரரையும் நாங்கள் எங்கள் சக்திக்குத்தக்கதாய் மீட்டிருக்கையில், நீங்கள் திரும்ப உங்கள் சகோதரரை விற்கலாமா? இவர்கள் நமக்கு விலைப்பட்டுப்போகலாமா என்றேன். அப்பொழுது அவர்கள் மறு உத்தரவு சொல்ல இடமில்லாமல் மவுனமாயிருந்தார்கள்.

அவன் செயல்படத் துணிந்தான். ஆனால் அதற்குமுன் ஆழந்து சிந்தித்தான். அது, நாம்கூட கடுங்கோபத்துடன் செயல்பட நினைக்கும்போது, ஒரு நல்ல முறை செயல்பாடேயாகும். செய்து விட்டபின் பல அவலச்செயல்களை அது தடுக்கும். ஆனால் நெகேமியாவின் கோபம் அர்த்தமுள்ளதாக இருந்தது. அவன் அதிகாரிகளையும் பிரபுக்களையும் அழைப்பித்தான். அவர்கள்தான் ஏழைகளான தங்கள் சகோதரருக்கு இடுக்கண் விளைவித்து அடிமைத்தனத்தை புகத்த முயன்றவர்கள். நெகேமியா நேரடியாக முதலில் அவர்களைச் சந்தித்து

அவர்களிடதர்தில் பேசி, நீங்கள் உங்கள் சகோதரர்மேல் ஏன் வட்டி சுமத்துகிறீர்கள், அது தேவகட்டளைக்கு விரோதமான காரியமன்றோ? என்று கூறினான் (யாத். 22:25).

அடுத்து நெகேமியா பெரியதொரு கூடிவரச்செய்து, அவர்களின் குற்றச்சாட்டுகளைக் கேட்கச்செய்தான். நாம் அடிமைகளாக விற்கப்பட்டுப்போன நமது சகோதரர்களை மீட்டு அழைத்து வந்தோமே. நீங்கள் அவர்களை மறுபடியும் அதே அடிமைத்தனத்திற்குட்படுத்த முயற்சிப்பது என்னே? என்று அதட்டிப் பேசினான். இந்த நேரடியான குற்றச்சாட்டுதலுக்குப் பதில் ஒன்றும் கூறமுடியாமல் அவாகள் மௌனமாயிருந்தார்கள். நெகேமியா சொல்வது முற்றிலும் சரியே என்பது அவர்களுக்குத் தெரியும். அவர்கள் அனைவரும் தாழ்மையாக , ஒப்புக்கொண்டதைப் போலிருந்தனர்.

வசனம் 5:9-10

பின்னும் நான் அவர்களை நோக்கி: நீங்கள் செய்கிற காரியம் நல்லதல்ல. நம்முடைய பகைஞராகிய புறஜாதியார் நிந்திக்கிறதினிமித்தம் நீங்கள் நம்முடைய தேவனுக்குப் பயந்து நடக்கவேண்டாமா ? நானும் என் சகோதரரும் என் வேலைக்காரரும் இவ்விதமாகவா அவர்களுக்குப் பணமும் தானியமும் கடன்கொடுத்திருக்கிறோம்? இந்த வட்டியை விட்டுவிடுவோமாக.

மேலும் நெகேமியா நீங்கள் செய்கிற காரியம் நல்லதல்ல. புறஜாதியாருக்கு, முன்மாதிரியாக இருக்கும்படி நீங்கள் தேவனுக்குப் பயந்து நடக்க வேண்டாமா? என்று அவர்களிடம் பேசிச்சொன்னான். நெகேமியா இதுபோல் சொல்லும் தகுதியைப் பெற்றிருந்தான். அவனும் மற்ற யூதர்களுக்குக் கடனாகப் பணமும் தானியமும் கொடுத்திருந்தான். ஆனால் அவன் அனைத்தையும் பிரமாண சட்டங்களுக்குப்பட்டே செய்திருந்தான். ஆனால் அவன் தன்னையும் மற்ற அவர்களுடன் சேர்த்தே பேசினான். இந்தக் கடன்கள் யாவும் வட்டியின்றி இலவசமாக இருக்கவேண்டும் என்று அவன் முடிவெடுத்தான் போலும் ஏழைகளாக இருந்த அந்த யூதர்களில் அநேகர் தங்கள் சொந்த வருமானத்திற்கான வேலை செய்தலும், மதில்கள் கட்டும் பணியில் வேலைசெய்தலுமாகிய இரண்டு வேலைகளையும் செய்யவேண்டியதால் மிகவும் சிரமப்பட்டனர். நாட்டில் நிலவிய பஞ்சம் வேறு அவாகளை வாட்டியது. ஒருவருக்கொருவர் மிகவும் தாராளமாக உதவிசெய்யவேண்டிய நேரம் அது. திருப்பித்தருவதை எதிர்பாராமல் கொடுக்கவேண்டிய தருணம் அது.

வசனம் 5:11-12

நீங்கள் இன்றைக்கு அவர்கள் நிலங்களையும், அவர்கள் திராட்சத்தோட்டங்களையும், அவர்கள் ஒலிவத்தோப்புகளையும், அவர்கள் வீடுகளையும், நீங்கள் பணத்திலும் தானியத்திலும் திராட்சரசத்திலும் எண்ணெயிலும் நூற்றுக்கொன்று வீதமாக அவர்களிடத்தில் தண்டிவருகிற வட்டியையும், அவர்களுக்குத் திரும்பக் கொடுத்துவிடுங்கள் என்றேன். அதற்கு அவர்கள்: நாங்கள் அதைத் திரும்பக் கொடுத்துவிட்டு, இனி அப்படி அவர்களிடத்தில் கேட்கமாட்டோம். நீர் சொல்லுகிறபடியே செய்வோம் என்றார்கள். அப்பொழுது நான் ஆசாரியர்களை அழைத்து, அவர்கள் இந்த வார்த்தையின்படி செய்ய அவர்களை ஆணையிடுவித்துக்கொண்டேன்.

இப்போது நெகேமியா அவர்களுக்குக் கட்டளை விதிக்கிறான். அவர்களுடைய நிலங்களையும் திராட்சத் தோட்டங்களையும் ஒலிவத்தோப்புகளையும் வீடுகளையும் நீங்கள் பணத்திலும் தானியத்திலும் திராட்சைரசத்திலும் எண்ணெயிலும் நீங்கள் தண்டிவருகிற பணத்தையும் வட்டி பங்குகளையும் திருப்பிக்கொடுத்து விடுங்கள். அதை இன்றைக்கே செய்யுங்கள் என்று கூறுகிறான்.

கட்டளை: எந்தக் கடனுக்கும் வட்டி இருக்கக்கூடாது. கடன்பாக்கிகள் எல்லாம் மன்னிக்கப்பட வேண்டும் என்ற கட்டளை அது. எல்லா பிரபுக்களும் இந்தக் கட்டளையை உடனே ஏற்றுக்கொண்டனர். ஞானமுள்ளவனைக் கடிந்துகொள், அவன்

உன்னை நேசிப்பான் என்று வேதம் கூறுகிறது (நீதி.9:8). அவர்களும் நெகேமியாவின் கடிந்துகொள்ளுதலை உடனே ஏற்றுக்கொண்டதால் ஞானமுள்ளவர்கள் எனக் கொள்ளப்படுதல் வேண்டுமன்றோ? நீர் சொல்லுகிறபடியே செய்கிறோம் என்று அவர்கள் கூறியவுடன், நெகேமியா ஆசாரியரை அழைப்பித்து, அந்த வார்த்தையின்படியே செய்ய அவர்களை ஆணையிடுவித்துக்கொண்டான்.

வசனம் 5:13

நான் என் வஸ்திரத்தை உதறிப்போட்டு, இப்படி இந்த வார்த்தையை நிறைவேற்றாத எந்த மனிதனையும் அவன் வீட்டிலும் அவன் சம்பாத்தியத்திலும் இருந்து தேவன் உதறிப்போடக்கடவர். இந்தப்பிரகாரமாக அவன் உதறிப்போடப்பட்டு, வெறுமையாய்ப் போவானாக என்றேன். அதற்குச் சபையார் எல்லாரும் ஆமென் என்று சொல்லி, கர்த்தரைத் துதித்தார்கள். பின்பு ஜனங்கள் இந்த வார்த்தையின்படியே செய்தார்கள்.

நெகேமியா எழுந்து தன் வஸ்திரத்தை உதறிப்போட்டு, இப்படி இந்த வார்த்தையை நிறைவேற்றாத எந்த மனிதனையும் அவன் வீட்டிலும், அவன் சம்பாத்தியத்திலுமிருந்து தேவன் உதறிப்போடக்கடவர் என்று கூறினான். அதற்குச் சபையார் எல்லாரும் ஆமென் என்று சொல்லி, கர்த்தரைத் துதித்தார்கள். இவ்விஷயத்தில் நெகேமியா எல்லாரையும் ஒருமனப்படச் செய்தான். அவர்களின் தவறான போக்கு பெரியதொரு குழப்பத்தையும் பிரிவினையையும் உண்டாக்கக்கூடியதாயிருந்திருக்கும். ஆனால் நெகேமியா தனது தகுதியான வார்த்தைகளினால் அவர்களுடைய குற்றங்களை, அவர்களுக்கு உணர்த்திக்காட்டி, தேவனுக்குப் பயந்து அவர் வழிகளில் நடக்க வேண்டும் என்பதை அவர்களுக்கு விளங்கச் செய்தான். அவர்கள் தவறுகிறவர்களாயிருந்தால் தங்கள் செயல்களுக்காக கர்த்தருக்கல்லவோ கணக்குச் சொல்ல வேண்யவர்களாயிருப்பர்.

வசனம் 5:14-18

நான் யூதாதேசத்திலே அதிபதியாயிருக்கும்படி ராஜாவாகிய அர்தசஷ்டா எனக்குக் கற்பித்த நாளாகிய அவருடைய இருபதாம் வருஷம் தொடங்கி, அவருடைய முப்பத்திரண்டாம் வருஷம்வரைக்கும்மிருந்த பன்னிரண்டு வருஷகாலமாய், நானும் என் சகோதரரும் அதிபதிகள் வாங்குகிற படியை வாங்கிச் சாப்பிடவில்லை. எனக்கு முன்னிருந்த அதிபதிகள் ஜனங்களுக்குப் பாரமாயிருந்து, அவர்கள் கையிலே அப்பமும் திராட்சரசமும் வாங்கினதும் அல்லாமல், நாற்பது சேக்கல் வெள்ளியும் வாங்கிவந்தார்கள். அவர்கள் வேலைக்காரரர் முதலாய் ஜனங்கள்மேல் அதிகாரம் செலுத்தினார்கள். நானோ தேவனுக்குப் பயந்ததினால் இப்படிச் செய்யவில்லை. ஒரு வயலையாவது நாங்கள் கொள்ளவில்லை. அந்த அலங்கத்தின் வேலையிலே முயன்று நின்றேன். என் வேலைக்காரரனைவரும் கூட்டமாய் அந்த வேலைக்குக் கூடிவந்தார்கள். யூதரும் மூப்பருமான நூற்றைம்பதுபேரும், எங்களைச் சுற்றிலுமிருக்கிற புறஜாதிகளிடத்திலிருந்து எங்களிடத்திற்கு வந்தவர்களும் என் பந்தியில் சாப்பிட்டார்கள். நாளொன்றுக்கு ஒரு காளையும், முதல்தரமான ஆறு ஆடும் சமைக்கப்பட்டது. பத்துநாளைக்கு ஒருதரம் நானாவிதத் திராட்சரசமும் செலவழிந்தது. இப்படியெல்லாம் இருந்தபோதும், இந்த ஜனங்கள் பட்டபாடு கடினமாயிருந்தபடியால், அதிபதிகள் வாங்குகிற படியை நான் வாங்கவில்லை.

இவ் வசனங்களிலிருந்து நெகேமியா யூதாவின் தேசத்திலே 12 ஆண்டு காலம் ஓர் அதிபதியாகப் பணியாற்றினான் என்பது தெரியவருகிறது. நெகேமியா எவ்வாறு வாழ்ந்தான் என்பதனை இவ்வசனங்களில் விளக்குகிறான். அவன் அதிபதியாகப் பணியாற்றிய காலங்களிலே அவன் அதிபதிகள் வாங்குகிற படியை வாங்கவில்லை. அவனுக்கு முன் இருந்த அதிபதிகள் ஜனங்களுக்குப் பாரமாயிருந்து அவர்கள் கையிலே அப்பமும் திராட்சைரசமும் 40 சேக்கல் வெள்ளியும் வாங்கி வந்தார்கள். நெகேமியா இதனை அவர்கள் ஜனங்களுக்குப் பாரமாயிருந்தார்கள் என்று கூறுகிறான். அதிபதிகளின் வேலைக்காரார்கள் முதலாய் ஜனங்களின்மேல் அதிகாரம் செலுத்தினார்கள் என்று வேதம் கூறுகிறது. நெகேமியா தனது வேலையைப் பற்றிக்

கூறும்போது சுருக்கமாக, நான் அவ்வாறு செய்யவில்லை என்று கூறுகிறான். அதற்குக் காரணம் அவன் நான் தேவனுக்குக் பயந்ததினால் என்று கூறுகிறான். சாலோமோன் குறிப்பிடும்போது கர்த்தருக்குப் பயப்படுத்தலே ஞானத்தின் ஆரம்பம் என்று கூறுகிறான் (நீதி.1:7). ஒரு வயலையாவது நாங்கள் கொள்ளவில்லை, அந்த அலங்கத்தின் வேலையிலே முயன்று நின்றேன் என்று கூறும் நெகேமியா, தன்னைப் பணக்காரனாக்கிக்கொள்ள அங்கு வாழ்ந்திருக்கவில்லை. கர்த்தருடைய வேலையயைச் செய்யவே அங்கு இருந்தான். அவனுடைய வேலைக்காரர் அனைவரும் அவனுடனே இருந்தனர். என் வேலைக்காரர் அனைவரும் கூட்டமாய் அந்த வேலைக்கு கூடி வந்தார்கள் என்று நெகேமியா எழுதுகிறான். அந்த வேலைக்காரர் தேவனுக்கென்று விடாமுயற்சியுடன் இருந்தால் தேவனுடைய திருப்பணிக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டனர்.

ஒவ்வொரு கிறிஸ்தவனும், தேவனுடைய பணிக்குத் தடங்கல் வராதபடி, தங்களின் உரிமைக் கோரிக்கைகளை ஒதுக்கி வைக்கவேண்டும் (1.கொரி.9:12). அது நமக்கு ஒருவேளை பேரிழப்பை உண்டாக்கலாம். நெகேமியாவிற்குக்கூட அதிக நஷ்டம் உண்டானதை வேதம் கூறுகிறது. அவன் அவனுடனிருந்த 150 பேர்களடங்கிய ஒரு கூட்டத்தினரையும், மற்றும் பலரையும் போஷிக்கவேண்டியிருந்தது. ஒவ்வொரு நாளும் அவர்களுக்கு அளிக்கப்படவேண்டிய நல்லுணவின் விளக்கத்தைக் கூறுமிடத்து, ஒரு காளையும், ஆறு ஆடுகளும், கோழிகளும், திராட்சைரசம் ஆகிய அனைத்தையும் என்று அவன் கூறிப்பிடுகிறான் என்ற போதிலும், அவன் ஓர் அதிபதி என்ற முறையில் பெறப்படவேண்டிய படிகளை அவன் கோரிப்பெறவில்லை. அதுமட்டுமல்ல அவன் அந்தப்படிகளைப் பெறாததற்குக் கூறும் இரண்டாவது காரணம், அது ஜனங்களின்மீது பாரமான ஒரு சுமையாகும் என்கிறான். ஆகவே நெகேமியா தேவனுக்குப் பயந்து நடந்தது மட்டுமன்றி ஜனங்களுக்காக மிகவும் பரிவுகாட்டும்படியும் நடந்துகொள்கிறான். நியாயசாஸ்திரி கூறும் நியாயப்பிரமாண சட்டத்தின்படியே, நெகேமியா நடந்து கொண்டான் எனக் கூறலாம். உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும், உன் முழுச் சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக.

சில வேளைகளில் நாம் நமது தேவனிடத்தில் முழு இருதயத்தோடும் அன்புகூருவதாகக் கூறிக்கொண்டு, நம்முடன் வசிக்கும் ஒருவருக்கு, பணமோ, பொருளோ, உதவியாகக் கொடுக்க முன்வருவதில்லை. இது கிறிஸ்தவ சமயத்தின் இருமனமுள்ள வாழ்க்கையாகும். நன்மை, தீமை ஆகிய இரண்டிற்குமே நாம் தேவனுக்கு கணக்கொப்புவிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

வசனம் 5:19

என் தேவனே, நான் இந்த ஜனத்துக்காகச் செய்த எல்லாவற்றின்படியும் எனக்கு நன்மையுண்டாக என்னை நினைத்தருளும்.

இப்போது நெகேமியா, நான் இந்த ஜனத்திற்காக செய்த எல்லாவற்றின்படியும் எனக்கு நன்மையுண்டாக என்னை நினைத்தருளும் என்று உரிமையோடு கேட்கத்தக்க தகுதியுள்ளவனாய் தேவனுடைய சந்திதிமுன் செல்கிறான்.

# 06. பகைஞரின் வஞ்சனை

அதிகாரம் 6

<u>பகைஞரின் வஞ்சனை</u>

வசனம் 6:1-2

நான் அலங்கத்தைக் கட்டிமுடித்ததையும், இனி அதிலே திறப்பு ஒன்றுமில்லை என்பதையும், சன்பல்லாத்தும், தொபியாவும், அரபியனான கேஷேமும் எங்களுக்குண்டாயிருந்த மற்றப் பகைஞரும் கேள்விப்பட்டபோது, நான் வாசல்களுக்கு இன்னும் கதவுபோடாதிருக்கையில், சன்பல்லாத்தும், கேஷேமும் ஆள் அனுப்பி: நாம் ஓனோ பள்ளத்தாக்கில் இருக்கிற கிராமங்கள் ஒன்றில் ஒருவரையொருவர் கண்டு பேசுவோம் வாரும் என்று கூப்பிட்டார்கள். அவர்களோவென்றால் எனக்குப் பொல்லாப்புச்செய்ய நினைத்தார்கள்.

சன்பல்லாத்தும், தொபியாவும் அரபியனாகிய கேஷமும் தீங்கு செய்வதை விட்டு ஓயவில்லை. தந்திரமுள்ள சாத்தானும் அப்படித்தானே. தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள். விழித்திருங்கள். ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசனவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித் திரிகிறான் (1.பேது.5:8) என்று வேதம் கூறுகிறதன்றோ? சாத்தான் எப்போதும் விழிப்பாகவே இருக்கிறான். நம்முடைய பெலவீனங்களை நன்கு அறிந்து வைத்து நம்மைச் சோதனைக்குட்படுத்தக் காத்திருக்கிறான். கிறிஸ்தவர்களாகிய நம்மைத் தாக்குவதற்கு எப்போதும் காத்து நிற்கும். அவன், நம்மை வீழ்த்தும்போது அது நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிற்கு தோல்வியாகவன்றோ உள்ளது. அதுதான் அவனுடைய நோக்கமும்கூட. அவன் தந்திரமுள்ளவனாகவும் கூட இருக்கிறான். அவன் ஏவாளிடம் வந்தபோது எவ்வளவு தந்திரமாகப் பேசினான். அவளைத் தாக்கவேயில்லை. தேவன் கூறியது என்ன? என்று கேட்டு அவளுக்குப் பிடித்தமானதைபேசி அவளை வஞ்சித்துப் போட்டானன்றோ? (ஆதி.3:1-6, யோ.2:16).

அந்நாட்களில் தொலைபேசி வசதிகள் இருந்ததில்லையெனின்னும், மதில்கள் கட்டி முடிக்கப்பட்ட என்ற செய்தி வெகு துரிதமாய்ப் பரவியது. மதில்கள் கட்டி முடிக்கப்பட்ட அந்தச் செய்தியை பகைஞரிடையே வெகு தொலைவிற்குப் பரவியது. வாசல்களிலே கதவுகள் மட்டுமே போடவேண்டியிருந்தது. இப்போது சன்பல்லாத்தும், கேஷேமும் ஒரு புதிய யுக்தியை நிதானமான யுக்தியை முயற்சி செய்து பார்க்கின்றனர். நெகேமியாவைச் சந்தித்துப்பேச விரும்புவதாக ஓர் அழைப்பை அனுப்புகிறார்கள். நாம் ஓனோ பள்ளத்தாக்கில் இருக்கிற கிராமங்களில் ஒன்றில் ஒருவரையொருவர் கண்டு பேசுவோம் வாரும் என்று அழைப்பித்தார்கள். சந்தித்துப் பேசுவோம் என்பது நல்லதுதானே? எல்லாரும் சந்தித்து ஒன்றாக இணைவது நல்லதாய்த்தானே இருக்கும் என்றுதான் நாம் எண்ணுவோம்.

வசனம் 6:3

அப்பொழுது நான் அவர்களிடத்திற்கு ஆட்களை அனுப்பி: நான் பெரிய வேலையைச் செய்கிறேன், நான் வரக்கூடாது. நான் அந்த வேலையைவிட்டு உங்களிடத்திற்கு வருகிறதினால் அது மினக்கட்டுப்போவானேன் என்று சொல்லச்சொன்னேன்.

ஆனால் நெகேமியாவிற்கு அது அவ்வாறு படவில்லை. வேதத்தில் பகைஞன் தன் உள்ளத்தில் கபடத்தை மறைத்து, தன் உதடுகளினால் சூது பேசுகிறான். அவன் இதம் பேசினாலும் அவனை நம்பாதே, அவன் இருதயத்தில் ஏழு அருவருப்புகள் உண்டு. நீதி.26:24-25 எனக் கூறப்பட்டுள்ளதை நெகேமியா நன்கு அறிவான். முதலாவது அத்தகைய ஒரு முயற்சியில், ஓனோ சமவெளியில் செல்லுவதற்கு நெகேமியாவிற்கு குறைந்தது ஒருநாள் பொழுது நேரமாவது பிடிக்கும். அது மட்டுமன்றி அது பகைஞரின்

நாட்டைச் சேர்ந்த பகுதியாகும். மேலும் இம்மாதிரியாக ஒரு திட்டம் தனக்கு தீங்கு செய்ய அவர்கள் தீட்டிய திட்டமேயென்றும் அவனுக்கு நன்கு தெரியும். ஆகையால் அவன் அவர்களுக்குப் பதில் செய்தியாக, நான் பெரிய வேலையைச் செய்கிறேன். நான் வரக்கூடாது. நான் அந்த வேலையை விட்டு உங்களிடத்திற்கு வருகிறதினால் அது மினக்கட்டுப்போவானேன் என்று சொல்லியனுப்பினான். நாமும் பல வேலைகளை நமது தேவனாகிய கர்த்தருக்கு செய்யவேண்டியவர்களாயிருக்கிறோம். நமது பகைஞுரைச் சந்திக்கச் செல்வதனால் நமது நேரத்தை வீணடிக்கவேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் நாமும்கூட ஒரு பெரிய வேலையைத்தான் தேவனுக்காகச் செய்கிறோம்.

வசனம் 6:4

அவர்கள் இந்தப்பிரகாரமாக நாலுதரம் எனக்குச் சொல்லியனுப்பினார்கள். நானும் இந்தப்பிரகாரமாகவே அவர்களுக்கு மறுமொழி அனுப்பினேன்.

ஆனால் நெகேமியாவின் பகைஞர்கள் எளிதாக சோர்வுக்குள்ளாகவில்லை. நான்கு முறை, அவ்வாறே நெகேமியா தங்களுடன் வந்து பேசவேண்டுமென்று, பல தந்திரங்களைச் செய்ய முயன்றனர். ஆனால் ஒவ்வொரு முறையும் நெகேமியா அதே பதிலையே அவர்களுக்குச் சொல்லியனுப்பினான். விரோதிகளின் தந்திரமான வஞ்சனை அழைப்புகளைச் சமாளிக்கவேண்டிய வழி இல்லை, முடியாது என்பதுதான் என்று அவனுக்கு நன்கு தெரியும்.

வசனம் 6:5-7

ஐந்தாந்தரமும் சன்பல்லாத்து அந்தப் பிரகாரமகவே தன் வேலைக்காரனையும், அவன் கையிலே முத்திரைபோடாத ஒரு கடிதத்தையும் எனக்கு அனுப்பினான். அதிலே: நீரும் யூதரும் கலகம்பண்ண நினைக்கிறீர்கள் என்றும், அதற்காக நீர் அலங்கத்தைக் கட்டுகிறீர் என்றும், இவ்விதமாக நீர் அவர்களுக்கு ராஜாவாகப் போகிறீர் என்றும், யூதாவிலே ஒரு ராஜா இருக்கிறார் என்று உம்மைக்குறித்து எருசலேமிலே கூறுகிற தீர்க்கதரிசிகளையும் சம்பாதித்தீரென்றும் புறஜாதிகளுக்குள்ளே பிரஸ்தாபமாயிருக்கிறது, கஷ்மூவும் அப்படிச் சொல்லுகிறான். இப்போதும் அந்தச் செய்தி ராஜாவுக்கு எட்டுமே. ஆகையால் நாம் ஒருவரோடொருவர் ஆலோசனைபண்ணுகிறதற்காக நீர் வரவேண்டும் என்று எழுதியிருந்தது.

சன்பல்லாத்து எரிச்சலடையத் தலைப்பட்டான். தமது கபடவலையில் நெகேமியா விழவில்லையே என்பது அவன் கவலை. ஆகையால் அவன் வேறு திட்டங்களில் ஈடுபடலானான். அடுத்து சன்பல்லாத்து, முத்திரை போடாத ஒரு கடிதத்தை எழுதி அதை தனது வேலைக்காரனிடம் கொடுத்து நெகேமியாவிடம் அனுப்பினான். அக்கடிதத்தில் பல பொய்கள் எழுதப்பட்டிருந்தன. அதிலே, நீரும் யூதரும் கலகம்பண்ண நினைக்கிறீர்கள் என்றும், அதற்காக நீர் அலங்கத்தைக் கட்டுகிறீர் என்றும், இவ்விதமாக நீர் அவர்களுக்கு இராஜாவாகப் போகிறீர் என்றும், யூதாவிலே ஒரு ராஜா இருக்கிறார் என்றும் உம்மைக் குறித்து எருசலேமிலே கூறுகிற தீர்க்கதரிசிகளையும் சம்பாதித்தீர் என்றும் புறஜாதிகளுக்குள்ளே பிரஸ்தாபமாயிருக்கிறது. இப்போதும் இந்தச் செய்தி ராஜா அர்த்தசஷ்டாவுக்கு எட்டுமே. ஆகையால் நாம் ஒருவரோடொருவர் ஆலோசனை பண்ணுகிறதற்காக நீர் வர வேண்டும்... என்று எழுதப்பட்டிருந்தது.

வசனம் 6:8-9

அதற்கு நான்: நீர் சொல்லுகிற அந்தக் காரியங்களில் ஒன்றும் நடக்கவில்லை. அவைகள் உம்முடைய மனோராஜ்யமே ஒழிய வேறல்ல என்று சொல்லியனுப்பினேன். அந்த வேலை நடந்தேறாதபடிக்கு, எங்கள் கைகள் சலித்துப்போம் என்று சொல்லி, அவர்கள் எல்லாரும் எங்களைப் பயமுறுத்தப்பார்த்தார்கள். ஆதலால் தேவனே, நீர் என் கைகளைத் திடப்படுத்தியருளும்.

சன்பல்லாத்து, உண்மையில் மிகவும் தந்திரம் நிறைந்தவன். தனது கடிதத்தில் அவன் கூறுவதுபோல் எதையும் எழுதவில்லை. அவர்கள் கூறுகிறார்கள் என்று தந்திரமாகக் கூறுகிறான். நெகேமியா ஏதோ ஒரு சிக்கலில் சிக்கியிருப்பதாக எழுதி, அவனுக்கு இருந்த ஒரே வழி அவனுடன் வந்து பேசவேண்டியதே என்று அக்கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தான். அவ்வாறு கூறப்பட்டுள்ளவைகளை மறுக்க, நெகேமியா மறுபடியும் அவைகளைக் கூறி அறிவிக்கவேண்டியிருந்தது. அதைப் புறக்கணிக்கவும் முடியாதபடி அது இருந்தது. ஆகையால் நெகேமியா, சன்பல்லாத்தின் கடிதத்திற்குப் பதில் அளித்தான். அந்தப் பதில் செய்தியில் நீர் சொல்லுகிறபடி அந்தக் காரியங்களில் ஒன்றும் நடக்கவில்லை. அவைகள் உம்முடைய மனோராஜ்யமே ஒழிய வேறல்ல என்று சொல்லியனுப்பினான். அந்தப் பதில் சுருக்கமானதாக இருந்தது.

சன்பல்லாத்து, யூதர்கள் தங்கள் கட்டும்பணியை நிறுத்திவிடும்படி அவர்களைப் பயமுறுத்தவே இதையெல்லாம் செய்கிறான் என்று நெகேமியாவிற்கு நன்கு தெரியும். இம்மாதிரியான அவதூறுகள் இராஜாவிற்கு அறிவிக்கப்பட்டால், அவர்களுக்கு மரணதண்டனை கிடைக்குமன்றோ? அதனால்த்தான் நெகேமியா தேவனே நீர் என் கைகளைத் திடப்படுத்தியருளும் என்று ஜெபம்செய்கிறான். உதவிக்கு எங்கே செல்வதென்று அவனுக்கு நன்கு தெரியும். தேவனுக்கு நீ செய்யும் வேலை தடைபடும்படி ஏதாகிலும் பயமுறுத்தல் உனக்கு ஏற்படுவதுண்டோ? அதை கர்த்தரிடத்திற்கு நீ கொண்டுபோ. அவர் உன்னைத் திடப்படுத்துவார்.

வசனம் 6:10-11

மெகதாபெயேலின் குமாரனாகிய தெலாயாவின் மகன் செமாயா தன் வீட்டிலே அடைக்கப்பட்டிருக்கும்போது, நான் அவனிடத்தில் போனேன். அப்பொழுது அவன்: நாம் இருவருமாய் தேவனுடைய வீடாகிய ஆலயத்துக்குள்ளே போய், தேவாலயத்தின் கதவுகளைப் பூட்டுவோம் வாரும். உம்மைக் கொன்றுபோட வருவார்கள், இரவிலே உம்மைக் கொன்றுபோட வருவார்கள் என்றான். அதற்கு நான்: என்னைப்போன்ற மனிதன் ஓடிப்போவானோ? என்னைப் போன்றவன் உயிர் பிழைக்கும்படி தேவாலயத்திலே போய்ப் பதுங்குவானோ? நான் போவதில்லை என்றேன்.

நெகேமியாவின் முயற்சிகள் முற்றுப்பெறவில்லை. அடுத்து யாது நடைபெறும் என்பது சொல்லக்கூடாததாயிருந்தது. அவனுடைய பகைஞர் தொடர்ந்து பல இன்னல்களைச் செய்த வண்ணமேயிருந்தனர். சிரித்தனர். பரிகாசம், சக்கந்தம் செய்து பார்த்தனர். பொய் கூறி போர்முரசு ஓங்கி பயங்காட்டினர். இதுமட்டுமா, அவனுடைய ஜனங்களே வட்டிவாங்குதல் அடைமானம் கொள்ளுதல் ஆகியவற்றினால் பலதொல்லைகளையும் உண்டாக்கினர். மேலும் அவன் சற்றும் எதிர்பாராத சில பொய்த்தீர்க்கதரிசிகள் அவனுடைய ஜனங்களுக்குள்ளே தோன்றித் தீதுரைக்க ஆரம்பித்தனர்.

நெகேமியா அவனோடு பேச விரும்பிய செமாயா என்பவனின் வீட்டுக்குப் போனான். இந்தச் செமாயா, சன்பல்லாத்து, தொபியா என்பவர்களின் கையாளகச் செயல்ப்படுவான் என்று நெகேமியா ஒருநாளும் நினைக்கவேயில்லை. செமாயாவும், சன்பல்லாத்தும் கடைசியாகச் செய்த முயற்சி போன்றதொரு சூழ்ச்சியையே செய்ய முயற்சி செய்தான். நெகேமியாவின் உயிருக்கு ஆபத்து வந்துவிட்டதைப் போலவும் அதைக் கண்டு அவன் மிகவும் கலக்கமடைவதுபோலவும் ஒரு பாசாங்கு செய்தான். அவன், நாம் இருவருமாய் தேவனுடைய வீடாகிய ஆலயத்துக்குள்ளேபோய், தேவாலயத்தின் கதவுகளைப் பூட்டுவோம் வாரும். உம்மைக் கொன்றுபோட வருவார்கள். இரவிலே உம்மைக் கொன்றுபோட வருவார்கள் என்று நெகேமியாவிடம் கூறினான்.

இவை மிகவும் அச்சுறுத்தும் வார்த்தைகளே. நெகேமியாவின் விரோதிகள், அன்று இரவே வந்து அவனைக் கொன்றுபோட வருவார்கள் என்று அவன் அறிந்திருந்ததாகக் கூறினான். எத்தனை கலக்கமான வார்த்தைகள். செமாயா தேவனுடைய

ஆலயத்துக்குள்ளே நெகேமியா தன்னுடன் வந்து ஒளிந்துகொள்ளவேண்டும் என்று அவனை அழைக்கிறான். பத்திரமான இடம்தான். ஒளிந்துகொள்ளவேண்டியதுதான்.

நெகேமியா அந்த அளவிற்கு கோழையல்ல. அதுபோன்றதொரு கோழைத்தனமான எண்ணம் அவனுக்கு ஒருநாளும் ஏற்பட்டதில்லை. அதற்கு அவன் என்னைப் போன்ற மனிதன் ஓடிப்போவானோ? என்னைப் போன்றவன் உயிர் பிழைக்கும்படி தேவாலயத்தில் போய்ப் பதுங்குவானோ? நான் போவதில்லை என்று ஆணித்தரமாக கூறினான். அவனுடைய பதில் சுடச்சுட இருந்தது. அவன் மரணத்திற்கு அஞ்சவில்லை. தேவனுடைய ஆலயத்திற்குள் செல்வதென்பது, அவன் ஆசாரியனல்லாததினால் அவனுக்குத் தகாததாயிருந்தது.

வசனம் 6:12-13

தேவன் அவனை அனுப்பவில்லையென்றும், தொபியாவும் சன்பல்லாத்தும் அவனுக்குக் கூலிகொடுத்ததினால், அவன் எனக்கு விரோதமாய் அந்தத் தீர்க்கதரிசனத்தைச் சொன்னான் என்று அறிந்துகொண்டேன். நான் பயந்து அப்படிச் செய்து பாவங் கட்டிக்கொள்ளுகிறதற்கும், என்னை நிந்திக்கத்தக்க அபகீர்த்திக்கு முகாந்தரம் உண்டாக்குகிறதற்கும் அவனுக்குக் கைகூலி கொடுத்தார்கள்.

அடுத்து நெகேமியா ஒன்றை அறிந்துகொண்டான். அதாவது செமாயா தேவனால் அனுப்பப்படவில்லையென்றும், தொபியா சன்பல்லாத்தும் அவனுக்கு கூலிகொடுத்ததினால் அவன் தனக்கு விரோதமாய் அந்தத் தீர்க்கதரிசனத்தைச் சொன்னான் என்று அவன் அறிந்துகொண்டான்.

பாவத்திற்கு மட்டுமே அஞ்சவேண்டும். வேறொன்றிற்கும் அல்ல, என்பதனை நெகேமியா நன்கு அறிந்திருந்தான். அந்தத் தீர்க்கதரிசிகள் ஏன் அவ்வாறு செய்தார்கள் என்று அவன் சிந்திக்கலானான். ஒருவேளை நெகேமியா பயந்து அஞ்சி, தேவாலயத்திற்குள் ஓடி ஒளிந்து கொண்டிருத்தல், அது அவனுக்கும் அவனிடமிருந்தவர்களுக்கும் மிகவும் இக்கட்டை உண்டாக்கியிருக்கும். அவன் ஆசாரியன் அல்லாததினால் ஆலயத்திற்குள் பிரவேசித்தல் என்பது வேதபிரமாணத்திற்கு விரோதமான செயல் ஆகும். அவனைப்போல பயந்த மற்ற யாவரும்கூட அவ்வாறே ஒளிந்து கொண்டிருப்பார்கள் அல்லவா? அப்போது சன்பல்லாத்தும் தொபியாவும் நெகேமியாவைப் பிடித்து எல்லாருக்கும் முன்னிலையிலும் குற்றம் சுமத்தி நிறுத்தியிருப்பார்களன்றோ? பெரிய குழப்பம் ஏற்பட்டு கட்டும் பணி நிறுத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஆனால் அதுபோல் ஒன்றும் நடக்கவில்லை.

நெகேமியாவிற்குண்டான தைரியம் வியத்தகு ஒன்றன்றோ? இயேசு கிறிஸ்து ஏரோதுக்குப் பயந்து ஓடிவிட மறுத்துவிடவில்லையா (லூக்.13:31-33)? பவுல் அப்போஸ்தலனும், நீ எருசலேமுக்குப் போனால் கட்டப்படுவாய் என்று கூறப்பட்டபோதும் அஞ்சாமல் எருசலேமில் ஊழியம் செய்தான் அன்றோ (அப்.21:10-14)?

வசனம் 6:14

என் தேவனே, தொபியாவும் சன்பல்லாத்தும் செய்த இந்தச் செய்கைகளுக்குத்தக்கதாக நீர் அவர்களையும், நொவதியாள் என்னும் தீர்க்கதரிசியானவளையும், எனக்குப் பயமுண்டாக்கப் பார்த்த மற்றத் தீர்க்கதரிசிகளையும் நினைத்துக்கொள்ளுங்கள்.

மேல் குறிப்பிடப்பட்டுள்ள சதி செயலில் செமாயா என்ற ஒரு தீர்க்கதரிசி மட்டுமன்றி வேறு சில தீர்க்கதரிசிகளும் நொவதியாள் என்ற ஒரு பெண் தீர்க்கதரிசினியும் சம்மந்தப்பட்டிருப்பதை நாம் அறியமுடிகிறது. நெகேமியாவைக் கறைப்படுத்தும் சூழ்ச்சியை இவர்கள் அனைவரும் சேர்ந்தே செய்துள்ளனர் என்று வேதம் கூறுகிறது. என்னே இவர்களின் இழிச்செயல்! தலைவர்களான சிலர், உடனிருந்தவர்களிலிருந்து

புறப்பட்டு, பகைஞரின் பணத்திற்கு ஆசைப்பட்டு, தேவனுடைய வேலையைக் கெடுக்க முற்படுவது எத்துணை கேவலம்! இதுபோலத்தான் யூதாஸ்காரியோத்தும் ஆண்டவருடனேயிருந்துகொண்டே அவரைக் காட்டிக்கொடுக்கத் துணிந்தானன்றோ (மத்.26:14-16). ஆகையால் தேவனுடைய பிள்ளைகள் பரிசுத்த ஆவியினாலே நடத்தப்பட்டு, இத்துணை வஞ்சகர்களை அடையாளம் காண மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். நெகேமியா தேவனை நோக்கி, இவர்களை நினைத்துக்கொள்ளும் என்று மட்டுமே ஜெபிக்கிறான். அவர்கள் செய்த இந்தச் செய்கைகளுக்குத் தக்கதாக அவர்களை நினைத்துக்கொள்ளும் என்று சொல்லுகிறான். நாமும் நமது செயல்களுக்காகத் தேவனால் நியாயம் தீர்க்கப்படுவோம் (1.கொரி.3:11-15). நாம் தேவனால் நியாயம் தீர்க்கப்படத்தக்கதாய் எதைச் செய்தாலும், அதிலிருந்து விடுபடுவது நல்லது.

வசனம் 6:15-16

அப்படியே அலங்கமானது ஐம்பத்திரண்டு நாளைக்குள்ளே கட்டப்பட்டு, எலூல் மாதம் இருபத்தைந்தாந்தேதியிலே முடிந்தது. எங்கள் பகைஞர் எல்லாரும் அதைக் கேட்டபோதும், எங்கள் சுற்றுப்புறத்தாராகிய புறஜாதியான அனைவரும் கண்டபோது, மிகவும் முனையற்றுப்போய், இந்தக் கிரியை எங்கள் தேவனால் கைகூடி வந்ததென்று அறிந்தார்கள்.

இப்போது மிகவும் முக்கியமான கட்டத்தில் நெகேமியாவும் அவனுடைய மனுஷரும் இருப்பதைக் காண்கிறோம். அலங்கமானது.... கட்டப்பட்டு முடிந்தது. இது ஒரு சிறிய சொற்றொடர்தான். ஆனால் அவர்களுக்கு எவ்வளவு திருப்தி அளிக்கக்கூடியதொன்றான செயல். கடைசியாக அவர்களின் விடா முயற்சிகளும், பல வகையான பயங்களும், கடினமான உழைப்பும் தந்த பலன். அலங்கமானது கட்டப்பட்டு முடிந்தது. அது கட்டப்பட்டு முடிய 52 நாட்கள் ஆயின. நமது ஆண்டவராகிய இயேசு சிலுவையில் அறையப்பட்டு நடக்காக ஜீவனைவிட்டபோதும் அவ்வாறே ஒரு வார்த்தையைச் சொன்னார். எல்லாம் முடிந்தது. எல்லா துயரங்களும் துன்பங்களும் முடிவுற்றன. அவருடைய பணிகள் யாவும் முடிந்தன. பவுல் அப்போஸ்தலனும் , நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன் என்று சொன்னார் (2.தீமோ.4:7).

அதன் விளைவாக, அவர்களைச் சூழ இருந்த பகைஞர் மிகவும் முனையற்றுப் போனார்கள். இந்தக் கிரியை தேவனால் கைகூடி வந்ததென்று அவர்கள் அறிந்திருந்தார்கள்.

வசனம் 6:17-19

அந்த நாட்களில் யூதாவிலுள்ள பெரிய மனிதரிடத்திலிருந்து தொபியாவுக்குப் போகிறதும், தொபியாவினிடத்திலிருந்து அவர்களுக்கு வருகிறதுமான கடிதங்கள் அநேகமாயிருந்தது. அவன் ஆராகின் குமாரனாகிய செகனியாவுக்கு மருமகனாயிருந்ததும் அல்லாமல், அவன் குமாரனாகிய யோகனான் பெரகியாவின் குமாரனாகிய மெசுல்லாமின் குமாரத்தியை விவாகம்பண்ணியிருந்தபடியாலும், யூதாவில் அநேகர் அவனுக்கு ஆணையிட்டுக் கொடுத்திருந்தார்கள். அவன் செய்யும் நன்மைகளையும் அவர்கள் எனக்கு முன்பாக விவரித்து, என் வார்த்தைகளை அவனுக்குக் கொண்டுபோவார்கள். தொபியா எனக்குப் பயமுண்டாகக் கடிதங்களை அனுப்புவான்.

இப்போது நெகேமியா உட்கார்ந்து ஓய்வெடுக்கலாமல்லோ? அவனது கட்டும்பணி முற்றிலும் முடிந்துவிட்டது. அர்த்தசஷ்டா இராஜாவின் அரண்மனையில் இருந்தபோது அவன் செய்துமுடிக்கவேண்டிச் செய்த திட்டங்கள் அனைத்தும் இப்போதுதான் முடிந்துவிட்டதே. ஓய்வா? அதுதான் இல்லை. இப்போதுதான் அதிகக் தொல்லைகள் தலைதூக்க ஆரம்பித்தன. தேவனுடைய மனிதன் எல்லாம் முடிந்தது என்று உட்கார்ந்து ஓய்தல் என்பது முடியாது. எல்லாம் நன்றாக முடிந்துவிட்டது. நான்

கவனத்தைத் தளர்த்தி ஓய முடியும் என்று சொல்லத்தக்க நாள் இவ்வுலகில் நமக்கில்லை.

தொபியா இப்போது எழும்பி நெகேமியாவுக்குப் பலத்த தொல்லைகள் கொடுக்க எத்தனித்துக்கொண்டிருந்தான். அவனும் அவனுடன் சேர்ந்த சன்பல்லாத்தும் மற்ற நண்பர்களும் கொடுத்துக்கொண்டிருந்த தொல்லைகளும் தொடர்ந்துகொண்டேயிருந்தது. அங்கிருந்த பிரதான யூதர்களுடன் தொபியா கொண்ட திருமண உறவுகளினால் மிகவும் நெருக்கமானவனாயிருந்தான். ஆசாரியனான எலியாசீப் என்பவனும் அவனுக்கு நெருக்கமானவனாயிருந்தான் (13:4). அவர்களுடைய செல்வாக்கை தொபியா பயன்படுத்தி, நெகேமியாவுக்குத் தொல்லை கொடுக்க முற்பட்டான். அதிகாரம் அனைத்தையும் செய்யவல்லதன்றோ! அதனால் நெகேமியா மிகவும் அல்லல்பட்டான். இங்கே அதிகாரமும் ஆணவமும் கொண்ட அநேக யூதப்பிரபுக்கள் நன்றிகெட்டவர்களாக, சத்துருவான தொபியாவை ஆதரித்தனர். இந்தப் பெரிய மனிதர்களான தொபியாவின் உறவினர்கள் நெகேமியாவினிடத்தில் வந்து, தொபியா செய்து வந்ததாக பல நன்மைகளை நெகேமியாவினிடத்தில் விவரித்துப் பேசி வந்தார்கள். பல நன்மைகளைப் பற்றி கூறும்படி செய்ததினால் ஒருவேளை தொபியா மனம் மாறிவிட்டானோ என நினைக்கத்தோன்றும். அப்படியல்ல, அடுத்த வாக்கியம் தொபியா எனக்குப் பயமுண்டாகக் கடிதங்கள் அனுப்புவான் என்றுள்ளதல்லவா? நன்மைகளைப் பற்றிக் கூறியனுப்பினவன் யார்? எரேமியா கூறுகிறான். எத்தியோப்பின் தன் தோலையும் சிவிங்கி தன் புள்ளிகளையும் மாற்றக்கூடுமோ? கூடுமானால் தீமை செய்யப் பழகின நீங்களும் நன்மை செய்யக்கூடும் (எரேமி.13:23). அதுபோல் தொபியாவின் தீய எண்ணங்களை யார் மாற்றக்கூடும்?

# 07. பெயர்ப்பட்டியல்

அதிகாரம் 7

பெயர்ப்பட்டியல்

வசனம் 7:1-2

அலங்கம் கட்டிமுடிந்தது, கதவுகள் போடப்பட்டு, வாசல் காவலாளரையும், பாடகரையும், லேவியரையும் ஏற்படுத்தினபின்பு, நான் என் சகோதரனாகிய ஆனானியையும், அநேகரைப் பார்க்கிலும் உண்மையுள்ளவனும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்த அரமனைத்தலைவனாகிய அனனியாவையும், எருசலேமின் காவல் விசாரணைக்கு ஏற்படுத்தினேன்.

அலங்கங்கள் கட்டி முடித்து கதவுகள் போடப்பட்டு விட்டன. எல்லாம் அமைக்கப்பட்டு முடிவுற்றது. 52 நாட்களில் எருசலேமின் அலங்கங்கள் சீரமைத்து முடித்துக் கட்டப்பட்டு யூதர்களுக்குத் தங்கள் பகைஞரிடமிருந்து நல்ல பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுவிட்டது. இந்த மதில்கள் அந்த யூதர்கள் தேவனைத் தனித்து அவரது ஆலயத்தில் தொழவும் வகை செய்தது. தேவனைத் தொழுவதற்கு உதவி செய்ய மூன்று வகை குழு பணியாளர்களை நெகேமியா நியமித்தான் (1) வாசல் காவலாளர் (2) பாடகர் (3) லேவியர். வாசல் காவலாளர் நகருக்கு வாசலைக் கடந்து வருகிறவர்கள்

அனைவரையும் நன்கு கவனிக்கவேண்டும். தீங்கு செய்ய எண்ணம் கொண்டு வருகிறவர்களை அவர்கள் அனுமதிக்கக்கூடாது.

அடுத்து பாடகர்கள் தேவனைத் துதித்துப் பாட இனிய இசைக் குரல்களைக் கொண்ட ஆசாபின் பிள்ளைகள் வழிவந்தவர்கள் பலர் நியமிக்கப்பட்டனர். இனிய பாடலின் குரலோசை எழும்போது தேவனுக்கு எவ்வளவு மகிமை. நீ இன்று தேவனைத் துதித்துப் பாடினாயா?

கடைசிக் குழு லேவியர்கள். தொழுகைப் பணியை முன்னின்று நடத்துபவர்கள். நாம் தேவனுடைய சந்நிதியில் சென்று பாடவும், துதிக்கவும் தொழவும் தகுதியுடையவர்களாய் இருக்கிறோமா?

அடுத்து நெகேமியா ஒருவேளை அரண்மனைப் பணிக்குத் திரும்பிச் செல்ல நினைக்கிறான் போலும். தன் சகோதரனாகிய ஆனானியை எருசலேமைக் காக்கும் பொறுப்பில் நிறுத்துகிறான். முதலாம் அதிகாரத்தில் நாம் வாசிக்கும் அனைத்துச் செயல்களும் நடைபெறத்தக்கதாக நெகேமியாவைத் தூண்டி உற்சாகப்படுத்தியவன் இந்த ஆனானியே. ஆனானிக்கு உதவியாக நெகேமியா அரண்மனைத் தலைவனாகிய அனனனியாவையும் எருசலேமின் காவல் விசாரணைக்கு ஏற்படுத்தினான். இந்த அனனியா, வேதத்தில் அநேகரைப் பார்க்கிலும் உண்மையுள்ளவனும், தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்தவன் என்று விவரிக்கப்படுகிறான். இவ்விதமான ஒரு நற்பெயருடன் வேதத்தில் நினைவுகூரப்படுதல் என்பது எவ்வளவு ஆச்சரியமானது. யோபுவும் தேவனால் உத்தமனும் சன்மார்க்கனும் தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவன்... என்று கூறப்படுகிறான் (யோபு 1:8). அவ்வாறே வேதம் நீதியும் தேவபக்தியும் உள்ளவன் என்று சிமியோனைப் பற்றிக் கூறுகிறது (லூக்.2:5).

வசனம் 7:3

அவர்களை நோக்கி: வெயில் ஏறுமட்டும் எருசலேமின் வாசல்கள் திறக்கப்படவேண்டாம். நீங்கள் நிற்கும்போதே கதவுகளைச் சாத்தித் தாழ்ப்பாள் போட்டு, எருசலேமின் குடிகளில் காவலாளர் அவரவர் தங்கள் காவலிலே, அவரவர் தங்கள் வீடுகளுக்கு எதிராக நிறுத்தப்படவேண்டும் என்றேன்.

அந்நாட்களில் ஒரு நகரத்தின் வாசற்கதவுகளைச் சூரிய உதயத்தின்போது திறப்பதும், சூரிய அஸ்தமனத்தின்போது மூடிவிடுவதும் வழக்கமாக இருந்தது. ஆனால் தனது விரோதிகள் இன்னமும் தீங்கு செய்வதையே நோக்கமாகக் கொண்டிருப்பர் என்று நினைத்து நெகேமியா வெயில் ஏறுமட்டும் எருசலேமின் வாசல்கள் திறக்கப்பட வேண்டாம் என்றும், சூரியன் மாலையில் விழுமுன்பே மூடப்படவேண்டும் என்றும் உத்தரவிட்டான். ஆகையால் நகரத்தின் மதில்களுக்கு வெளியில் யார் வந்து உலாவுகிறான் என்பதை அறிந்துகொள்ள முடியும் அன்றோ? அதுமட்டுமின்றி காவலாளர்களையும் நியமித்து அவர்கள் தங்கள் தங்கள் காவலிடங்களிலும், தங்கள் தங்கள் வீடுகளுக்கு முன்பாகவும் காவல் நின்று காக்கவேண்டும் என்றும் ஏற்படுத்தினான். அந்த ஏற்பாடு மிகவும் நேர்த்தியானது தங்கள் தங்கள் வீட்டை அடுத்து காவல் செய்ய வேண்டும் என்ற நிலை யாவரும் விரும்பி ஏற்றுக்கொள்ளக் கூடியதேயன்றோ (4:13)? நாமும்கூட நமது அன்றாட வாழ்வில் நமது வீட்டுப்புறங்களையடுத்த அனைத்தையும் பாவம் நெருங்காதபடி கருத்தாய்க் காத்து கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோமா? பாதுகாவலர் இல்லாமற் போனால் சுவர்கள் எத்துணையிருப்பினும் பயன் ஒன்றும் இல்லையன்றோ?

வசனம் 7:4-13

பட்டணம் விஸ்தாரமும் பெரிதுமாயிருந்தது, அதற்குள்ளே ஜனங்கள் கொஞ்சமாயிருந்தார்கள், வீடுகளும் கட்டப்படவில்லை. அப்பொழுது வம்ச அட்டவணைகளைப் பார்க்கிறதற்கு, நான் பிரபுக்களையும் அதிகாரிகளையும் ஜனங்களையும் கூடிவரச்செய்ய, என் தேவன் என் மனதிலே ஒரு எண்ணத்தை

உண்டாக்கினார். முந்திவந்தவர்களின் வம்ச அட்டவணைப் புஸ்தகம் அப்பொழுது எனக்கு அகப்பட்டது. அதிலே எழுதியிருக்க நான் கண்டது என்னவென்றால்: பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் சிறைபிடித்துப்போனவர்களும், சிறையிருப்பிலிருந்து செருபாபேலோடும், யெசுவா, நெகேமியா, அசரியா, ராமியா, நகமானி, மொர்தெகாய், பில்சான், மிஸ்பெரேத், பிக்வாயி, நெகூம், பானா என்பவர்களோடுங்கூடவந்து, எருசலேமுக்கும் யூதாவுக்கும் திரும்பித் தங்கள் தங்கள் பட்டணங்களிலே குடியிறங்கினவர்களுமான இந்தத் தேசத்தின் புத்திரராகிய இஸ்ரவேல் ஜனங்களான மனிதரின் தொகையாவது: பாரேஷின் புத்திரர் இரண்டாயிரத்து நூற்று எழுபத்திரண்டுபேர். செபத்தியாவின் புத்திரர் அறுநூற்று ஐம்பத்திரண்டுபேர். ஆராகின் புத்திரர் அறுநூற்றுஐம்பத்திரண்டுபேர். யேசுவா யோவாப் என்பவர்களின் சந்ததிக்குள்ளிருந்த பாகாத் மோவாபின் புத்திரர் இரண்டாயிரத்து எண்ணூற்றுப்பதினெட்டுப்பேர். ஏலாமின் புத்திரர் ஆயிரத்துஇருநூற்று ஐம்பத்துநாலுபேர். சத்தூவின் புத்திரர் எண்ணூற்று நாற்பத்தைந்துபேர்.

நெகேமியா விசுவாசத்தின் வல்லமையால் எருசலேமின் அலங்கங்களையெல்லாம் கட்டி முடித்தான். பட்டணம் விஸ்தாரமும் பெரியதுமாயிருந்தது. இடிபாடுளின் குவியல்கள் அங்காங்கே நிறைந்திருந்தன. நகரத்தின் ஜனங்கள் கொஞ்சமாயிருந்தார்கள். மறுபடியும் தேவனுடைய நடத்துதால், தனது வேலைகளுக்கும் மிகவும் அவசியம் என்று நெகேமியா உணர்ந்து செயல்ப்பட்டான். கர்த்தருடைய வழிநடத்துதலுக்காக நெகேமியா எவ்வளவு அக்கறை காட்டுகிறான் என்பதை நாம் நன்கு காணமுடிகிறதல்லவா? இங்கே யூதர்கள் அனைவரையும், பிரபுக்களையும், அதிகாரிகளையும், ஜனங்களையும் கூடி வரச்செய்ய நடவடிக்கை எடுக்கிறான். அவர்கள் குடும்பம் குடும்பமாகவும், நகர வாரியாகவும், தொழில் வாரியாகவும் பிரிவு செய்து, பகுத்து வம்ச அட்டவணைப்படுத்த விரும்புகிறான். அடுத்துச் செய்யப்பட வேண்டிய காரியங்களுக்காகவும் மக்களின் வம்சவரலாற்று கணக்கிற்காகவும் அது மிகவும் தேவைப்பட்டது. இந்நிலையில், எஸ்றாவின் காலத்தில் அவனோடு எருசலேமுக்கு வந்தவர்களின் பெயர்கள் அடங்கிய அட்டவணைப் புத்தகம் ஒன்று அவனுக்குக் கிடைத்தது.

அதன் உதவியால் அவர்களின் பெயர்ப்பட்டியலை நெகேமியா இங்கு குறிப்பெடுக்க முற்படுகிறான். அவர்கள் நேபுகாத்நேச்சார் இராஜாவினால் சிறைப்படுத்திக்கொண்டு போகப்பட்டவர்கள். அவர்கள் திரும்பி, இப்போது எருசலேமிற்கும், யூதாவிற்கும் , அல்லது தங்கள் சொந்த நகரங்களுக்கும் வந்திருந்தனர். அந்தப் பெயர்ப் பட்டியலை, இப்போது அவனுடனிருந்தவர்களின் பெயர்களுடன் ஒப்பிட்டுப் புதிய பெயர்ப்பட்டியலை அவன் தயாரிக்கலானான். ஆகையால், இந்தப் பட்டியலைக் கூறும் இந்த அதிகாரமும், இதேபோன்ற பெயர்களைக் கொண்ட பட்டியலைக் கூறும் எஸ்றா 2ம் அதிகாரமும் ஒன்றாகவே உள்ளன. எஸ்றாவும் நெகேமியாவும் ஆகிய இருவருமே, தங்களுடன் வந்தவர்களின் பெயர்களை ஒழுங்காக பட்டியல்படுத்தியுள்ளனர். தேவனாகிய கர்த்தர் அவர்களுடைய நற்பணிகளை ஆசீர்வதிக்கும்படி அவர்களின் பெயர்கள் வேதத்தில் நிலைபெற அருள் புரிந்துள்ளார்.

# 08. தேவனின் கட்டளை வாசிக்கப்படுதல்

அதிகாரம் 8

தேவனின் கட்டளை வாசிக்கப்படுதல்

வசனம் 8:1-3

ஜனங்கள் எல்லாரும் தண்ணீர்வாசலுக்கு முன்னான வீதியிலே ஒருமனப்பட்டுக் கூடி, கர்த்தர் இஸ்ரவேலுக்குக் கற்பித்தமோசேயின் நியாயப்பிரமாண புஸ்தகத்தைக் கொண்டுவரவேண்டுமென்று வேதபாரகனாகிய எஸ்றாவுக்குச் சொன்னார்கள். அப்படியே ஏழாம் மாதம் முதல்தேதியில் ஆசாரியனாகிய எஸ்றா நியாயப்பிரமாணத்தைப் புருஷரும் ஸ்திரீகளும், கேட்டு அறியத்தக்க அனைவருமாகிய சபைக்கு முன்பாகக் கொண்டுவந்து, தண்ணீர் வாசலுக்கு முன்னான வீதிக்கு எதிரேயிருந்து காலமே தொடங்கி மத்தியானமட்டும் புருஷருக்கும் ஸ்திரீகளுக்கும்,கேட்டு அறியத்தக்க மற்றவர்களுக்கும் முன்பாக அதை வாசித்தான். சகல ஜனங்களும் நியாயப்பிரமாண புஸ்தகத்திற்குக் கவனமாய்ச் செவிகொடுத்தார்கள்.

அலங்கங்கள் கட்டி முடிக்கப்பட்டபின் முதல்வேலையாக ஜனங்கள் எல்லாரும் நியாயப்பிரமாணப் புத்தகம் வாசிக்கப்படுவதைக் கேட்க ஒன்று கூடினார்கள். கர்த்தர், அன்று மோசேக்குச் சொன்ன ஜனங்களைக் கூடிவரச் செய். அவர்களுக்கு தண்ணீர்கொடுப்பேன்..... என்னும் வார்த்தைகளை நினைவுகூருவோமாக (எண்.21:16). ஜனங்கள் எல்லாரும் தண்ணீர் வாசலுக்கு முன்பாகக் கூடி தேவனுடைய வார்த்தைகளைக் கேட்க நின்றார்கள். அவர்கள் ஒரு பிரசங்கியாரைக் கேட்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் வேதபாரகனாகிய எஸ்றாவைத்தான் அழைத்தார்கள். தேவனால் மோசேக்கு இஸ்ரவேலர்களுக்காகக் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணங்களின் புத்தகத்தைக் கொண்டு வந்து வாசிக்க வேண்டும் என்று அவாகள் கேட்டனர். அந்த அசல் புத்தகத்தையே கொண்டு வந்து வாசிக்கச் சொன்னார்கள் அவர்கள். அதைத்தான் தேவன் நம்மிடமிருந்து எதிர்நோக்குகிறார். தேவனுடைய புத்தகத்தின் வார்த்தைகளைத்தான் நாம் வாசிக்கவேண்டும். பலவேளைகளில் நாம் வேதத்தில் உள்ள யாதேனும் ஒரு புத்தகத்தின் விளக்கங்கள் கூறப்படும்போது, கூறுகிறவரைப் பற்றி அதிக அக்கறைகாட்டி செயல்ப்படுவது உண்டு. அதுவும் அந்த நேரத்திற்கு ஏற்றதுதான். ஆனால் தேவன் அவருடைய வார்த்தைகள் முதலில் கேட்கப்படுவதைத்தான் நம்மிடம் எதிர்பாார்க்கிறார்.

இது, அலங்கங்கள் கட்டி முடிக்கப்பட்ட ஒரு சில நாட்களில் நடந்த நிகழ்ச்சியாகும். அந்த மக்களுக்கு எது அதிக முக்கியம் என்பது நன்கு தெரியும். எஸ்றாவும்கூட நாம் வாசிக்கிறபடி, அப்படித்தான் முதலில் செய்தான். வேதபாரகனும், ஆசாரியனுமான எஸ்றாவும் முதலில் மோசேயின் நியாயப்பிரமாணப் புத்தகத்தைக் கொண்டு வந்து ஜனங்களிடத்தில் நின்று வாசித்தான். ஜனங்கள் என்று சொல்லும்போது, ஆண்களும், பெண்களும் செவிகொடுக்கக்கூடிய அனைவரையுமே அது குறிக்கும்.

வசனம் 8:4-5

வேதபாரகனாகிய எஸ்றா அதற்கென்று மரத்தால் செய்யப்பட்ட ஒரு பிரசங்கபீடத்தின்மேல் நின்றான். அவனண்டையில் அவனுக்கு வலதுபக்கமாக மத்தித்தியாவும், செமாவும், அனாயாவும், உரியாவும், இல்க்கியாவும், மாசெயாவும், அவனுக்கு இடதுபக்கமாகப் பெதாயாவும், மீசவேலும், மல்கியாவும், அசூமும், அஸ்பதானாவும், சகரியாவும், மெசுல்லாமும் நின்றார்கள். எஸ்றா சகல ஜனங்களுக்கும் உயர நின்று, சகல ஜனங்களும் காணப் புஸ்தகத்தைத் திறந்தான். அவன் அதைத்திறந்தபோது, ஜனங்கள் எல்லாரும் எழுந்துநின்றார்கள்.

எஸ்றா மரத்தால் அமைக்கப்பட்ட ஒரு பிரசங்கபீடத்தின் மேல் நின்று அதை வாசித்தான். அவனுக்கு உதவியாக 13 பேர் அவனருகில் நின்றார்கள். முதலாவது எஸ்றா மகத்துவமுள்ள தேவனாகிய கர்த்தரை ஸ்தோத்தரித்தான். ஜனங்களெல்லாரும்

தங்கள் கைகளைக் குவித்து அதற்கு மறுமொழியாக ஆமென் ஆமென் என்று சொல்லி குனிந்து, முகங்குப்புற விழுந்து கர்த்தரைப் பணிந்துகொண்டார்கள். எஸ்றா நியாயப்பிரமாணப் புத்தகத்தைக் காலைமுதல் நண்பகல் வரை வாசித்து விளக்கினான். அவன் அதை வாசித்தபொழுது எல்லாரும் கவனமாய் செவிகொடுத்தார்கள். அந்தத் தேவனுடைய வார்த்தைக்குச் செவிகொடுத்துக் கவனித்தார்கள். நாம் வேதம் வாசிக்கப்படும்போது, வேறு எண்ணங்கள் இல்லாமல் கவனத்துடன் அதைக் கேட்கிறதுண்டா? இந்த மனிதர், தங்களுடைய வீடுகளிலே வேதபிரமாண புத்தகத்தின் நகல்கள் யாதொன்றையும் பெற்றிருக்கவில்லை. ஆகையால் அவர்கள் தெளிவாகக் கேட்கும்படிக்கு அதைக் கொண்டு வந்து வாசிக்கும்படி எஸ்றாவைக் கேட்டார்கள்.

வசனம் 8:6-7

அப்பொழுது எஸ்றா மகத்துவமுள்ள தேவனாகிய கர்த்தரை ஸ்தோத்திரித்தான். ஜனங்களெல்லாரும் தங்கள் கைகளைக்குவித்து, அதற்கு மறுமொழியாக, ஆமென் ஆமென் என்று சொல்லி, குனிந்து முகங்குப்புறவிழுந்து, கர்த்தரைப் பணிந்துகொண்டார்கள். யெசுவா, பானி, செரெபியா, யாமின், அக்கூப், சபெதாயி, ஒபதியா, மாசெயா, கேலிதா,அசரியா, யோசபாத், ஆனான் பெலாயா, என்பவர்களும், லேவியரும், நியாயப்பிரமாணத்தை ஜனங்களுக்கு விளங்கப்பண்ணினார்கள். ஜனங்கள் தங்கள் நிலையிலே நின்றார்கள்.

இந்த வாசிப்பும், விளக்கமும் எவ்வாறு எஸ்றாவாலும் அவனது உதவிக்காரராலும் நடைபெற்றது? எஸ்றா முதலில் சில வாக்கியங்களை வாசித்திருப்பான். பிறகு அவனும் அவனுடனிருந்த உதவிக்காரார்களும் அதைப் பற்றிய விளக்கங்களை எளிய நடையில் அவர்களுக்கு விளக்கிக் கூறியிருப்பர். நாம் நமது ஆலயங்களில்கூட இதுபோன்ற விளக்க முறைகளைப் பின்பற்றுதல் நலம் ஆகும். நமது ஆலயங்களில் போதிப்பவர்கள் சில வேளைகளில் கேட்பவர்களுக்கு விளங்காத கடினமான பெரிய வார்த்தைகளைப் பயன்படுத்துகின்றனர். நமது ஆண்டவர் இயேசு ஒருபோதும் அதுபோல் செய்யவில்லை. அவர் எளிய வார்த்தைகளினாலே மக்களுக்குப் விளங்கப் போதித்தார். இங்கே அதுபோலவே எஸ்றாவும் அவனுடனிருந்த உதவியாளர்களும், விளங்கிக்கொள்ள கடினமாக இருந்த செய்திகளையும் வாக்கியங்களையும் வார்த்தைகளையும் விளக்கிக் கூறினார்கள் என்று வேதம் கூறுகிறது. ஆகையால் அதுபோலவே நாமும் வசனமாகிய அப்பத்தை அனைவருக்கும் பிட்டு பகிர்ந்து விளங்கும்படி சிறு துண்டுகளாக அளிக்கவேண்டும்.

வசனம் 8:8

அவர்கள் தேவனுடைய நியாயப்பிரமாணப் புஸ்தகத்தைத் தீர்க்கமாக வாசித்து அர்த்தஞ்சொல்லி, வாசித்ததை அவர்களுக்கு விளங்கப்பண்ணினார்கள்.

அவர் செய்த வாசித்ததிலே மூன்று நிலைகளை நமக்குக் காண்கிறோம். (1) அவர்கள் தெளிவாக, எல்லாரும் கேட்கத்தக்கதாகப் பேசினார்கள். அவர்கள் தங்களுக்குள்ளே முணுமுணுக்கவில்லை. (2) கடினமான வார்த்தைகளை, அர்த்தம் புரிய விளக்கிக்கூறினார்கள். (3) அவர்கள் வாசித்ததன் பொருள் விளங்கத்தக்கதாக வாசித்து, அதன் பொருளைக் கேட்டு விளங்கிக்கொள்ள, கருத்தைப் புரிந்துகொள்ள உதவிசெய்தனர்.

வசனம் 8:9

ஜனங்கள் எல்லாரும் நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளைக் கேட்டபோது, அழுதபடியால் திர்ஷாதா என்னப்பட்ட நெகேமியாவும், வேதபாரகனாகிய எஸ்றா என்னும் ஆசாரியனும், ஜனங்களுக்கு விளக்கிக்காட்டின லேவியரும் சகல ஜனங்களையும் நோக்கி: இந்த நாள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தமான நாள். நீங்கள் துக்கப்படவும் அழவும் வேண்டாம் என்றார்கள்.

எஸ்றாவும் அவனுடனிருந்த உதவிக்காரரும் செய்த இந்தத் தெளிவான, எளிய போதனையின் விளைவாக ஏற்பட்ட நிகழ்ச்சி என்னவெனில் அந்த ஜனங்கள் எல்லாரும் அதைக் கேட்டு அழுதார்கள். ஆனால் அது நெகேமியா அழவேண்டிய நாளல்ல. அப்போது நெகேமியா, எஸ்றாவும் மற்ற லேவியருமானவர்களுடன் சேர்ந்து அழுதுகொண்டிருந்த ஜனங்களை ஆறுதல்படுத்தி அமைதிப்படுத்த முற்பட்டனர். ஜனங்களை நோக்கி: இந்த நாள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தமான நாள். நீங்கள் துக்கப்படவும் அழவும் வேண்டாம் என்று சொல்லி அமைதிப்படுத்த முயன்றனர். மேலும், கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன் என்றான் எஸ்றா. கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள், சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன் (பிலி.4:4) என்று பவுல் கூறியுள்ளதை நாம் அடிக்கடி மறந்துவிடுகிறோமல்லவா? நமது பாவங்களுக்காக நாம் வருத்தப்பட்டு அழவேண்டியதே. ஆனால் நமது இரட்சகராகிய ஆண்டவருக்குள் மகிழ்ந்து களிகூற வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

வசனம் 8:10

பின்னும் அவன் அவர்களை நோக்கி: நீங்கள் போய்க் கொழுமையானதைப் புசித்து, மதுரமானதைக் குடித்து, ஒன்றுமில்லாதவர்களுக்குப் பங்குகளை அனுப்புங்கள். இந்த நாள் நம்முடைய ஆண்டவருக்குப் பரிசுத்தமான நாள், விசாரப்படவேண்டாம். கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன் என்றான்.

மேலும் நெகேமியா வேறு சில நல்லாலோசனைகளை வழங்குகிறான். நீங்கள் போய்க் கொழுமையானதைப் புசித்து, மதுரமானதைக் குடித்து, ஒன்றுமில்லாதவர்களுக்குப் பங்குகளை அனுப்புங்கள் என்று கூறுகிறான். நெகேமியா மிகவும் கருணை நிறைந்தவன் ஆகையால் மற்றவர்களுக்கும் இதுபோன்ற உத்திகளைக் கூறுகிறான். பெரும்பாலும் நமது கொடைகள் எனப்படுபவை நமக்குத் திரும்பக் கொடுக்கக்கூடியவர்களுக்கே இருக்கின்றன. தேவனாகிய ஆண்டவர் நமக்கு ஓர் உதாரணத்தைக் கூறியிருக்கிறார். நீ விருந்துபண்ணும்போது உன் சகோதரரையாகிலும் உன் பந்து ஜனங்களையாகிலும் ஐசுவரியமுள்ள அயலகத்தாரையாகிலும் அழைக்கவேண்டாம். அழைத்தால் அவர்களும் உன்னை அழைப்பார்கள். அப்பொழுது உனக்குப் பதிலுக்குப் பதில் செய்ததாகும். நீ விருந்துபண்ணும்போது ஏழைகளையும் ஊனரையும் குருடரையும் அழைப்பாயாக. அப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய். அவர்கள் உனக்குப் பதில் செய்யமாட்டார்கள். கர்த்தர் உனக்குப் பதில் செய்வார் (லூக்.14:12-14). நெகேமியாவும் இங்கே உண்மையான கொடையைப் பற்றிக் குறிப்பிட்டுக் கூறுகிறான். ஒன்றுமில்லாதவர்களுக்குப் பங்குகளை அனுப்புங்கள் என்கிறான்.

வசனம் 8:11-12

லேவியரும் ஜனங்களையெல்லாம் அமர்த்தி: அழாதிருங்கள், இந்த நாள் பரிசுத்தமான நாள், விசாரப்படவேண்டாம் என்றார்கள். அப்பொழுது ஜனங்கள் எல்லாரும் தங்களுக்கு அறிவிக்கப்பட்ட வார்த்தைகளை உணர்ந்துகொண்டபடியால், புசித்துக் குடிக்கவும், பங்குகளை அனுப்பவும், மிகுந்த சந்தோஷம் கொண்டாடவும் போனார்கள்.

அப்போது ஜனங்கள் எல்லாரும் தங்களுக்கு அறிவிக்கப்பட்ட வார்த்தைகளை உணர்ந்து கொண்டபடியால் புசித்துக் குடிக்கவும் பங்குகளை அனுப்பவும் மிகுந்த சந்தோஷம் கொண்டாடவும் போனார்கள். தங்களுக்கு அறிவிக்கப்பட்ட வார்த்தைகளை உணர்ந்துகொண்டபடியால் என்று வேதம் கூறுகிறது. எஸ்றா, நெகேமியா ஆகிய இருவருமே நியாயப்பிரமாணப் புத்தகத்தில் உள்ள கற்பனைகளை ஜனங்கள் சரிவரப் புரிநதுகொள்ளவேண்டுமே என்பதில் அதிக கவனம் செலுத்தினார்கள். அந்த நியாயப் பிரமாண விதிகளை விளக்கிக் கூறுவதில் அவர்கள் அதிக அக்கறை எடுத்துக்கொண்டதினால் , சரிவர உணர்ந்துகொண்ட அவர்கள் மகிழ்ச்சியோடே வீடுகளுக்குத் திரும்பிச்சென்றார்கள். கர்த்தருடைய வார்த்தைகளைப் போதிக்கும்

போது அதிக கவனத்துடன் நாம் செயல்ப்படவேண்டும், இல்லையெனில் அது நாம் நமக்குள் பேசிக்கொள்ளும் ஒரு செய்தியாகவே இருக்கும். கேட்கிறவர்களுக்குத் தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுத் தருவதாக அமையாது.

வசனம் 8:13

மறுநாளில் ஜனத்தின் சகல வம்சத்தலைவரும், ஆசாரியரும், லேவியரும், நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை அறிந்துகொள்ளவேண்டும் என்று வேதபாரகனாகிய எஸ்றாவினிடத்தில் கூடிவந்தார்கள்.

அடுத்தநாளிலே வேறோரு கூட்டத்தார் எஸ்றாவினிடத்திற்கு வந்தனர். அவர்கள் ஜனத்தின் சகல வம்சத்தலைவரும் ஆசாரியரும், லேவியருமேயாவர். நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளைத் தெளிவாக அறிந்துகொள்ளவேண்டும் என்றும், அதை சரிவரப்போதிக்கவேண்டும் என்ற நோக்கத்துடனும் அவர்கள் கூடிவந்தனர். எஸ்றாதான் அதை அவர்களுக்கு விளக்கக்கூடியவன். இந்த எஸ்றா இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அருளிய மோசேயின் நியாயப்பிரமாணத்தில் தேறின வேதபாரகனாயிருந்தான் (எஸ்.7:6). மற்றவர்களுக்கும் போதிக்கக்கூடியவனாகவிருந்தது எவ்வளவு ஆச்சரியமான ஆசீர்வாதம். ஒவ்வொரு காரியத்திற்காகவும் தேவன் ஒவ்வொருவரை ஆயத்தப்படுத்தி வைக்கிறார் ஆன்றோ? நாமும் மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்கதாக தீமோ.2:22 தேவவசனங்களை நன்கு கற்றுக்கொள்ள வேண்டுமன்றோ? தேவனால் ஆசீர்வதிக்கப்பட்ட போதகர்களுக்காக, தேவனுக்கு ஸ்தோத்திரம்.

வசனம் 8:14-15

அப்பொழுது நியாயப்பிரமாணத்திலே, இஸ்ரவேல் புத்திரர் ஏழாம் மாதத்தின் பண்டிகையிலே கூடாரங்களில் குடியிருக்கவேண்டும் என்று கர்த்தர் மோசேயைக்கொண்டு கற்பித்த காரியம் எழுதியருக்கிறதைக் கண்டார்கள். ஆகையால் எழுதியிருக்கிறபடி கூடாரங்களைப் போடும்படிக்கு, நீங்கள் மலைகளுக்குப் புறப்பட்டுப்போய் ஒலிவக்கிளைகளையும், காட்டு ஒலிவக்கிளைகளையும், மிருதுச் செடிகளின் கிளைகளையும், பேரீச்ச மட்டைகளையும், அடர்ந்த மரக்கிளைகளையும் கொண்டுவாருங்கள் என்று தங்களுடைய சகல பட்டணங்களிலும், எருசலேமிலும் கூறிப் பிரசித்தப்படுத்தினார்கள்.

அப்பொழுது நியாயப்பிரமாணத்திலே, இஸ்ரவேலர் அந்தப் புசிப்பின் பண்டிகையிலே, கூடாரங்களில் குடியிருக்க வேண்டும் என்று எழுதியிருக்கிறதைக் கண்டார்கள். மிருதுச் செடிகளின் கிளைகளையும், பேரீச்சை மட்டைகளையும், மற்றும் அடர்ந்த மரக்கிளைகளையும் கொண்டு அமைக்கப்பட்ட கூடாரங்கள் ஆகும். இந்தக் கூடாரங்கள் பகலில் வெயிலினின்றும் இரவில் பெய்யும் பனியினின்றும் பாதுகாப்பாக இருக்கவல்லதாகும். அது இஸ்ரவேலர் வனாந்தரங்களில் பயணிகளாக இருந்தபோது தேவன் மோசேக்குக் கற்பித்த முறைமைகளின்படியானதொரு கட்டளையாகும். அந்தப் பண்டிகையின் முறை இரண்டு காலப்பிரிவுகளைக் கொண்டதாகும். முதலாவதாக நிலத்தின் பலனைச் சேகரித்து வைத்தபின் புசித்துக் குடித்து மகிழ்வதாகும். இதனை ஏழநாள் அவர்கள் கொண்டாடவேண்டும். இரண்டாவதாக, அந்த ஏழுநாள்களும் தேவன் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினபோது அவர்களைக் கூடாரங்களில் குடியிருக்கப்பண்ணினதை நினைவுகூரும்படி அந்தத் தழைத்திருக்கிற விருட்சங்களின் கிளைகளைக் கொண்டு அமைக்கப்பட்ட அந்தக் கூடாரங்களிலே குடியிருக்கவேண்டும் (லேவி.23:34-42).

வசனம் 8:16-19

அப்படியே ஜனங்கள் வெளியே போய் அவைகளைக் கொண்டுவந்து, அவரவர் தங்கள் வீடுகள்மேலும், தங்கள் முற்றங்களிலும், தேவனுடைய ஆலயப்பிரகாரங்களிலும், தண்ணீர்வாசல் வீதியிலும், எப்பிராயீம் வாசல் வீதியிலும் தங்களுக்குக் கூடாரங்களைப்

போட்டார்கள். இந்தப்பிரகாரமாகச் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களின் சபையார் எல்லாரும் கூடாரங்களைப் போட்டு, கூடாரங்களில் குடியிருந்தார்கள். இப்படியே நூனின் குமாரனாகிய யோசுவாவின் நாட்கள்முதல் அந்நாள்மட்டும் இஸ்ரவேல் புத்திரர் செய்யாதிருந்து இப்பொழுது செய்தபடியால், மிகுந்த சந்தோஷமுண்டாயிருந்தது. முதலாம் நாள் தொடங்கிக் கடைசிநாள்மட்டும், தினம்தினம் தேவனுடைய நியாயப்பிரமாண புஸ்தகம் வாசிக்கப்பட்டது. ஏழுநாள் பண்டிகையை ஆசரித்தார்கள். எட்டாம்நாளோவெனில், முறைமையின்படியே விசேஷித்த ஆசரிப்பு நாளாயிருந்தது.

ஜனங்கள் கூறப்பட்டதைக் கேட்டு விளங்கிக் கொண்டவுடனே, அவர்கள் உடனே புறப்பட்டு காடுகளுக்குள் சென்று, தழைத்திருக்கிற விருட்சங்களின் கிளைகளைக்கொண்டு வந்து அவர்களுக்குக் கூடாரங்களை அமைக்க முற்பட்டனர். அவைகளைக் கொண்டு வந்து அவரவர் தங்கள் வீடுகள் மேலும் தங்கள் முற்றங்களிலும் தேவனுடைய ஆலயப் பிரகாரங்களிலும், தணீணீர்வாசல் வீதியிலும் மற்றும் பலவாசல் வீதிகளிலும் தங்களுக்குக் கூடாரங்களைப் போட்டார்கள். இவ்விதமாய்க் கூடாரங்களை அமைத்து ஏழுநாள் அந்தக் கூடாரங்களிலே குடியிருந்தார்கள். அது பார்ப்பதற்க மிகவும் அழகானதொரு அமைப்பு ஆகும். பார்க்கும் இடமெல்லாம் வெவ்வேறு அளவிலான அழகிய பச்சை இலைகளால் மூடப்பட்ட கூடாரங்கள். அவர்கள் புசித்துக் குடித்து, பேசி, அந்தக் கூடாரங்களிலேயே உறங்கிக் கழித்தனர். நிச்சயமாக, இந்த அமைப்பு அவர்களின் முன்னோர்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு வந்தபோது 40 வருடங்களாக கூடாரங்களிலே வாழ்ந்து வனாந்தரங்களைக் கடந்த வரலாறுகளை அவர்கள் நினைவுகூர உதவியது.

யோசுவாவின் காலமுதல் இந்தக் கூடாரப்பண்டிகை கொண்டாடப்படாமலிருந்தது. இப்போது எஸ்றா, நெகேமியாவினால் கொண்டாடப்பட்டது. இப்போது யோசுவாவின் காலத்திற்குப் பின், முதன்முறையாகக் கொண்டாடப்பட்டபோது மிகுந்த சந்தோஷமுண்டாகியிருந்தது. கர்த்தருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியும்போது உண்மையான மகிழ்ச்சி உண்டாவதைக் காணமுடிகிறது.

எஸ்றா மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளைத் தொடர்ந்து நிறைவேற்றி வந்தான். உபாகமப்புத்தகத்திலே, ஒவ்வொரு ஏழாம் வருஷத்தின் முடிவிலே , கூடாரப்பண்டிகையில்..... இந்த நியாயப்பிரமாணத்தை இஸ்ரவேலர் எல்லாரும் கேட்க, அவர்களுக்கு முன்பாக வாசிக்கக்கடவாய்.... புருஷர்களும், ஸ்திரீகளும், பிள்ளைகளும்... அதைக் கற்றுக்கொண்டு தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளின்படி செய்யக் கவனமாயிருக்கும்.... (உபா.31:11-13) என்று கூறப்பட்டுள்ளது. ஆகையால் எஸ்றா நியாயப்பிரமாண புத்தகத்தைத் திறந்து வாசித்தான். அதை அவன் ஒவ்வொரு நாளுமாக ஏழுநாளும் வாசித்தான். ஒவ்வொரு நாளும் திறந்தவெளியில் அது வாசிக்கப்படுவதை ஜனங்களெல்லாரும் கேட்டார்கள். எவ்வளவு ஆச்சரியமான ஏராளமான ஜனக்கூட்டம்! எட்டாம் நாளோவெனில் முறைமையின்படியே விசேஷித்த ஆசரிப்புநாளாக அது கொண்டாடப்பட்டது. இந்த எட்டாம்நாள் கொண்டாட்டமும் மோசேயின் கட்டளையின்படியே கொண்டாடப்பட்டதாகும் (எண்.29:35).

# 09. உடன்படிக்கை பண்ணப்படுதல்

அதிகாரம் 9

உடன்படிக்கை பண்ணப்படுதல்

வசனம் 9:1-3

அந்த மாதம் இருபத்துநாலாந்தேதியிலே இஸ்ரவேல் புத்திரர் உபவாசம்பண்ணி, இரட்டுடுத்தி, தங்கள்மேல் புழுதியைப் போட்டுக்கொண்டவர்களாய்க் கூடிவந்தார்கள். இஸ்ரவேல் சந்ததியார் மறுஜாதியாரையெல்லாம் விட்டுப்பிரிந்து வந்து நின்று, தங்கள் பாவங்களையும், தங்கள் பிதாக்களின் அக்கிரமங்களையும் அறிக்கையிட்டார்கள். அவர்கள் எழுந்திருந்து, தங்கள் நிலையில் நின்றார்கள். அப்பொழுது ஒரு ஜாமமட்டும் அவர்களுடைய தேவனாகிய கர்த்தரின் நியாயப்பிரமாணப் புஸ்தகம் வாசிக்கப்பட்டது. பின்பு ஒரு ஜாமமட்டும் அவர்கள் பாவ அறிக்கை பண்ணி, தங்கள் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டார்கள்.

நியாயப்பிரமாண வசனங்கள் இஸ்ரவேலர்மீது கிரியைசெய்ய ஆரம்பித்தது. கூடாரப்பண்டிகையின் நாட்கள் முடிந்தவுடன் அவர்கள் ஒன்றுசேர்ந்து உபவாசிக்கக் கூடினர். அவர்கள் அனைவரும் இரட்டுடுத்தி தங்கள்மேல் புழுதியைப் போட்டுக்கொண்டவர்களாகக் கூடினார்கள். தேவனுக்கு முன்பாக தங்கள் எண்ணங்களிலும், வார்த்தைகளிலும், ஆடைகளிலும்கூடத் தங்களைத் தாழ்தி நின்றார்கள். பண்டிகைகளைச் சந்தோஷமாய் ஆசரித்து, தங்கள் முன்னோர்களளைத் தேவன் பராமரித்து நடத்திவந்ததை நினைவுகூர்ந்து தேவவசனங்களைக் கேட்டு மகிழ்ந்த அனைத்தும் மிகவும் வல்லமையுள்ளவைகளாக இருந்தன. ஆனால் அதுவே அதன் முடிவல்ல. ஏசாயா தீர்க்கதரிசி எழுதியுள்ளபடி தலைவணங்கி நாணலைப்போல் இரட்டிலும் சாம்பலிலிலும் படுத்துக்கொள்ளுகிறதும்.... இதையா.... உபவாசம்.... என்று சொல்லுவது (ஏசா.58:5-7). ஆகவே அந்த யூதர்கள் தாங்கள் கற்றதை நடைமுறைப்படுத்த முற்பட்டனர்.

இந்த முயற்சி தங்களைத் தாழ்த்தும் முயற்சியில் ஆரம்பித்தது. அடுத்து அவர்கள் மறுஜாதியாரையெல்லாம் விட்டுப் பிரிந்துவந்து நின்றனர். தேவன் அவர்களை அவ்வாறு பிரிந்து இருக்கக் கட்டளையிட்டார் (லேவி.20:26). மூன்றாவதாக அவர்கள் தங்கள் பிதாக்களின் அக்கிரமங்களையும் அறிக்கையிட்டார்கள். அடுத்து அவர்கள் அந்த இடத்திலே எழுந்து நின்றார்கள். நியாயப்பிரமாண புத்தகம், ஒரு ஜாமம் மட்டும் (மூன்று மணி நேரம்) வாசிக்கப்பட்டது. நாம் தேவனுடைய புத்தகத்தை, வேதத்தை, வாசிக்கவோ, அல்லது வாசிக்கப்படுவதைக் கேட்கவோ எப்போதாவது மூன்று மணிநேரம் நின்றுகொண்டிருந்திருப்போமா? அல்லது உண்மையில் அத்தனை நேரம், அதைச் செய்ய உட்கார்ந்தவாறு பொறுமையாய் இருந்ததுண்டா? அதுமட்டுமல்ல, அடுத்த மூன்று மணிநேரம் அவர்கள் பாவங்களை அறிக்கையிட்டு, தங்கள் தேவனாகிய கர்த்தரைத் துதித்துகொண்டிருந்தனர். நமது உபவாசங்களிலும் அஞ்ஞானிகளிடமிருந்து பிரிந்திருத்தலும், அறிக்கையிடுதலும் இருக்கவேண்டுமன்றோ? அவ்வாறில்லையெனில் பிரிதான நமது செயல்கள், நமது பெருமை குணத்தையும் தன்னலமான பண்புகளையும் மட்டேயுடையதாக இருக்கும் (லூக்.18:10-14).

வசனம் 9:4-5

யெசுவா, பானி, கத்மியேல், செப்பனியா, புன்னி, செரெபியா, பானி, கெனானி என்பவர்கள் லேவியருடைய படிகளின்மேல் நின்று, தங்கள் தேவனாகிய கர்த்தரை நோக்கி மகா சத்தமாய் ஓலமிட்டார்கள். பின்பு லேவியரான யெசுவா, கத்மியேல், பானி, ஆசாப்நெயா, செரெபியா, ஒதியா, செபனியா, பெத்தகியா என்பவர்கள் ஜனங்களைப் பார்த்து: நீங்கள் எழுந்திருந்து, அநாதியாய் என்றென்றைக்குமிருக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள் என்று சொல்லி, கர்த்தரை நோக்கி: எந்த ஸ்துதி ஸ்தோத்திரத்துக்கும் மேலான உம்முடைய மகிமையுள்ள நாமத்துக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக.

பின்பு கூட்டமாக சிலர், எஸ்றா இருந்த படிகளின்மேல் ஏறி நின்று, (1) உரத்தசத்தமாய் அறிக்கையிட்டு (2) தேவைனத் துதித்து நின்றார்கள். இவர்கள் லேவியர். இவர்களில் பலருடைய பெயர்கள் இந்த வசனங்களில் இரண்டுமுறை குறிக்கப்பட்டிருப்பது,

அவர்கள் அங்குமிங்கும் நடந்து பலரைக் கடந்து, சந்தித்து இருக்கலாம். கூட்டம் அதிகமாக இருந்தபடியால் அனைவருக்கும் கேட்கத்தக்கதாய், அவர்கள் உரத்தகுரலில் ஓலமிட்டார்கள் என வாசிக்கிறோம்.

இங்கே நாம் வாசிக்கிற ஜெபமும், ஸ்தோத்திரமும் எல்லாரும் சேர்ந்து சொன்னதாக இருக்கக்கூடும். அல்லது எல்லாரும் சேர்ந்து மகா சத்தமாய் செய்த ஸ்தோத்திரத்தின் மொத்த கருத்தாக இருக்கலாம். அவர்கள் ஜனங்களைப் பார்த்து, நீங்கள் எழுந்திருந்து, அநாதியாய் என்றென்றைக்குமிருக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள் என்றார்கள். அவர்கள் தேவனைத் தங்கள் கர்த்தராக மகிமைப்படுத்தினார்கள். அவர்கள் அநாதியாய் என்றென்றைக்கும் இருக்கிறவர் என்று சொன்னார்கள். மேலும் அவர்கள், கர்த்தரை நோக்கி: எந்த ஸ்துதி தோத்திரத்திற்கும் மேலான உம்முடைய மகிமையுள்ள நாமத்திற்கு ஸ்தோத்திரம் என்று ஸ்தோத்தரித்தார்கள். இது மிகவும் மேன்மையான ஜெபத்தின் ஆரம்பம். நாமும் நமது தொழுகையை எவ்வாறு ஸ்தோத்திரத்தோடே ஆரம்பிக்கவேண்டும் என்று இது விளக்குகிறது. அவரே தேவன். அவருடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. கனமும் மகிமையும் அவருக்கே உண்டாவதாக.

வசனம் 9:6

நீர் ஒருவரே கர்த்தர். நீர் வானங்களையும், வானாதி வானங்களையும், அவைகளுடைய சர்வ சேனைகளையும், பூமியையும் அதிலுள்ள எல்லாவற்றையும், சமுத்திரங்களையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கினீர். அவைகளையெல்லாம் நீர் காப்பாற்றுகிறீர். வானசேனைகள் உம்மைப் பணிந்துகொள்ளுகிறது.

அவர்கள் தேவனை, அவர்கள் சர்வத்தையும் படைத்தவர் என்று அவருடைய படைப்புக்களை, ஆதியாகமம் 1ம் அதிகாரத்தில் கூறியுள்ளபடி வரிசைப்படுத்திக் கூறிப்போற்றுகின்றனர். வானங்களையும் வானாதி வானங்களையும் அவைகளுடை சர்வசேனைகளையும், பூமியையும் அதிலுள்ள எல்லாவற்றையும், சமுத்திரங்களையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கினீர் என்று தேவனைப் போற்றுகின்றனர். அவைகளை உண்டாக்கினது மட்டுமின்றி அவைகளையெல்லாம் நீர் காப்பாற்றுகிறீர் என்றும் துதிக்கின்றனர். சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய் என்று வேதம் கூறுகிறது (எபி. 1:3). ஆயிரமாயிரமாகவும், பதினாயிரம் பதினாயிரமாகவும் தூதர்களுக்கு அவரைத் தெரியும். அவர்கள் அவரைத் துதிக்கிறன்றனர். அவர் சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவர் (வெளி 5:11-14).

வசனம் 9:7-8

ஆபிராமைத் தெரிந்துகொண்டு, அவனை ஊர் என்னும் கல்தேயரின் பட்டணத்திலிருந்து புறப்படப்பண்ணி, அவனுக்கு ஆபிரகாம் என்னும் பேரிட்ட தேவனாகிய கர்த்தர் நீர். அவன் இருதயத்தை உமக்கு முன்பாக உண்மையுள்ளதாகக்கண்டு, கானானியர், ஏத்தியர், எமோரியர், பெரிசியர், எபூசியர், கிர்காசியருடைய தேசத்தை அவன் சந்ததிக்குக் கொடுக்கும்படி, அவனோடு உடன்படிக்கைபண்ணி, உம்முடைய வார்த்தைகளை நிறைவேற்றினீர். நீர் நீதியுள்ளவர்.

அடுத்து, அவர்கள் தேவனாகிய கர்த்தர், ஆபிரகாமின் காலமுதல் அவர்களுக்குச் செய்துள்ள நன்மை யாவற்றையும் நினைவுகூருகிறார்கள். ஆபிரகாமைக் கர்ததர் தெரிந்துகொண்டு அவனை ஊர் என்னும் கல்தேயரின் பட்டணத்திலிருந்து புறப்படப்பண்ணி, அவனுக்கு ஆபிரகாம் என்னும் பேரிட்டு, அவனோடு ஓர் உடன்படிக்கை பண்ணினார். ஆபிரகாம் விசுவாசமுள்ளவன் என்று தேவன் அறிந்திருந்தார். ஆதியாகமப் புத்தகத்திலே அவன் கர்த்தரை விசுவாசித்தான். அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார் (ஆதி.15:6) என்று கூறப்பட்டுள்ளது. ஆபிரகாமின் வாழ்க்கை முழுவதும் மூன்று வார்த்தைகளிலே அடங்கும். அவன்

தேவனை விசுவாசித்தான். பவுல் அப்போஸ்தலனும் இதையே கூறுகிறார். நான் தேவனிடத்தில் நம்பிக்கையாயிக்கிறேன் (அப்.27:25). மேலும் வேதத்தில் அந்த மனுஷன் இயேசு சொன்ன வார்த்தையே நம்பிப்போனான் என்று நாம் வாசிக்கிறோம் (யோ.4:50). நாம் அவ்வாறு இயேசுவை நம்பி வாழ்கிறோமா?

தேவன் ஆபிரகாமோடு செய்துகொண்டு உடன்படிக்கையின்படி, அவனுக்கும் அவன் சந்ததிக்கும் அவா வாக்குத்தத்தம்பண்ணின தேசத்தைக் கொடுத்தா. வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே (எபேசி.10:23). அவர் நீதியுள்ளவர்.

வசனம் 9:9-11

எகிப்திலே எங்கள் பிதாக்கள் அநுபவித்த சிறுமையை நீர் கண்டு, சிவந்த சமுத்திரத்தில் அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டீர். பார்வோனிடத்திலும், அவனுடைய எல்லா ஊழியக்காரரிடத்திலும் அவன் தேசத்தின் சகல ஜனத்தினிடத்திலும், அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்தீர். அவர்கள் உமது ஜனங்களை அகந்தையாய் நடத்தினார்கள் என்பதை அறிந்திருந்தீர். இப்படியே இந்நாள்வரைக்கும் இருக்கிறபடி உமக்குக் கீர்த்தியை உண்டாக்கினீர். நீர் அவர்களுக்கு முன்பாகச் சமுத்திரத்தைப் பிரித்ததினால், கடலின் நடுவாகக் கால்நனையாமல் நடந்தார்கள். வலுவான தண்ணீர்களிலே கல்லைப்போடுகிறதுபோல, அவர்களைத் தொடர்ந்தவர்களை ஆழங்களிலே போட்டுவிட்டீர்.

எகிப்திலே அவர்கள் பிதாக்கள் அனுபவித்த சிறுமையைக் கூறுகிறார்கள். சிவந்த சமுத்திரத்தில் அவர்களின் கூப்பிடுதலை அவர் கேட்டார். அந்தக் கடலையே அவர்கள் எகிப்திலிருந்து தப்பிச்செல்ல அவர்களுக்கு வழியாகப் பயன்படுத்தினார். கர்த்தர் மோசேயினடத்திலும் ஆரோனிடத்திலும் அன்று எகிப்தின் ராஜாவாகிய பார்வோனிடத்தில் சென்று வனாந்தரத்தில் தேவனுக்குப் பண்டிகை கொண்டாட போகவிடும்படி கேட்கச் சொன்னார் (யாத்.5:1-14). மறுபடியும் தேவன் மோசேயின்மூலம் அநேக அற்புத அடையாளங்களைக் காண்பித்தும், பார்வோன் அவர்களைப் போகவிட மறுத்துவிட்டான். கடைசியாக, தலைச்சன் பிள்ளைகள் யாவரும் சங்காரம் செய்யப்பட்டபின், பார்வோன், மோசேயும் இஸ்ரவேலரான அவனுடைய மனுஷரும் உடனே எகிப்தைவிட்டுச் செல்லவேண்டும் என்று வருந்திக் கேட்டுக்கொண்டான் (யாத்.12:31). அப்போது தேவனாகிய கர்த்தர், பெருந்திரளான இஸ்ரவேலர் அனைவரும் கடந்து போகத்தக்கதாக, இரவு முழுவதும் கீழ்க்காற்றை வீசப்பண்ணி, கடலின் தண்ணீர்களைக் கரையாக ஒதுங்கச்செய்து, கட்டாந்தரையிலே நடந்துபோகும்படி சிவந்த சமுத்திரத்தைப் பிளக்கப்பண்ணினார் (யாத்.14:21). அடுத்த நாளிலே பார்வோன் தனது சேனைகளை அனுப்பி இஸ்ரவேலரைப் பின் தொடரச்செய்தபோது, சமுத்திரம் பலமாய்த் திரும்பிவந்து அவர்களை அமிழ்த்திப்போட்டது (யாத்.14:28).

வசனம் 9:12-13

நீர் பகலிலே மேகஸ்தம்பத்தினாலும், அவர்கள் நடக்கவேண்டியவழியை அவர்களுக்கு வெளிச்சமாக்க இரவிலே அக்கினிஸ்தம்பத்தினாலும், அவர்களை வழிநடத்தினீர். நீர் சீனாய்மலையிறங்கி, வானத்திலிருந்து அவர்களோடே பேசி, அவர்களுக்குச் செம்மையான நீதிநியாயங்களையும், நல்ல கட்டளைகளும் கற்பனைகளுமாகிய உண்மையான பிரமாணங்களையும் கொடுத்தீர்.

கர்த்தர் இஸ்ரவேலர்களை அப்படியே விட்டுவிடவில்லை. பகலிலே மேகஸ்தம்பத்தினாலும் அவர்கள் நடக்கவேண்டிய வழியை அவர்களுக்கு வெளிச்சமாக்க இரவிலே அக்கினிஸ்தம்பத்தினாலும் அவர்கள் வழிநடத்தினார். அங்கிருந்த இஸ்ரவேலர் அனைவரும் அதை எந்த நேரத்திலும் பார்க்கமுடிந்தது. அந்த மேகம் அவர்களின் கூடாரங்களின்மேல் நின்றபோது அவர்கள் தங்கியிருந்தனர். அந்த மேகங்கள் நகர்ந்துசெல்ல ஆரம்பித்தபோது அவர்களும் பயணத்தைத் தொடர்ந்தனர் (யாத்.40:34-38). தேவனாகிய கர்த்தர்தாமே அவர்களின் வழிகாட்டியாக அவர்களோடே

தங்கியிருந்தனர். ஒவ்வொரு பகல்பொழுதிலும் ஒவ்வொரு இரவிலும் ஒவ்வொரு இஸ்ரலேவரும் தங்களின் கூடாரத்தைப் பார்த்து அதன்மீது மேகஸ்தம்பம் இருந்தத்தைக் காணமுடிந்தது. தேவன் அவர்கள் நடுவில் இருந்தார். நமது நடுவில் தேவன் வாசம்செய்கிறாரா? அவருடைய சமுகத்தை எந்நாளும் உன்னால் உணரமுடிகிறதா? அவர் அசைந்து செல்லும்போது நீயும் உடன் செல்ல ஆயத்தமாயிருக்கிறாயா? அல்லது உன்னுடைய இருப்பிடத்தில் தேவனோடு சேர்ந்து நீ வாழ்கிறதை உணரமுடிகிறதா?

தேவனாகிய கர்த்தர் சீனாய்மலையின்மீது இறங்கி வந்து மோசேயின்மூலம் அவர்களோடு பேசினார் (யாத்.19:20, 20:17). அவர் அங்கே மோசேக்கு நியயாப்பிரமாணங்களைக் கொடுத்தார். நீதி நியாயங்களான கட்டளைகளையும், அவைகளுக்குக் கீழ்ப்படியாமற்போனால் கொடுக்கப்படவேண்டிய தண்டனைகளையும் அந்த பிரமாணங்கள் போதித்தன. வாழ்க்கையின் எல்லா வகைகளிலும், ஒவ்வொருவனும் செய்யவேண்டிய கற்பனைகளையெல்லாம் அது போதித்தது. தற்போதுள்ள எல்லா முன்னேற்றம் அடைந்த நாடுகளின் சட்டங்களுக்கும் அந்தக் கற்பனைகளே முன்னோடிகளாக அமைந்துள்ளன. அவை நேர்மையானதும் சத்தியமானதுமான கட்டளைகள் ஆகும்.

வசனம் 9:14-17

உமது பரிசுத்த ஓய்வுநாளை அவர்களுக்குத் தெரியப்படுத்தி, உமது தாசனாகிய மோசேயைக்கொண்டு, அவர்களுக்குக் கற்பனைகளையும், கட்டளைகளையும், நியாப்பிரமாணங்களையும் கற்பித்தீர். அவர்கள் பசிக்கு வானத்திலிருந்த அப்பம் கொடுத்து, அவர்கள் தாகத்துக்குக் கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படப்பண்ணி, நீர் அவர்களுக்குக் கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளப் பிரவேசியுங்கள் என்று அவர்களுக்குச் சொன்னீர். எங்கள் பிதாக்களாகிய அவர்களோ அகங்காரமாய் நடந்து, தங்கள் கழுத்தைக் கடினப்படுத்தி, உம்முடைய கற்பனைகளுக்குச் செவிகொடாதே போனார்கள். அவர்கள் செவிகொடுக்க மனதில்லாமலும், அவர்களிடத்திலே நீர் செய்த உம்முடைய அற்புதங்களை நினையாமலும் போய், தங்கள் கழுத்தைக் கடினப்படுத்தி, தங்கள் அடிமைத்தனத்துக்குத் திரும்பும்படிக்கு அவர்கள் கலகம்பண்ணி, ஒரு தலைவனை ஏற்படுத்தினார்கள். ஆகிலும் வெகுவாய் மன்னிக்கிறவரும், இரக்கமும், மனஉருக்கமும், நீடிய சாந்தமும், மகா கிருபையுமுள்ளவருமான தேவனாகிய நீர் அவர்களைக் கைவிடவில்லை.

அடுத்து தேவனாகிய கர்த்தர் அவர்களுக்குப் பரிசுத்த ஓய்வுநாளைத் தெரியப்படுத்தியிருந்தார். மேலும் அவர்களுக்கு வானத்திலிருந்து அப்பத்தையும் (யாத்.16:15), கன்மலையிலிருந்து தண்ணீரையும் (யாத்.17:6) கொடுத்தார். பின்னும் அவர்களுக்குக் கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ள பிரவேசியுங்கள் என்று சொல்லியிருந்தார். ஆனால் அந்த இஸ்ரவேலரோ கீழ்ப்படியாமற்போனார்கள். அவர்கள் தேவன் அவர்களுக்குச் செய்த எல்லா நன்மைகளையும் மறந்துபோனார்கள். தங்களின் பழைய அடிமைத்தனத்திற்கே திரும்ப விரும்பி தங்களுக்குள்ளே ஒரு தலைவனையும் ஏற்படுத்திக்கொண்டார்கள். தேவன் செய்த நன்மைகளை மறந்து, பழைய அடிமைத்தனத்திற்காக, புதிய சுதந்திரத்தை இழக்க ஆயத்தமாயிருந்தார்கள். ஆனால் தேவனாகிய கர்த்தர் அவர்களைக் கைவிடவில்லை. தேவனாகிய கர்த்தர் மன்னிக்கிறவரும், இரக்கமும் மனஉருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவராய் இருந்து அவர்களை மன்னித்தார். அவர் இன்னும் மாறாதவராய் இருக்கிறாரே.

வசனம் 9:18-21

அவர்கள் வார்ப்பிக்கப்பட்ட ஒரு கன்றுக்குட்டியைத் தங்களுக்கு உண்டாக்கி, இது உன்னை எகிப்திலிருந்து கொண்டுவந்த உன் தெய்வம் என்று சொல்லி,

கோபமூட்டத்தக்க பெரிய அக்கிரமங்களைச் செய்திருந்தாலும், நீர் உம்முடைய மிகுந்த மனஉருக்கத்தின்படியே, அவர்களை வனாந்தரத்திலே கைவிடவில்லை. அவர்களை வழிநடத்தப் பகலிலே மேகஸ்தம்பமும், அவர்களுக்கு வெளிச்சத்தையும் அவர்கள் நடக்கவேண்டிய வழியையும் காட்ட இரவிலே அக்கினிஸ்தம்பமும், அவர்களை விட்டு விலகவில்லை. அவர்களுக்கு அறிவை உணர்த்த உம்முடைய நல் ஆவியைக் கட்டளையிட்டீர். அவர்கள் வாய்க்கு உம்முடைய மன்னாவை அருளி, அவர்கள் தாகத்துக்குத் தண்ணீரைக் கொடுத்தீர். இப்படி நாற்பது வருஷகாலமாக வனாந்தரத்தில் அவர்களுக்கு ஒன்றும் குறைவுபடாதபடிக்கு, அவர்களைப் பராமரித்துவந்தீர். அவர்கள் வஸ்திரங்கள் பழமையாய்ப்போகவுமில்லை, அவர்கள் கால்கள் வீங்கவுமில்லை.

ஆனால் இஸ்ரவேலர் மேலும் அதிகமாய்ப் பாவம் செய்தனர் (யாத்.32). அவர்கள் பொன்னால் வார்ப்பிக்கப்பட்ட ஒரு கன்றுக்குட்டியைத் தங்களுக்கு உண்டாக்கி இது உன்னை எகிப்திலிருந்து கொண்டுவந்த உன் தெய்வம் என்று சொல்லி கோபமூட்டத்தக்க பெரிய அக்கிரமத்தைச் செய்தார்கள். ஆனாலும் இந்த அக்கிரமங்கள்கூட வேதத்தில் நிலைபெற தேவன் சித்தங்கொண்டுள்ளார். ஏன்? நாம் மறுபடியும் அதுபோன்ற செயல்களைச் செய்யக்கூடாது என்பதற்காகவே. நாம் எச்சரிக்கையாய் இருக்கக்கடவோம். நான் அதுபோல முட்டாள்தனமாகச் செய்யமாட்டேன் என்று ஒருவேளை நாம் சொல்லலாம். ஆனால் அதுபோல அக்கிரமங்கள் நடந்த செயல்களை நாம் வேதத்தில் வாசிக்கிறோம். நாமும்கூட ஒருவேளை வஞ்சிக்கப்பட்டுப் போகலாமன்றோ? (1.கொரி.10:6-12)?

என்றபோதிலும் அந்நிலையிலேயே தேவன் அவர்களை விட்டுவிடவில்லை. நம்மையும் தேவன் நிச்சயமாய்க் கைவிடமாட்டார். அவர்களுக்குத் தொடர்ந்து உணவளித்தார். கன்மலையைப் பிளந்து தண்ணீர் அளித்தார். அக்கினிஸ்தம்பத்தினாலும் மேகஸ்தம்பத்தினாலும் வழி நடத்தினார். அவர்களின் பாவங்களும், பாதரட்சைகளும் நாற்பது அண்டு பயணத்தில் என்ன ஆவது? அவர்கள் வஸ்திரங்கள் பழமையாய்ப்போகவுமில்லை. கால்கள் வீங்கவுமில்லை. (உபா.8:4). அவர்கள் காலிலிருந்து பாதரட்சை பழையதாய்ப்போகவுமில்லை (உபா.29:5). நம்முடைய தேவனே தேவன்.

வசனம் 9:23-25

அவர்கள் பிள்ளைகளை வானத்து நட்சத்திரங்களைப்போலப் பெருகப்பண்ணி, சுதந்தரித்துக்கொள்ளும்படி நீர் அவர்கள் பிதாக்களுக்குச் சொன்ன தேசத்திலே அவர்களை அழைத்துவந்தீர். அப்படியே பிள்ளைகள் உட்பிரவேசித்து, தேசத்தைச் சுதந்தரித்துக்கொண்டார்கள். நீர் அவர்களுக்கு முன்பாகத் தேசத்தின் குடிகளாகிய கானானியரைத் தாழ்த்தி, அவர்களையும் அவர்கள் ராஜாக்களையும், தேசத்தின் ஜனங்களையும், தங்கள் இஷ்டப்படி செய்ய, அவர்கள் கையிலே ஒப்புக்கொடுத்தீர். அவர்கள் அரணான பட்டணங்களையும், செழுமையான பூமியையும் கட்டிக்கொண்டு, சகலவித உடமைகள் நிறைந்த வீடுகளையும், வெட்டப்பட்ட துரவுகளையும், ஏராளமான திராட்சத்தோட்டங்களையும், ஒலிவத்தோப்புகளையும், கனிகொடுக்கும் விருட்சங்களையும் சுதந்தரித்துக்கொண்டு, புசித்துத் திருப்தியாகிக் கொழுத்து, உம்முடைய பெரிய தயையினால் செல்வமாய் வாழ்ந்தார்கள்.

தேவனாகிய கர்த்தர் அவர்களுடனே இருந்து அவர்களுக்கு கொடுப்பேன் என்று வாக்கருளியிருந்த தேசத்திற்கு அவர்களை அழைத்துச் சென்றார். பகைவர்களை வெல்லச்செய்தார். வெட்டப்பட்ட துரவுகளையும், கனி கொடுக்கும் விருட்சங்களையும் அவர்களுக்கு அளித்தார். அங்கு குடியிருந்தவர்களே அவைகளைச் செய்து வைத்திருந்தனர். இஸ்ரவேலர் பலுகிப் பெருகி, நன்றாக உண்டு கொழுத்திருந்தனர்.

வசனம் 9:26

ஆனாலும் அவர்கள் கீழ்ப்படியாதவர்களாகி, உமக்கு விரோதமாய்க் கலகம்பண்ணி, உம்முடைய நியாயப்பிரமாணத்தைத் தங்களுக்குப் புறம்பே எறிந்துவிட்டு, தங்களை உம்மிடத்தில் திரும்பும்படி அவர்களைத் திடசாட்சியாய்க் கடிந்துகொண்ட உம்முடைய தீர்க்கதரிசிகளைக் கொன்றுபோட்டு, கோபமூட்டுகிற பெரிய அக்கிரமங்களைச் செய்தார்கள்.

ஆனால் அவர்கள் தேவனுக்கு முன்பாக மறுபடியும் பொல்லாப்புச் செய்யத் தொடங்கினார்கள். நியாயப்பிரமாணத்தை, தங்களுக்குப் புறம்பே எறிந்துபோட்டார்கள். உம்மிடத்தில் திரும்பும்படி திடசாட்சியாய்க் கடிந்துகொண்ட உம்முடைய தீர்க்கதரிசிகளைக் கொன்றுபோட்டார்கள் என்று வேதம் கூறுகிறது. இது மிகவும் அக்கிரமம் அன்றோ? நாமும் ஒருவேளை இதுபோலத்தான் உள்ளோமோ?

வசனம் 9:27-31

ஆகையால் அவர்களை நெருக்குகிற அவர்கள் சத்துருக்களின் கையில் அவர்களை ஒப்புக்கொடுத்தீர். அவர்கள் நெருக்கம் அநுபவிக்கிற காலத்தில் அவர்கள் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறபோதோ, நீர் பரலோகத்திலிருந்து கேட்டு, உம்முடைய மிகுந்த இரக்கத்தினால் அவர்களை அவர்கள் சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கிவிடுகிற இரட்சகர்களை அவர்களுக்குக் கொடுத்தீர். அவர்களுக்கு இளைப்பாறுதல் உண்டானபோதோ, உமக்கு முன்பாக மறுபடியும் பொல்லாப்புச் செய்யத் தொடங்கினார்கள். ஆகையால் அவர்கள் சத்துருக்கள் அவர்களை ஆளும்படிக்கு, அவர்கள் கையிலே ஒப்புவித்தீர். அவர்கள் மனந்திரும்பி, உம்மை நோக்கிக் கூப்பிட்டபோதோ, நீர் பரலோகத்திலிருந்து கேட்டு, அவர்களை உம்முடைய இரக்கங்களின்படியே அநேகந்தரம் விடுதலையாக்கிவிட்டீர். அவர்களை உம்முடைய நியாயப்பிரமாணத்துக்குத் திருப்ப அவர்களைத் திடசாட்சியாய்க் கடிந்துகொண்டீர். அனாலும் அவர்கள் அகங்காரங்கொண்டு, உம்முடைய கற்பனைகளுக்குச் செவிகொடாமல், கீழ்ப்படிந்து நடக்கிற மனுஷன் செய்து பிழைக்கிற உம்முடைய நீதிநியாயங்களுக்கு விரோதமாகப் பாவஞ்செய்து, தங்கள் தோளை முரட்டுத்தனமாய் விலக்கி, செவிகொடாமல், தங்கள் கழுத்தைக் கடினப்படுத்திக்கொண்டார்கள். நீர் அநேக வருஷமாக அவர்கள்மேல் பொறுமையாயிருந்து, உம்முடைய ஆவியினால் பேசின உம்முடைய தீர்க்கதரிசிகளைக்கொண்டு அவர்களைத் திடசாட்சியாய்க் கடிந்துகொண்டாலும், அவர்கள் செவிகொடாதபடியினாலே, அவர்கள் அந்நிய தேசஜனங்களின் கையில் ஒப்புக்கொடுத்தீர். ஆகிலும் உம்முடைய மிகுந்த இரக்கங்களின்படியே, அவர்களை நிர்மூலமாக்காமலும் அவர்களைக் கைவிடாமலும் இருந்தீர். நீர் கிருபையும் இரக்கமுமுள்ள தேவன்.

ஆகையால் தேவன் அவர்கை நெருக்குகிற அவர்களின் சத்துருக்களின் கையில் ஒப்புக்கொடுத்தார். ஆனால் அவர்கள் மறுபடியும் தேவனை நோக்கிக் கூப்பிட்டார்கள். கர்த்தர் அவர்களின் கூக்குரலைக்கேட்டு, சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கி விடுவித்தார்.

அவர்களுக்கு இளைப்பாறுதல் உண்டானபோது கர்த்தரிடம் திரும்பியிருக்கத் தீர்மானித்தார்களாவென்றால், அதுதான் இல்லை. மறுபடியும் பொல்லாப்புச் செய்ய தொடங்கினாகள். மறுபடியுமாக அவர்களுடைய சத்துருக்களின் கையிலே ஒப்புக்கொடுக்கப்பட்டார்கள். அவர்கள் மனந்திரும்பி மறுபடியும் கூக்குரலிட்டபோது, பரலோகதிலிருந்து அவர்களின் கூக்குரலைக்கேட்டு அநகேந்தரம் அவர்களை விடுதலையாக்கிவிட்டார். கடைசியாக அவர்கள் தேவனைவிட்டு விலகிச் சென்றது வேதத்தில் தங்கள் தோளை முரட்டுத்தனமாய் விலக்கி செவிகொடாமல் தங்கள் கழுத்தைக் கடினப்படுத்திக்கொண்டார்கள் என்று விளக்கப்பட்டுள்ளது. நாம் நமது வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தைகளைக் கேட்க எப்போதாவது மறுத்துவிடுவதுண்டோ? அப்படியிருந்தும் தேவன் அவர்களைப் புறக்கணித்து, அழிவுக்கு ஒப்புக்கொடுக்கவில்லை. விரோதிகள் கையில் ஒப்புக்கொடுத்து இருந்தார்.

வசனம் 9:32-35

இப்பொழுதும் உடன்படிக்கையையும் கிருபையையும் காக்கிற வல்லமையும் பயங்கரமுமுள்ள மகா தேவனாகிய எங்கள் தேவனே, அசீரியா ராஜாக்களின் நாட்கள் முதற்கொண்டு இந்நாள்வரைக்கும் எங்களுக்கும், எங்கள் ராஜாக்களுக்கும், எங்கள் பிரபுக்களுக்கும், எங்கள் ஆசாரியர்களுக்கும், எங்கள் தீர்க்கதரிசிகளுக்கும், எங்கள் பிதாக்களுக்கும், உம்முடைய ஜனங்கள் அனைவருக்கும் நேரிட்ட சகல வருத்தமும் உமக்கு முன்பாக அற்பமாய்க் காணப்படாதிருப்பதாக. எங்களுக்கு நேரிடப்பண்ணின எல்லாவற்றிலும் நீர் நீதியுள்ளவர். நீர் உண்மையாய் நடப்பித்தீர். நாங்களோ ஆகாமியம்பண்ணினோம். எங்கள் ராஜாக்களும், எங்கள் பிரபுக்களும், எங்கள் ஆசாரியர்களும், எங்கள் பிதாக்களும், உம்முடைய நியாயப்பிரமாணத்தின்படி செய்யாமலும், உம்முடைய கற்பனைகளையும், நீர் அவர்களைக் கடிந்துகொண்ட உம்முடைய சாட்சிகளையும் கவனியாமலும் போனார்கள். அவர்கள் தங்கள் ராஜ்யத்திலும், நீர் அவர்களுக்குக் கொடுத்த உம்முடைய பெரிய தயையிலும், நீர் அவர்களுக்கு முன்பாகத் திறந்துவைத்த விசாலமும் செழிப்புமான தேசத்திலும் உமக்கு ஊழியஞ்செய்யாமலும், தங்கள் துர்க்கருமங்களை விட்டுத் திரும்பாமலும் போனார்கள்.

இங்கே தேவனைப்பற்றி அறிக்கை பண்ணப்படுவதையும், அதே நேரத்தில் தங்களின் வருத்தங்களையும் தேவனுக்கு தெரிவிப்பதையும் வாசிக்கிறோம். தேவனைப்பற்றி முதலில் உடன்படிக்கையும் கிருபையையும் காக்கிற வல்லமையும் பயங்கரமுமுள்ள மகாதேவனாகிய எங்கள் தேவனே என்று கூறுகிறார்கள். தேவன் எப்படிப்பட்டவர் என்பது அவர்களுக்குத் தெரியும். அதுமட்டுமன்றி அவர்களுக்கும் அவர்களின் இராஜாக்களுக்கும் அவர்களின் பிரபுக்களுக்கும், அவர்களின் ஆசாரியர்களுக்கும், தீர்க்கதரிசிகளுக்கும், அவர்களின் பிதாக்களுக்கும், அசீரியா இராஜாக்களின் நாட்கள் முதற்கொண்டு, அவர்களுக்கு நேரிட்டதனைத்தையும் அவர்கள் அறிந்திருந்தனர். அந்நாட்களில் அசீரியா இராஜாவின் நாட்கள் முதற்கொண்டு தேவன் அவர்களுக்கு இரக்கம் செய்திருந்தார். ஆனால் அவர்களோ தேவனுக்கு விரோதமாக ஆகாமியம் பண்ணினார்கள்.

அவர்கள் தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்படி செய்யாமலும், தேவனுடைய கற்பனைகளையும் தேவன் அவர்களைக் கடிந்துகொண்ட அவருடைய சாட்சிகளையும் கவனியாமற்போனார்கள். அவர்கள் தங்களின் இராஜ்ஜத்திலும், தேவன் அவர்களுக்கு முன்பாகத் திறந்து வைத்த விசாலமும் செழிப்புமான தேசத்திலும் அவருக்கு ஊழியஞ்செய்யாமற் போனார்கள். தேவன் செய்த சகல நன்மைகளையும் எண்ணிப் பார்க்கும்போது அவர்கள் செய்தது எவ்வளவு துரோகம் ஆகும் என்பது தெரியும். நிச்சயமான இரண்டு செய்திகளை நாம் இங்கு காணமுடிகிறது. ஒன்று, தேவன் நீதிபரராயிருக்கிறார். மற்றது அவர்களோ தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்தனர் என்பதாகும்.

வசனம் 9:36-38

இதோ, இன்றையதினம் நாங்கள் அடிமைகளாயிருக்கிறோம். இதோ, பலனையும் நன்மையையும் அனுபவிக்கும்படி நீர் எங்கள் பிதாக்களுக்குக் கொடுத்த இந்தத் தேசத்தில்தானே நாங்கள் அடிமைகளாயிருக்கிறோம். அதின் வருமானம் எங்கள் பாவங்களினிமித்தம் நீர் எங்கள்மேல் வைத்த ராஜாக்களுக்குத் திரளாகப்போகிறது. அவர்கள் தங்களுக்கு இஷ்டமானபடியே எங்கள் சரீரங்களையும் எங்கள் மிருகஜீவன்களையும் ஆளுகிறார்கள். நாங்கள் மகா இக்கட்டில் அகப்பட்டிருக்கிறோம். இவையெல்லாம் இப்படி இருக்கிறபடியால், நாங்கள் உறுதியான உடன்படிக்கைபண்ணி அதை எழுதிவைக்கிறோம். எங்கள் பிரபுக்களும், எங்கள் லேவியரும், எங்கள் ஆசாரியரும் அதற்கு முத்திரைபோடுவார்கள் என்றார்கள்.

அவர்கள் ஜெபத்திலே அன்றைய, அவர்களின் நிலையைக்குறித்து ஜெபித்தனர். நாங்கள் வேறு நாட்டு இராஜாக்களின்கீழ் அடிமைகளாக இருக்கிறோம் என்று

புலம்புகிறார்கள். நாடு பலனும் நன்மையும் நிறைந்ததாகத்தான் உள்ளது. ஆனால் அந்த நன்மைகளும் பலன்களும் அன்னிய இராஜாக்களிடம்தானே உள்ளது. அவர்களுக்கு அதில் உரிமை ஒன்றும் இல்லை. அவர்களின்மீதும் அவர்களின் மிருகஜீவன்கள்மீதும் இராஜாக்களுக்குத்தான் பூரண அதிகாரம் இருந்தது. அந்த இராஜா, அந்த யூதர்களுக்கு யாதுவேண்டுமானாலும் செய்ய அதிகாரம் பெற்றிருந்தான். இவைகளை நினைத்து அந்த யூதர்கள் மிகவும் சஞ்சலப்பட்டனர்.

அந்த ஜனங்கள் தங்கள் ஜெபத்தின்மூலம் தங்களின் தேவனாகிய கர்த்தருக்கு முழுவதும் உண்மையாயிருந்தார்கள். ஆகையால் அவர்கள் உறுதியாய் உடன்படிக்கை பண்ணி எழுதிவைக்கிறோம் என்று ஜெபிக்கிறார்கள். அவர்களின் பிரபுக்களும், அவர்களின் லேவியரும், அவர்களின் ஆசாரியரும் அதற்கு முத்திரைபோடுவர் என்று சொன்னார்கள்.

# 10. உடன்படிக்கை முத்திரை போடப்படல்

அதிகாரம் 10

உடன்படிக்கை முத்திரை போடப்படல்

வசனம் 10:1-29

முத்திரைபோட்டவர்கள் யாரென்றால்: அகலியாவின் குமாரனாகிய திர்ஷாதா என்னும் நெகேமியா, சிதேகியா, செராயா, அசரியா, எரேமியா, பஸ்கூர், அமரியா, மல்கிஜா, அத்தூஸ், செபனியா, மல்லூக், ஆரீம், மெரேமோத், ஒபதியா, தானியேல், கிநேதோன், பாருக், மெசுல்லாம், அபியா, மீயாமின், மாசியா, பில்காய், செமாயா என்னும் ஆசாரியர்களும், லேவியராகிய அசனியாவின் குமாரன் யெசுவா, எனாதாதின் குமாரரில் ஒருவனாகிய பின்னூயி, கத்மியேல் என்பவர்களும், அவர்கள் சகோதரராகிய செபனியா, ஒதியா, கேலிதா, பெலாயா, ஆனான், மீகா, ரேகோப், அசபியா, சக்கூர், செரெபியா, செபனியா, ஓதியா, பானி, பெனினூ என்பவர்களும், ஜனத்தின் தலைவராகிய பாரோஷ், பாகாத்மோவாப், ஏலாம், சத்தூ, பானி, புன்னி, அஸ்காத், பெபாயி, அதோனியா, பிக்வாய், ஆதின், ஆதேர், இஸ்கியா, அசூர், ஒதியா, ஆசூம், பெத்சாய், ஆரீப், ஆனதோத், நெபாய், மக்பியாஸ், மெசுல்லாம், ஏசீர், மெஷெசாபெயேல், சாதோக், யதுவா, பெலத்தியா, ஆனான், அனாயா, ஓசெயா, அனனியா, அசூப், அல்லோகேஸ், பிலகா, சோபேக், ரேகூம், அஷ்பனா, மாசெயா, அகியா, கானான், ஆனான், மல்லூக், ஆரிம், பானா என்பவர்களுமே. ஜனங்களில் மற்றவர்களாகிய ஆசாரியரும், லேவியரும், வாசல் காவலாளரும், பாடகரும், நிதனீமியரும், தேசங்களின் ஜனங்களைவிட்டுப் பிரிந்து விலகித் தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குத் திரும்பின அனைவரும், அவர்கள் மனைவிகளும், அவர்கள் குமாரரும் அவர்கள் குமாரத்திகளுமாகிய அறிவும் புத்தியும் உள்ளவர்களெல்லாரும், தங்களுக்குப் பெரியவர்களாகிய தங்கள் சகோதரரோடே கூடிக்கொண்டு கொடுக்கப்பட்ட தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்படி நடந்துகொள்வோம் என்றும், எங்கள் ஆண்டவராகிய கர்த்தரின் கற்பனைகளையும் சகல நீதிநியாயங்களையும், கட்டளைகளையும் எல்லாம் கைக்கொண்டு, அவைகளின்படி செய்வோம் என்றும்,

அந்த யூதர்கள் அந்த உடன்படிக்கையை எழுதி முடித்தனர். எல்லா குடும்பங்களின் தலைவர்களும், ஆசாரியர்களும், அதிலே கையொப்பமிட்டனர். நெகேமியா முதலிலும்,

அவருக்குப்பின் லேவியின் குடும்பத்தலைவர்களும், பின்பு மற்றெல்லாத் தலைவர்களும் கையொப்பமிட்டனர். இவர்கள் எல்லாரும் தேவனுக்கு முன்பாக உடன்படிக்கையை ஆணையிட்டு பிரமாணம்பண்ணினார்கள். மற்ற எல்லாரும்கூட, தலைவர்களுடன் சேர்ந்துகொண்டு மோசேயைக்கொண்டு கொடுக்கப்பட்ட தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்படி நடந்துகொள்வோம் என்று ஆண்டவராகிய கர்த்தரின் கற்பனைகளையும், சகல நீதி நியாயங்களையும், கட்டளைகளையும் எல்லாம் கைக்கொண்டு அவைகளின்படி செய்வோம் என்றும் ஆணையிட்டுப் பிரமாணம்பண்ணினார்கள்.

வசனம் 10:30-33

நாங்கள் எங்கள் குமாரத்திகளைத் தேசத்தின் ஜனங்களுக்குக் கொடாமலும், எங்கள் குமாரருக்கு அவர்கள் குமாரத்திகளைக் கொள்ளாமலும் இருப்போம் என்றும், தேசத்தின் ஜனங்கள் ஓய்வுநாளிலே சரக்குகளையும், எந்தவிதத்தானியதவசத்தையும் விற்கிறதற்குக்கொண்டுவந்தால், நாங்கள் அதை ஓய்வுநாளிலும் பரிசுத்தநாளிலும் அவர்கள் கையில் கொள்ளாதிருப்போம் என்றும், நாங்கள் ஏழாம் வருஷத்தை விடுதலை வருஷமாக்கிச் சகல கடன்களையும் விட்டுவிடுவோம் என்றும் ஆணையிட்டுப் பிரமாணம்பண்ணினார்கள். மேலும்: நாங்கள் எங்கள் தேவனுடைய ஆலயத்தின் ஆராதனைக்காகச் சமுகத்தப்பங்களுக்கும், நித்தியபோஜனபலிக்கும், ஓய்வுநாட்களிலும் மாதப்பிறப்புகளிலும் செலுத்தும் சர்வாங்க தகனபலிகளுக்கும், பண்டிகைகளுக்கும், பிரதிஷ்டையான பொருள்களுக்கும், இஸ்ரவேலுக்காகப் பாவநிவிர்த்தி உண்டாக்கும் பலிகளுக்கும், எங்கள் தேவனுடைய ஆலயத்தின் சகல வேலைக்கும், வருஷந்தோறும் நாங்கள் சேக்கலில் மூன்றில் ஒரு பங்கைக் கொடுப்போம் என்கிற கடனை எங்கள்மேல் ஏற்றுக்கொண்டோம்.

அவர்கள் பண்ணின உடன்படிக்கையிலே நான்கு அம்சங்களைக் காணமுடிகிறது. (1) அந்நிய தேசத்திலே பெண்கொடுக்காமலும், பெண்கொள்ளாமலும் இருத்தல் - அந்நியர் என்ற கூறும்போது இனத்தின் அடிப்படையல்ல, தேவனை ஏற்றுக்கொண்டவர்கள், ஏற்றுக் கொள்ளாதவர்கள் என்ற அடிப்படையிலேயே அந்நியர் எனப்பட்டனர் - இந்தக் கொள்கை இன்றும் நடைமுறையில் உள்ளது (2.கொரி.6:14-16).

(2) ஓய்வுநாளைப் பரிசுத்தமாக ஆசரித்தல் - இதுவரை அவர்கள் தங்கள் வசதிக்கேற்ப ஓரளவுதான் பரிசுத்தமாக ஆசரித்துவந்தனர். உதாரணமாக ஓய்வுநாளிலே அவர்கள் சரக்குகளை விற்பதைமட்டும் நிறுத்திவைத்திருந்தனர். ஆனால் அந்த இராஜ்யத்தின் மக்கள் விற்பதற்காகக் கொண்டுவந்த, தேவைப்படும் பொருட்களை அவர்களிடமிருந்து வாங்கிக்கொள்வதை, ஓய்வுநாட்களில் அவர்கள் நிறுத்திவைக்கவில்லை. ஆனால் இப்போது அவ்வாறு செய்யமாட்டோம் என்று உடன்படிக்கைபண்ணினார்கள் (உபா.5:12-15).

(3) நியாயப்பிரமாணத்தில் கூறப்பட்டுள்ளபடி ஏழாம் வருஷத்தில், நிலத்தைப் பயிரிடாமல் விட்டுவிடுதல் (யாத்.23:10-12, லேவி.25:4-7). அதன்படி ஏழாம் வருஷத்திலே நிலத்தில் விளைந்த யாதொன்றையும் அவர்கள் விற்பமாட்டார்கள். நடைமுறையில் கைக்கொள்ளாத கற்பனைகளில் இதுவும் ஒன்று (2.நாளா.36:21). அந்தப் பாவத்திற்காக தேவன் அவர்களின் நிலங்களைச் சபித்து பயனற்றதாக 70 ஆண்டுகாலம் - அவர்கள் சிறைப்பட்டிருந்த காலத்தில் - விருதாவாக இருக்கச்செய்தார். அதனுடன், அவர்கள் நாங்கள் சகல கடன்களையும் விட்டுவிடுவோம் என்று ஆணையிட்டுக்கொண்டனர். நாமும் செய்யவேண்டிய முக்கியமான கடமையும் அதுவே. நாமும் மற்றவர்களிடம் வற்புறுத்தி அதிகம் பெறக்கூடாதன்றோ?

(4) கடைசியாக அவர்கள் ஆணையிட்டுப் பண்ணிக்கொண்ட பிரமாணம் - தேவனுடைய ஆலயத்தின் சகல வேலைகளுக்கும் பராமரிப்பிற்கும் ஆண்டுதோறும் ஒரு தொகையை செலுத்துதல். நாமும் நம்முடைய ஆலயங்களின் பராமரிப்புச் செலவிற்காக மற்றவர்களிடம் கேட்பதைவிட நம்மிடமே கேட்டுக்கொள்ளவேண்டியது மிகவும்

அவசியமாகும். - அது பணம் மட்டுமல்ல, சகல பொருளாகவும் இருக்க அனுமதிக்கலாம். தேவன் நமக்கு அனைத்தையும் கொடுத்திருக்கிறாரே.

இவ்வாறாக அவர்கள் உடன்படிக்கை செய்து ஆணையிட்டு பிரமாணம் பண்ணிக்கொண்டார்கள்.

வசனம் 10:34-39

நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடியே எங்கள் தேவனாகிய கர்த்தருடைய பலிபீடத்தின்மேல் எரிகிறதற்காக, குறிக்கப்பட்ட காலங்களில் வருஷாவருஷம் எங்கள் பிதாக்களுடைய குடும்பங்களின்படியே, எங்கள் தேவனுடைய ஆலயத்துக்குக் கொண்டுவரவேண்டிய விறகு காணிக்கைக்காகவும், ஆசாரியருக்கும், லேவியருக்கும், ஜனத்துக்கும் சீட்டுப்போட்டோம். நாங்கள் வருஷந்தோறும் எங்கள் தேவனுடைய ஆலயத்துக்கு எங்கள் தேசத்தின் முதற்பலனையும், சகலவித விருட்சங்களின் எல்லா முதற்கனிகளையும் கொண்டுவரவும், நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடியே, எங்கள் குமாரரில் முதற்பேறுகளையும், எங்கள் குமாரரில் முதற்பேறுகளையும், எங்கள் ஆடுமாடுகளாகிய மிருகஜீவன்களின் தலையீற்றுகளையும், எங்கள் தேவனுடைய ஆலயத்துக்கும் எங்கள் தேவனுடைய ஆலயத்திலே ஊழியஞ்செய்கிற ஆசாரியரிடத்துக்கும் கொண்டுவரவும், நாங்கள் எங்கள் பிசைந்தமாவில் முதற்பாகத்தையும், எங்கள் படைப்புகளையும், சகல மரங்களின் முந்தின பலனாகிய திராட்சப்பழரசத்தையும், எண்ணெயையும், எங்கள் தேவனுடைய ஆலயத்தின் அறைகளில் வைக்கும்படி ஆசாரியரிடத்துக்கும், எங்கள் நிலப்பயிர்களில் தசமபாகம் லேவியரிடத்துக்கும் கொண்டுவரவும், லேவியராகிய இவர்கள் எங்கள் வெள்ளாண்மையின் பட்டணங்களிலெல்லாம் தசமபாகம் சேர்க்கவும், லேவியர் தசமபாகம் சேர்க்கும்போது ஆரோனின் குமாரனாகிய ஒரு ஆசாரியன் லேவியரோடேகூட இருக்கவும், தசமபாகமாகிய அதிலே லேவியர் பத்தில் ஒரு பங்கை எங்கள் தேவனுடைய ஆலயத்திலுள்ள பொக்கிஷ அறைகளில் கொண்டுவரவும் திட்டம்பண்ணிக்கொண்டோம். பரிசுத்தஸ்தலத்தின் பணிமுட்டுகளும், ஊழியஞ்செய்கிற ஆசாரியரும், வாசல் காவலாளரும், பாடகரும் இருக்கிற அந்த அறைகளிலே இஸ்ரவேல் புத்திரரும் லேவிபுத்திரரும் தானியம் திராட்சரசம் எண்ணெய் என்பவைகளின் படைப்புக்களைக் கொண்டுவரவேண்டியது. இவ்விதமாய் நாங்கள் எங்கள் தேவனுடைய ஆலயத்தைப் பராமரியாமல் விடுவதில்லையென்று திட்டம்பண்ணிக்கொண்டோம்.

அடுத்து ஒவ்வொரு கூட்டத்தினருக்கும் வெவ்வேறு பணிகளைக் கொடுக்கத் திட்டம் செய்தனர். அதனால் எல்லா வேலைகளும் நடந்தேறவும் பொறுப்புகள் பகிர்ந்து அளிக்கப்படவும் வாய்ப்பு ஏற்பட்டது. பலிபீடத்தின்மேல் எரிப்பதற்குத் தேவையான விறகு காணிக்கைகளைக் கொண்டு வருவதற்கான குழுவை ஏற்படுத்த சீட்டுப்போடப்பட்டது. அடுத்து வருஷந்தோறும் தேவனுடைய ஆலயத்திற்குத் தேசத்தின் முதற்பலனையும், விருட்சங்களின் முதற்கனிகளையும் கொண்டுவருவது குறித்தும் திட்டம் பண்ணிக்கொண்டனர். அடுத்து ஆடுமாடுகளில் தலையீற்றுகளையும், திராட்சைப்பழரசத்தையும், எண்ணெயையும், ஆசாரியரிடம் கொடுக்கத் திட்டம் பண்ணிக்கொண்டனர். நிலப்பயிர்களின் தசமபாகம் லேவியருக்குக் கொடுக்கப்பட்டது. அது தேவனுடைய பொக்கிஷ அறையில் சேர்க்கப்பட்டது. தேசத்திலே நிலத்தின் வித்திலும், விருட்சங்களின் கனியிலும் தசமபாகமெல்லாம் கர்த்தருக்கு உரியது. (லேவி.27:30)

லேவியர்களும் தங்களுடைய காணிக்கைகளில் தசம பாகத்தைக் கர்த்தருக்குக் கொடுக்கவேண்டும். இவை அனைத்தும் தேவனுடைய பொக்கிஷ அறையிலே சேர்க்கப்பட்டது. ஆரோனின் வழிவந்தவர்களாகிய ஆசாரியர்கள், முன்னின்று அனைத்துப் பணிகளையும் செய்துவைக்க திட்டம்பண்ணிக்கொண்டார்கள் (எண்.18:26).

ஆகையால், ஒவ்வொருவரும் தனது வருமானத்தின் தசம பாகத்தைக் கர்த்தருக்கு காணிக்கையாகக் கொடுக்கவேண்டும் என்று நியாயப்பிரமாண சட்டம் கூறுகிறது. சட்டமே இப்படியென்றால் கிருபையின் காணிக்கை எத்தனை அதிகமாய் இருக்கவேண்டும்? நமது காணிக்கைகள் உற்சாகமாய்க் கொடுக்கப்படவேண்டும். உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் (2.கொரி.9:7). இந்தக் காணிக்கைகள் அனைத்தும் தேவனுடைய பொக்கிஷத்தில் சேர்க்கப்பட்டது என்று வேதம் கூறுகிறது. நமது காணிக்கைகளும் அவ்வாறே சேர்க்கப்பட்டு தேவனுடைய சித்தத்தின்படி குறித்துவைக்கப்பட்டுப் பயன்படுத்தப்படும். எத்தனை சிலாக்கியமுள்ள தேவகிருபை.

இந்த அதிகாரத்தின் கடைசி வரிகள் அனைத்தும் செயலையும் குவித்தெடுத்துக்கூறுகிறது. தேவனுடைய ஆலயத்தைப் பராமரியாமல் விடுவதில்லை (வச.39). இஸ்ரவேலர் தேவனுடைய ஆலயத்திற்கு ஒழுங்காக வருகை தந்தவர்கள். அந்தப் புதிய நாட்டிலே இப்போது அவர்கள் அடைக்கலம் தேடி வந்தவர்கள் என்றும் தேவன் அவர்களோடு இருக்கிறார் என்றும் நம்பினார்கள். மேலும் அவர்கள் தேவனுடைய ஆலயம் ஸ்திரமாய் இருந்தவரையில் அவர்களுக்கு எந்தவிதமான இக்கட்டும் நிச்சயமாய் ஏற்படாது என்று அவர்கள் நம்பினார்கள். ஆகையால் அவர்களுடைய வாழ்க்கையில் சற்று அஜாக்கிரதையும் ஏற்படலாயிற்று. அவர்கள் விரும்பியதையெல்லாம் செய்து இஷ்டமானபடியெல்லாம் வாழத்தலைப்பட்டார்கள். பிறகு தேவனுடைய ஆயலத்திற்குச் சென்று, எல்லாம் நல்லபடியே நடைபெறுவதாக நினைத்துக்கொண்டனர். தீர்க்கதரிசிகள் இவர்களுடைய செயல்கள் குறித்து இரவும் பகலும் எச்சரித்து தீர்க்கதிரிசனம் உரைத்தனர். யூதாவின் கடந்த கடைசி மூன்று இராஜாக்களின் ஆட்சியின் காலங்களிலே, எரேமியா தீர்க்கதரிசி அவர்களை மிகவும் கடுமையாய் எச்சரித்து தீர்க்கதரிசனம் உரைத்தான். நீங்கள் திருடி, கொலைசெய்து, விபசாரம்பண்ணி, பொய்யாணையிட்டு, பாகாலுக்கு தூபங்காட்டி,, நீங்கள் அறியாத அந்நிய தேவர்களைப்பின்பற்றி, பிற்பாடு வந்து என் நாமம் தரிக்கப்பட்ட இந்த ஆலயத்திலே, எனக்கு முன்பாக நின்று இந்த அருவருப்புகளையெல்லாம் செய்வதற்காக விடுதலை பெற்றிருக்கிறோம் என்று சொல்வீர்களோ? என் நாமம் தரிக்கப்பட்ட இந்த ஆலயம் உங்கள் பார்வைக்கு கள்ளர் குகை ஆயிற்றோ? இதோ நானும் இதைக் கண்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரேமி.7:9-11). மேலும் கர்த்தர் அவர்களை எச்சரித்து, அவர் என்ன செய்வார் என்று கூறினார். நான் உங்களை என் முகத்தைவிட்டுத் தள்ளிப்போடுவேன். தேசம் பாழாகும் என்று எச்சரித்தார். அவர் எச்சரித்தபடியே அவர்களுக்குச் செய்தார். ஆகையால் அந்த இஸ்ரவேலர், இப்போது தேவனுக்குப் பிரியமான கீழ்ப்படிதலாக இருக்கும் என்று, தேவனுடைய ஆலயத்தைப் பராமரியாமல் விடுதலையென்று திட்டம்பண்ணி ஆணையிட்டார்கள். அது ஒரு மகிழ்ச்சியான ஆரம்பம்தான்.

# 11. எருசலேமில் வாழ்ந்த மக்கள்

அதிகாரம் 11

எருசலேமில் வாழ்ந்த மக்கள்

அந்த யூதர்கள் ஆணையிட்டுத் திட்டம்பண்ணினது மட்டுமன்றி தங்கள் வாழ்க்கையையும் ஒழுங்குபடச் செய்தனர். அது ஏனோதானோ என்ற ஒரு வாழ்க்கை முறையல்ல. ஒவ்வொன்றும் மிகவும் கவனத்துடன் திட்டமிடப்பட்டது.

அந்த ஜனத்தின் அதிகாரிகள் எருசலேமிலே குடியிருந்தார்கள். மற்ற ஜனங்கள் தங்களுக்குள்ளே பத்துப்பேரில் ஒருவனை எருசலேமில் சென்று குடியிருக்கச்செய்தனர். மற்றவர்கள் அனைவரும் யூதாவின் பல பட்டணங்களிலும் கிராமங்களிலும் குடியிருக் சிதறிப்போகும்படி செய்தார்கள். அடுத்து யூதாவின் புத்திரரைப்பற்றியும் பென்ஜமீன் புத்திரரைப்பற்றியும் குறிப்பாக கூறப்பட்டுள்ளது. அவர்கள் காரியங்களைச் சரிவர செய்ய விரும்பினார்கள் என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டாகும். முன்பு யெரொபெயாம், தாவீது இராஜாவின் பேரனான ரெகொபெயாமுக்கு விரோதமாய் கலகம் செய்தபோது, இந்த இரண்டு கோத்திரத்தாரும் ரெகோபெயாமுடன் துணையிருந்தனர் என்று வேதத்தில் நாம் வாசிக்கிறோம் (1.இராஜா.12:19-20).

அடுத்து, எருசலேமிலே வசித்துவந்த அந்த இரண்டு கோத்திரத்தாரின், குடும்பத்தலைவர்கள் எஸ்றாவின் வரிசைப்படுத்திக் கூறியிருக்கக் காண்கிறோம். மற்றும் தேவனுடைய ஆலயத்திலே பணிவிடை செய்துகொண்டிருந்த 822 பேரின் தலைவர்களான மூன்று ஆசாரியர்களின் பெயர்கள் கூறப்பட்டிருக்கக் காண்கிறோம். அடுத்து 242 குடும்பத்தலைவர்களின் பெயர்களையும் 128 பராக்கிரமசாலிகளின் பெயர்களையும் குறிக்கப்பட்டிருக்கக் காண்கிறோம். அதற்கு அடுத்தபடி தேவனுடைய ஆலயத்தின் வெளிவேலையை விசாரிக்கிற தலைவர்களிலே மூன்றுபேரையும், அவர்களுடன் இருந் 284 லேவியர்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆசாபின் வழி வந்தவர்களான பாடகர்களும் இதில் அடங்குவர் (1.நாளா. 16:4-5). ஜெபத்தின் ஸ்தோத்திரப்பாட்டைத் துவங்குகிறவனான மத்தனியா, மற்றப் பாடகர்களுக்குத் தலைவனான இருந்தான்.

இதே மத்தனியாவைப் பற்றி 12:8ல் துதி செய்தலை விசாரித்த தலைவர்களில் ஒருவனாக குறிப்பிடப்பட்டிருக்கக் காண்கிறோம். துதி செய்தலை விசாரிக்கும் தலைவர் என வாசிக்கும்போது எத்துணை மகிழ்ச்சி அடைய முடிகிறது. அதுபோல நம்மைப் பற்றிக் கூறப்பட ஏதுவுண்டோ? நம்முடைய தினசரி தியானங்களிலே துதி செய்தல் நடைபெறுகிறதா? எப்போதும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செய்கிறவர்களாக நினைவுகூரப்பட முடியுமா?

மறுபடியும் 23,24ம் வசனங்களில் அந்தப் பாடகர்களைப் பற்றி ருசிகரமான வேறு தகவல்களை நாம் அறியமுடிகிறது. பாடகராகிய அவர்களுக்காக அன்றாடகப்படி கொடுக்கப்படும்படி இராஜாவினால் கட்டளையிடப்பட்டிருந்தது. அர்த்தசஷ்டா இராஜாவுக்குப் பாடகர்கள் எங்கிருந்தனர் என்ற செய்தி எப்படி தெரிந்தது? அவன் ஜெயித்திருந்த நாடுகளிலிருந்து ஆலோசகர்கள் நாட்டின் நிலைகள்பற்றியும் அவர்களின் தேவைகள்பற்றியும் இராஜாவுக்குத் தெரிவித்து வந்தனர். பெத்தகியா என்பவன் ஜனத்தின் காரியங்களுக்கெல்லாம் ராஜாவின் சமுகத்தில் நின்றான் என்று வாசிக்கிறோம். கடைசியாக தல்மேர் அக்கூப் என்பவர்கள் வாயில் காப்பாளர்களான 172 பேருக்கு தலைவர்களாக இருந்தனர்.

அடுத்து 25 முதல் 36 வரையிலான வனங்களில் சில கிராமங்களின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. அவைகளில் வாழ்ந்த மனிதர்கள் எருசலேமிலிருந்து சற்று தொலைதூரத்தில் இருந்தனர் என்று காண்கிறோம். அவர்கள் சமயம் வாய்த்தபோது தங்களின் புரதான இடங்களுக்குத் திரும்பிச் சென்றனர். இந்த இடங்களனைத்தும், அர்த்தசஷ்டா இராஜாவின் ஆளுகைக்குட்பட்டிருந்து. அந்த ஜனங்கள் தங்களின் பழைய இடங்களுக்கே குடிபெயர்ந்து சேர்ந்தபோதிலும் அவர்கள் அந்த இராஜாவின் ஆளுகைக்குட்பட்ட மக்களேயாவார். அந்த இடங்களில் ஓரிடம் சிற்பாசாரிகளின் பள்ளத்தாக்கு என பெயர்பெற்றிருந்தது. இந்த இடம் யோப்பா பட்டணத்தருகில் இருந்தது. இங்குதான் லீபனோனிலிருந்து வெட்டப்பட்ட மரங்கள் இறக்குமதி

செய்யப்பட்டன. ஆகையால் இந்தக் கிராமப்பகுதியில் இருந்த ஜனங்கள் தச்சுவேலை செய்பவர்களாக இருந்திருக்கலாம்.

# 12. ஆசாரியர்களின் பெயர்கள்

அதிகாரம் 12

ஆசாரியர்களின் பெயர்கள்

இந்த அதிகாரத்தில், எருசலேமுக்குத் திரும்பிவந்தவர்களின் பெயர்களை அந்த யூதர்கள் கவனத்துடன் குறித்து வைத்துள்ளதைக் காணமுடிகிறது. அந்தப் பெயர்களில் பெரும்பாலானவை இந்த நெகேமியாவின் புத்தகத்தில் மூன்றுமுறை குறிக்கப்பட்டு, வேறு சில ஆசாரியர்களின் தலைவர்களின் சேர்க்கப்பட்டுள்ளன. அதனுடன் குடும்பத் தலைவர்களின் பெயர்களும் லேவியர்களின் தலைவர்களின் பெயர்களும் குறிக்கப்பட்டுள்ளன.

வசனம் 12:24

லேவியரின் தலைவராகிய அசபியாவும், செரெபியாவும், கத்மியேலின் குமாரன், யெசுவாவும், அவர்களுக்கு எதிரே நிற்கிற அவர்கள் சகோதரரும், தேவனுடைய மனுஷனாகிய தாவீதினுடைய கற்பனையின்படியே துதிக்கவும் தோத்திரிக்கவும், ஒருவருக்கொருவர் எதிர்முகமாக முறைமுறையாயிருந்தார்கள்.

லேவியர்கள் தேவனை எவ்வாறு துதித்தார்கள் என்று விளங்கப்பட்டிருத்தலைக் காண்கிறோம். அவர்கள் சிறு குழுக்களாகப் பிரிந்து எதிரெதிரே நின்று தேவனைத் துதித்தார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் எதிர்முகமாக முறைமுறையாக, முதலில் ஒரு குழு துதியை ஏறெடுக்க அதன்பின் அதற்கு எதிர்பதிலாக மற்ற குழு துதியைச் செலுத்தியது. அந்தப் பெயர்களில் குறிக்கப்பட்டுள்ள சிலர் பாடகர்களாகவும் அதே நேரத்தில் காவல் காக்கிறவர்களாகவும் பணியாற்றி வந்ததாகக் காண்கிறோம் (வச.8,9,24-25). ஒரு கூட்டத்தார் முதலில் துதிப்பாடல் பாடவும் அதற்கு பதிலாக மற்றொரு குழுவினர் பாடவும், மாறி மாறி பாடிய விதம் கேட்கப்பட்டதற்கு மிகவும் இனிமையான குரலோசையாக இருந்திருக்கவேண்டும்.

வசனம் 12:27

எருசலேமின் அலங்கத்தைப் பிரதிஷ்டைபண்ணுகையில், துதியினாலும் பாடலினாலும், கைத்தாளம் தம்புரு சுரமண்டலம் முதலான கீதவாத்தியங்களினாலும், பிரதிஷ்டையை மகிழ்ச்சியோடே கொண்டாட எல்லா இடங்களிலும் இருக்கிற லேவியரை எருசலேமுக்கு வரும்படி தேடினார்கள்.

அலங்கங்கள் கட்டி முடிக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்படுவதற்கு மிகவும் ஆயத்தமாக இருந்தது. அதற்காக எங்குமிருந்த லேவியரையும், பாடகர்களையும் எருசலேமுக்கு வந்து சேரும்படி அழைப்புவிடுவித்தனர். அவர்கள் வரும்போது எல்லாவிதமான தங்களுடைய இசைக்கருவிகளையெல்லாம் கொண்டுவரும்படி அழைக்கப்பட்டனர். மற்றுமொரு சுவையான செய்தி யாதெனில், அந்தப் பாடகர்கள் தங்கள் இருப்பிடமாக, எருசலேமைச் சுற்றிலும் பல கிராமங்களை அமைத்திருந்தனர். அந்தக் கிராமங்களில் தங்கியிருந்ததினால், அவர்களின் பணியிடமாகிய தேவனுடைய ஆலயத்திற்கு வெகு அருகாமையிலேயே அவர்கள் தங்கியிருந்தனர் எனலாம். இதற்கு

உதாரணமாக, இராஜாவின் வேலையை விசாரிக்கிறதற்காக, அருகிலேயே வாசம்பண்ணின குயவராயிருந்த (1.நாளா.4:22) அவர்களைக் கூறலாம். நமது வாழ்க்கையிடமும் தேவனுக்கடுத்த பணிக்கும், துதிக்கும் ஏற்ற இடத்தின் அருகிலேயே அமைந்திருத்தல் வேண்டும்.

வசனம் 12:30

ஆசாரியரும் லேவியரும் தங்களைச் சுத்தம்பண்ணிக்கொண்டு, ஜனத்தையும் பட்டணவாசல்களையும் அலங்கத்தையும் சுத்தம்பண்ணினார்கள்.

முதலாவது ஆசாரியர்களும் லேவியர்களும் தங்களைச் சுத்தம் பண்ணிக்கொண்டனர். அடுத்து ஜனங்களையும், பட்டண வாசல்களையும் அலங்கத்தையும் சுத்தம் பண்ணினார்கள். நாமும் நமது இருதயங்களைப் பரிசுத்தமாக்கிக்கொள்ளவேண்டும் என்று யாக்கோபு 4:8ல் வேதம் நமக்குக் கட்டளையிடுகிறது. அவர்மேல் நம்பிக்கை வைத்திருக்கிற எவனும் அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுவான் (1.யோ.3:3) என்று வேதம் கூறுகிறது. அதுமட்டுமின்றி 1.பேதுரு 1:22ல் கூறியுள்ளபடி, ஒருவரில் ஒருவர் ஊக்கமாய் அன்பு கூறுவதனால் நம்மைச் சுத்தமாக்கிக்கொள்ள முடியும். அலங்கங்கள் பிரதிஷ்டைக்காக ஆயத்தப்படுத்தப்பட்டது.

வசனம் 12:31

அப்பொழுது நான் யூதாவின் பிரபுக்களை அலங்கத்தின்மேல் ஏறப்பண்ணி, துதிசெய்து நடந்துபோகும்படி இரண்டு பெரிய கூட்டத்தாரை நிறுத்தினேன். அவர்களில் ஒரு கூட்டத்தார் அலங்கத்தின்மேல் வலதுபுறமாகக் குப்பைமேட்டு வாசலுக்குப் போனார்கள்.

இந்த வசனத்தில் நெகேமியா செய்தது என்ன என்பதனை அவன் விளக்கி எழுதியுள்ளான். வழக்கம்போல் நெகேமியா யாவற்றையும் ஒழுங்காகச் செய்துகொண்டுவந்தான். முதலாவது தலைவர்கள் அலங்கத்தின் மேல் ஏறிப்போனார்கள். அடுத்து பாடகர்கள் இரண்டு பிரிவினராய் பிரிந்து, எதிரெதிர் திசையில் அலங்கத்தைச் சுற்றி நடந்து வந்து தேவஆலயத்தண்டையிலே சந்தித்தனர். இந்தப் பாடகர் குழுவினர் அவ்வாறு சென்றதன் நோக்கம் அவர்கள் செல்லும் வழியயெல்லாம் துதி பாடல்களைப் பாடியவண்ணம் தங்களின் இசைக்கருவிகளை இசைத்துக்கொண்டு செல்லவேண்டும் என்பதேயாகும். ஒரு பாடகர் குழுவினருடன் எஸ்றாவும் மற்றொரு குழுவினருடன் நெகேமியாவும் சென்றனர். அந்த இரண்டு தேவனுடைய பிள்ளைகளுக்கும் அன்று மிகவும் ஒரு மிகழ்ச்சியான நாளன்றோ! ஒவ்வொரு தனிமனிதனும் அந்தப் பாடகர் குழவினருடன் செல்லும்போது, அவன் கட்டிய மதில் பகுதியின் பக்கமாகச் செல்கையில் எவ்வளவு உற்சாகமும் மகிழ்சியும் அடைந்திருப்பானன்றோ! அந்த நாளின் மகிழ்ச்சிக்கு அவன் ஒருவன் செய்து முடித்த பணியும் முக்கியமானதென்று அவன் நிச்சயம் அறிந்திருப்பான். இப்படியாக அலங்கங்கள் அனைத்தும் கட்டி முடிக்கப்பட்டிருந்தது.

இந்த நாளின் முக்கியம் தேவனைத் துதிசெய்யவேண்டும் என்பதே. அதற்காகவே அந்த இரண்டு பாடகர் குழுக்களும் தேவனுடைய ஆலயத்தினருகே சந்தித்தன. நெகேமியாவும் அவனுடனிருந்த பாடகர் குழுவும் அங்கே குழுமியிருந்தனர். அவர்கள் சத்தமாய்ப் பாடினார்கள் என்று நெகேமியா எழுதுகிறான். அடுத்து, அந்நாளிலே மிகுதியான பலிகளைச் செலுத்தி, தேவன் அவர்களுக்கு மகா சந்தோஷத்தை உண்டாக்கினதினால் மகிழ்ச்சியாயிருந்தார்கள். ஸ்திரீகளும் பிள்ளைகளும்கூட களிகூர்ந்தார்கள். எருசலேமின் களிப்பு தூரத்திலே கேட்கப்பட்டது. எவ்வளவு குதூகலமான ஆரவாரமாய் அது இருந்திருக்கவேண்டுமன்றோ!

வசனம் 12:44-47

அன்றையதினம் பொக்கிஷங்களையும், படைப்புகளையும், முதல் கனிகளையும், தசமபாகங்களையும் வைக்கும் அறைகளின்மேல், ஆசாரியர்களுக்கும் லேவியர்களுக்கும் நியாயப்பிரமாணத்தின்படியே வரவேண்டிய பட்டணங்களுடைய நிலங்களின் பங்குகளை அவைகளில் சேர்க்கும்படிக்கு, சில மனுஷர் விசாரிப்புக்காரராக வைக்கப்பட்டார்கள். ஊழியஞ்செய்து நிற்கிற ஆசாரியர்மேலும் லேவியர்மேலும் யூதா மனிதர் சந்தோஷமாயிருந்தார்கள். பாடகரும், வாசல் காவலாளரும், தாவீதும் அவன் குமாரனாகிய சாலோமோனும் கற்பித்தபடியே தங்கள் தேவனுடைய காவலையும், சுத்திகரிப்பின் காவலையும் காத்தார்கள். தாவீதும் ஆசாப்பும் இருந்த பூர்வநாட்களில் பாடகரின் தலைவரும் வைக்கப்பட்டு, தேவனுக்குத் துதியும் தோத்திரங்களும் செலுத்துகிற சங்கீதங்கள் திட்டம்பண்ணப்பட்டிருந்தது. ஆகையால் செருபாபேலின் நாட்களிலும், நெகேமியாவின் நாட்களிலும், இஸ்ரவேலர் எல்லாரும் பாடகருக்கும் வாசல் காவலாளருக்கும் அன்றாடகத் திட்டமாகிய பங்குகளைக் கொடுத்தார்கள். அவர்கள் லேவியருக்கென்று பிரதிஷ்டைபண்ணிக் கொடுத்தார்கள். லேவியர் ஆரோனின் புத்திரருக்கென்று அவர்கள் பங்கைப் பிரதிஷ்டைபண்ணிக்கொடுத்தார்கள்.

இந்த அதிகாரத்தில் தாவீது ராஜாவைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இந்தப் பாடல் முறை ஒழுங்குகள் அவனால் ஏற்படுத்தப்பட்டது என்பதற்காக ஆறுமுறை குறிப்பிட்டுள்ளதை நாம் காண்கிறோம். தாவீது நன்றாய் சுரமண்டலம் சாசிப்பதிலே தேறினவன் (1.சாமு.16:18). அவன் சங்கீதம புத்தகத்திலே உள்ள பல சங்கீதங்களைப் பாடினவன். ஆகையால் அவனுக்குத் தேவனைத் துதிப்பதிலே உள்ள இசைகளைத் திட்டம்பண்ணுவதில் பெரும்பங்கு உண்டு எனலாம். ஆனால் இதைவிட அதிக முக்கியமாகக் கருதப்படவேண்டியது இரு இடங்கிளலே தாவீது தேவனுடைய மனிதன் என அழைக்கப்படுவதேயாகும். அதைவிட சிறந்த வார்த்தைகள் அவனைப்பற்றிக் கூறப்பட்டிருக்க முடியாது.

வழக்கமான சுறுசுறுப்பின்படியே நெகேமியா பொக்கிஷங்களையும், படைப்புகளையும், தசமபாகங்களையும் வைக்கும் அறைகளுக்கு காவலையும் ஏற்படுத்தினான். ஜனங்களுக்கு அவர்கள் செலுத்தவேண்டிய முறைமையின்படியான தசம பாகங்களைக் குறித்து நினைவுபடுத்தவேண்டிய தருணம் அதுவன்றோ? அவர்கள் மகிழ்ச்சியோடே துதித்துப் பாடிக்கொண்டிருந்த அந்த நேரத்தில் காணிக்கை செலுத்தவேண்டிய கடமைபற்றியும் உணர்த்தப்படவேண்டுமன்றோ? அதைச் செய்வதற்கும், காணிக்கை செலுத்தவும் மக்கள் மகிழ்ச்சியாகவேயிருந்தனர். தேவன் நமது துதிதோத்திரங்களுடனே நாம் செலுத்தவேண்டியதை இணைத்தேயுள்ளார் எபிரெயர் 13:15-16ல் கூறியுள்ளபடி நாம்.... ஸ்தோத்திரபலரியை எப்போதும் செலுத்தக்கடவோம். அதே நேரத்தில் நன்மை செய்யவும் மறவாதிருக்கவேண்டும்.

# 13. நெகேமியா செய்த இதர காரியங்கள்

அதிகாரம் 13

நெகேமியா செய்த இதர காரியங்கள்

வசனம் 13:1-3

அன்றையதினம் ஜனங்கள் கேட்க, மோசேயின் புஸ்தகத்தை வாசித்தார்கள். அதிலே அம்மோனியரும் மோவாபியரும், இஸ்ரவேல் புத்திரருக்கு அப்பமும் தண்ணீரும் கொடுக்க எதிர்கொண்டுவராமல், அவர்களைச் சபிக்க அவர்களுக்கு விரோதமாய்ப் பிலேயாமைக் கூலிபொருத்திக்கொண்டபடியினால், அவர்கள் என்றைக்கும், அந்தச் சாபத்தை ஆசீர்வாதமாகத் திருப்பின எங்கள் தேவனுடைய சபைக்குட்படலாகாது என்று எழுதியிருக்கிறதாகக் காணப்பட்டது. ஆகையால் அவர்கள் அந்தக் கட்டளையைக் கேட்டபோது, பல ஜாதியான ஜனங்களையெல்லாம் இஸ்ரவேலைவிட்டுப் பிரித்துவிட்டார்கள்.

மோசேயின் பிரமாணப் புத்தகமாகிய தேவனுடைய வார்த்தைகளை வாசித்ததினால் ஏற்பட்ட விளைவுகளைப்பற்றி மேலும் இந்த அதிகாரத்தில் நாம் வாசிக்கிறோம். மேசேயினால் உபாகம புத்தகத்தில் 23:3-5 வசனங்களில் கூறப்பட்டுள்ளது அங்கு வாசிக்கப்பட்டது. அதில் அம்மோனியனும், மோவாபியனும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது என்று கூறப்பட்டுள்ளது. அவர்கள் ஏன் சபைக்கு உட்படுத்தக்கூடாதெனில்:

1) இஸ்ரவேலர் எகிப்தைவிட்டுப் பறப்பட்டபோது அவர்களுக்கு அப்பமும் தண்ணீரும் கொடுக்க அவர்கள் உடன்படவில்லை.

2) அப்படி புறப்பட்ட இஸ்ரவேலரைச் சபிக்கும்படி அவர்கள் பீலேயாம் என்ற தீர்க்கதரிசியை கூலிபேசி அழைப்பித்தனர். இந்த நிபந்தனை தொடர்ந்து தேவனை ஏற்றுக்கொள்ள மறுத்து வரும் அனைத்து மோவாபியருக்கு அம்மோனியருக்கும் பொருந்தும். ஆனால் மோவாபிய ஸ்திரியான ரூத், இஸ்ரவேலின் தேவனை ஏற்றக்கொண்டதினால் அந்தத் தடை அவளுக்கும் அவள் போன்றவருக்கும் பொருந்தாது. ரூத் தனது மாமியாகிய நகோமியினிடத்தில் உம்முடைய தேவன் என்னுடைய தேவன் என்று கூறினாள் (ரூத் 1:16). அதனால் அவள் இஸ்ரவேலுக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, யூதாவின் முக்கிய மனுஷனான போவாசுக்கு மனைவியானாள் என்று நாம் வாசிக்கிறோம் (ரூத் 4:13).

இதை இந்தப் பிரமாணத்தை வாசிக்கக் கேட்டபோது, வாசிக்கக் கேட்ட யூதர்கள் உடனே செயல்படத் துவங்கினர். இஸ்ரவேலிலிருந்து அப்படிப்பட்டவர்களை அவர்கள் உடனே நீக்கிப்போட்டனர். மறுபடியும் சாதாரணமான ஒரு பிரமாண வாசிப்பே இந்த நடைமுறைகளைச் செயல்படுத்தியதை நாம் வாசிக்கிறோம்.

வசனம் 13:4-7

இதற்குமுன்னே எங்கள் தேவனுடைய ஆலயத்தின் அறைகளை விசாரிக்க வைக்கப்பட்ட ஆசாரியனாகிய எலியாசிப் தொபியாவோடே சம்பந்தங்கலந்தவனாயிருந்து, முற்காலத்தில் காணிக்கைகளும், சாம்பிராணியும், பணிமுட்டுகளும், லேவியருக்கும் பாடகருக்கும் வாசல்காவலாளருக்கும் கட்டளைபண்ணப்பட்ட தானியம் திராட்சரசம் எண்ணெய் என்பவைகளிலே தசமபாகமும், ஆசாரியரைச் சேருகிற படைப்பான காணிக்கைகளும் வைக்கப்பட்டிருந்த இடத்தில் ஒரு பெரிய அறையை அவனுக்கு ஆயத்தம்பண்ணியிருந்தான். இதெல்லாம் நடக்கும்போது நான் எருசலேமில் இல்லை. பாபிலோன் ராஜாவாகிய அர்தசஷ்டாவின் முப்பத்திரண்டாம் வருஷத்திலே நான் ராஜாவினிடத்திற்குப்போய், சில நாளுக்குப் பின்பு திரும்ப ராஜாவினிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு, எருசலேமுக்கு வந்தேன். அப்பொழுது எலியாசிப் தொபியாவுக்குத் தேவனுடைய ஆலயத்துப் பிரகாரங்களில் ஒரு அறையை ஆயத்தம்பண்ணினதினால், செய்த பொல்லாப்பை அறிந்துகொண்டேன்.

யாவும் மிக நன்றாக நடந்தேறின. அலங்கங்கள் எழும்பி நின்றன. மோசேயின் நியாயப்பிரமாணங்கள் மக்களால் பின்பற்றப்பட்டன. சத்துருக்கள் தோற்கடிக்கப்பட்டனர் என்றெல்லாம் நினைக்கத்தான் தோன்றுகிறது. ஆனால் அது அப்படியிருக்கவில்லை. திடீரென ஓர் அதிர்ச்சி. எலியாசிப் என்ற ஆசாரியன் ஒருவன் தேவனுடைய ஆலயத்தின்

அறைகளுக்கு விசாரிப்புக்காரனாக வைக்கப்பட்டிருந்தான். லேவியர்களும் ஆசாரியர்களும் ஆனவர்கள் மட்டுமே தேவனுடைய ஆலயத்தில் பிரவேசிக்க இடமுண்டு. இவர்கள்தாம் தேவனுடைய பணிகளைச் செய்வதற்காகக் குறிக்கப்பட்டவர்கள். ஆனால் இந்த எலியாசிப் விரோதியான தொபியாவுடன் கைகோர்த்துக்கொண்டான். தொபியாவிற்கு தங்கும் இடமாக தேவனுடைய ஆலயத்தின் ஓர் அறையை வசதிசெய்து கொடுத்துத் தங்கவைத்தான். அந்த அறை மிகப் பெரியதாகவும், காணிக்கைப் பொருள்களான தானியம், திராட்சைரசம், எண்ணெய் ஆகியவைகளின் தசமபாகமும் இதர காணிக்கைகளும் வைக்கப்பட வேண்டிய இடமாகவும் இரந்தது. அங்கேதான் தொபியாவிற்கு இருப்பிடம் ஒதுக்கப்பட்டது. தேவனுடைய ஆலயத்தின் தொழுகைப்பகுதியின் மையத்தில் தொபியாவிற்கு தங்கும் அறை. இது எவ்வாறு நடக்கமுடிந்தது? நெகேமியா இதனை ஏன் தடுக்கவில்லை? ஆம், நெகேமியா அப்போது எருசலேமில் இருக்கவில்லை. அவன் அர்த்தசஷ்டா இராஜாவின் அரண்மனைப் பணியிடத்திற்கு தான் முன்பு பணியாற்றிய இடத்திற்குச் சென்றுவிட்டிருந்தான். அப்படி செல்லும்போது எருசலேமில் அனைத்து காரியங்களையும் ஒழுங்கான முறையிலேயே விட்டுச் சென்றான். அங்கு சில நாட்கள் கழிந்தபின்பு மறுபடியும் எருசலேம் சென்று அங்குள்ள நடைமுறைகளைக் கவனிக்க இராஜாவினிடத்தில் அனுமதி பெறச்சென்றான். அனுமதியுடன் எருசலேமுக்குச் சென்றபோதுதான், மிகவும் அதிர்ச்சியடையத்தக்கதாய் எலியாசிப் என்ற அந்த ஆசாரியன் தேவனுடைய ஆலயத்தின் பகுதியிலே தொபியாவிற்கு ஒரு தங்கும் அறை ஒதுக்கியிருந்ததைக் கண்டான். எலியாசிப் செய்த அந்தக் காரியத்தினால் அவன் மிகவும் மனமடிவானான் என்று வேதத்தில் நெகேமியாவைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இது தொபியாவிற்கு ஒரு வெற்றியன்றோ! அவன் தினமும் தேவனுடைய ஆலயத்தில் நடந்தவைகளைப் பார்த்துக்கொண்டேயிருந்திருப்பான் அன்றோ? நாட்டின் நடப்புகள் அனைத்தும் அவனுக்குக் கூறப்பட்டிருக்குமன்றோ? நாமும்கூட சில வேளைகளில் சாத்தானுக்கு இடம் கொடுத்து நமது வேலைகளிலும் தொழுகைகளிலும்கூட அவனுக்குப் பங்களித்து விடுகிறோம். ஒருவேளை எலியாசிப் சாதாரணமாக ஒரே ஓர் அறைமட்டும்தானே என்று கூறமுடியும். ஆனால் அவ்வாறு அந்த ஓர் அறையை மட்டும்கூட ஒதுக்கிக்கொடுத்ததினால் பல பொருள்களை இடம்பெயர்த்த வேண்டியிருந்திருக்குமன்றோ? ஆகையால் நமது வாழ்க்கையில்கூட உலக காரியங்களுக்காக ஒரு சிறு இடத்தைமட்டும் ஒதுக்குவதும், மிகத்தவறாக தேவனுக்குரிய காரியங்களை நீக்கி வைக்க ஏதுவாகும் என்பதை நாம் உணரவேண்டும்.

வசனம் 13:8

அதினால் நான் மிகவும் மனமடிவாகி, தொபியாவின் வீட்டுத் தட்டுமுட்டுகளையெல்லாம் அந்த அறையிலிருந்து வெளியே எறிந்துவிட்டேன்.

ஆனால் இந்த இழிச்செயலில் நெகேமியாவிற்கு யாதொரு பங்குமில்லை. அவன் என்ன செய்தான்? தொபியாவோடு கலந்து பேசினானா? இல்லை. அந்த இடத்தைக் காலிசெய்துவிட்டுவிடும்படி அவனுடன் பேரம் பேசினானா? இல்லை. தேவனுடைய ஆலயத்திற்கு வெளியே எடுத்து வீசினான். அவனுடைய தட்டுமுட்டுகளையெல்லாம் அந்த அறையிலிருந்து வெளியே எறிந்துவிட்டான் என்று வேதம் கூறுகிறது. இப்போது தொபியா அதிர்ச்சியடைந்தான். அவனுடைய தட்டுமுட்டுகள் அனைத்தும் வீதியிலே வீசியெறிப்பட்டதைப் பார்த்தான். இந்த நிகழ்ச்சி, நமது ஆண்டவரைப்பற்றி ஒரு நிழக்ச்சியை நமக்கு நினைவூட்டுகிறது. ஒருமுறை நமது ஆண்டவராகிய இயேசு தேவாலயத்திற்குள் சென்றபோது, காசுக்கடைக்காரர்கள், ஆலயத்தின் உள்ளே மேசையின் அருகே உட்கார்ந்து காசுமாற்றிக்கொண்டிருந்ததைப் பார்த்தார். இப்போது நெகேமியா காலம் தாழ்த்தாது செயல்ப்பட்டதுபோலவே, ஆண்டவரும் காலம் தாழ்த்தாமல், உடனே காசுக்காரார்களின் மேசைகளையும் விற்பனைக்காரார்களின்

ஆசனங்களையும் கவிழ்த்துப்போட்டார் என்று வேதத்தில் வாசிக்கிறோம் (மாற்.11:15-16).

வசனம் 13:9

பின்பு நான் அறைவீடுகளைச் சுத்திகரிக்கச்சொல்லி, தேவனுடைய ஆலயப்பணிமுட்டுகளையும் காணிக்கைகளையும் சாம்பிராணியையும் அங்கே திரும்பக்கொண்டுவந்து வைத்தேன்.

தொபியாவின் தட்டுமுட்டுகளை வீசியெறிந்ததுடன் நெகேமியா விட்டுவிடவில்லை. அந்த அறை வீடுகளை சுத்திகரிக்கச் சொல்லி உத்தரவிட்டான். தொபியாவைப் பற்றி யாதொரு அடையாளத்தைக்கூட அவன் அங்கு விட்டுவைக்கவில்லை. ஆலயத்தைக் கழுவிச் சுத்திகரித்தான். அதன் பின்பு, நன்றாகச் சுத்தம் செய்யப்பட்டபின்பு, தேவனுடைய ஆலயப் பணிமுட்டுகளையும், காணிக்கைகளையும், சாம்பிராணியையும் அங்கே திரும்பக் கொண்டுவந்து வைத்தான். இதைத்தான் நாமும் செய்யவேண்டும். நமது வாழ்க்கையில் உள்ளே நுழைந்துவிட்ட உலகப்பிரகாரமான காரியங்களை நம்மைவிட்டு அகற்றிவிடவேண்டும். அடுத்து தேவனுடைய வசனங்களைப் படிப்பதன்மூலம் நமது அந்தரங்க உள்ளத்தைச் சுத்திகரித்துக்கொள்ளவேண்டும் (எபேசி.5:26).

வசனம் 13:10

பின்னையும் லேவியருக்கு அவர்கள் பங்குகள் கொடுக்கப்படவில்லையென்பதையும், பணிவிடை செய்கிற லேவியரும் பாடகரும் அவரவர் தங்கள் வெளிநிலங்களுக்கு ஓடிப்போனார்கள் என்பதையும் நான் அறிந்துகொண்டேன்.

மறுபடியும் நெகேமியா ஆலயத்திலே லேவியர்கள், பாடகர்கள் ஆன யாரும் இல்லாததைக் கண்டான். அவர்கள் எங்கே போனார்கள்? அவர்கள் ஆலயத் திருப்பணியைவிட்டு தங்களின் வயல்களிலே வேலைசெய்யச் சென்று விட்டனர். ஏன்? அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய காணிக்கை வரவுகள் கிடைக்கவில்லை. 12ம் அதிகாரத்தில் நாம் வாசித்த மகிழ்ச்சியும், காணிக்கை செலுத்துதலும் என்ன ஆயிற்று? அது மெள்ள மெள்ளக் குறைந்து கடைசியில் ஒன்றும் இல்லை என்ற அளவிற்கு வந்துவிட்டது. வருமானமில்லாததால் அந்த ஆசாரியர்களும் லேவியர்களும் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றுவிட்டனர். ஆலயமும் ஆலயப்பணியாளர்களால் களவாடப்பட்டுவிட்டது.

வசனம் 13:11

அப்பொழுது நான் தலைமையானவர்களோடே வழக்காடி, தேவனுடைய ஆலயம் கைவிடப்பட்டுப்போவானேன் என்று சொல்லி, அவர்களைச் சேர்த்து, அவரவர் நிலையில் அவர்களை வைத்தேன்.

நெகேமியா உடனே செயல்ப்பட்டான். தலைவர்களிடம் சென்று தேவனுடைய ஆலயம் புறக்கணிக்கப்பட்டது ஏன்ரீ என கேள்வி எழும்பினான். காணிக்கை கொடுக்காமல் போனது 8னங்களே, ஆயினும் நெகேமியா தலைவர்களையும் விட்டுவைக்கவில்லை. ஜனங்கள், தேவனுக்கு முன்பாகப் பிரமாணங்கள் வாசிக்கப்பட்டபோது, ஆணையிட்டுக்கொடுத்த பிரமாணங்களை அவர்கள் மறந்துவிட்டனர்போலும். தேவனுடைய ஆலயத்தைப் பராமரியாமல் விடுவதில்லை என்ற வாக்குத்தத்தத்தை, அவர்களுக்கு நினைவூட்டி தூண்டியெழுப்ப வேண்டியவர்கள் அந்தத் தலைவர்களன்றோ? அவர்கள் செய்யத் தவறிவிட்டனர். அல்லது லேவியர்களை உற்சாகப்படுத்தவும் தவறிவிட்டனர். அதன் விளைவாகத்தான் தேவனுடைய ஆலயப்பணி தடைப்பட்டது. அந்தத் தலைவர்கள் வந்து அதைச் செய்யும்வரை நெகேமியா காத்திருக்கவில்லை. அப்பணியை லேவியரையும் பாடகரையும் கொண்டு

வந்து சேர்க்கும் பணியையும் நெகேமியாவே செய்தான். லேவியரையும் பாடகரையும் அழைத்துவந்து அவரவர் இடத்தில் ஒழுங்குற இருக்கச் செய்தான்.

வசனம் 13:12-13

அப்பொழுது யூதர் எல்லாரும் தானியம் திராட்சரசம் எண்ணெய் என்பவைகளில் தசமபாகத்தைப் பொக்கிஷ அறைகளில் கொண்டுவந்தார்கள். அப்பொழுது நான் ஆசாரியனாகிய செலேமியாவையும், வேதபாரகனாகிய சாதோக்கையும், லேவியரில் பெதாயாவையும், இவர்களுக்குக் கைத்துணையாகத் தனியாவின் குமாரன் சக்கூரின் மகனாகிய ஆனானையும் பொக்கிஷ அறைகளின்மேல் விசாரிப்புக்காரராக வைத்தேன். அவர்கள் உண்மையுள்ளவர்கள் என்று எண்ணப்பட்டார்கள். ஆகையால் தங்கள் சகோதரருக்குப் பங்கிடுகிற வேலை அவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்டது.

யூதர்கள் நடந்தவைகளைப் பார்த்தபோது தங்களின் கடமைகளை உணர ஆரம்பித்தனர். தேவ ஆலயத்தின் பொக்கிஷ அறைகளிலே தானியம் திராட்சைரசம், எண்ணெய் ஆகியவைகளின் தசமபாகம், காணிக்கைகளாகக் கொண்டுவந்து ஒப்படைக்கப்பட்டது. இந்தக் காணிக்கை செலுத்தும் வேலை தொடர்ந்து ஒழுங்காக நடைபெறத்தக்கதான நடவடிக்கைகளையெடுக்க நெகேமியா திட்டம் வகுத்தான். அந்தப் பொக்கிஷ அறைகளின்மேல் விசாரிப்புக்காரராக இருக்க நான்கு பேரை நெகேமியா நியமித்தான். அவர்களின் முக்கிய வேலைகளில் ஒன்று இந்தக் காணிக்கைகளின் அவரவர் பங்கினை அவரவர்களுக்கு ஒழுங்காகச் சேர்ப்பித்தலாகும். அவர்கள் உண்மையுள்ளவர்கள் என்று எண்ணப்பட்டார்கள். எவ்வளவு உன்னதமான ஒரு நம்பிக்கை. உண்மையுள்ளவர்கள் எனப்படுவது ஒரு நாளுக்கோ அல்லது ஓராண்டு காலத்திற்கோ மட்டும் உரிய தகுதி அல்ல. அது எப்போதும், எக்காலத்திற்கும் ஏற்ற ஓர் உண்மையான தகுதியாகும்.

வசனம் 13:14

என் தேவனே, நான் என் தேவனுடைய ஆலயத்துக்காகவும் அதின் முறைமைகளுக்காகவும் செய்த நற்கிரியைகளைக் குலைத்துப்போடாமல், இந்தக் காரியத்திலே என்னை நினைத்தருளும்.

மறுபடியும் நெகேமியா ஜெபிக்கிறான். 5ம் அதிகாரம் 19ம் வசனத்தில் உள்ளது போன்றதொரு ஜெபம். அதுபோல இந்த 13ம் அதிகாரத்தில் மூன்று முறை அவன் ஜெபம் செய்துள்ளதை நாம் காண்கிறோம். தேவனே என்னை நினைத்தருளும் - அவனுடைய நன்றியுள்ள அன்பிற்காக நெகேமியா நல்ல பரிசொன்றைக் கேட்டகவில்லை. அவனுடைய வேண்டுதல் எல்லாம் தேவனுடைய ஆலயப் பணிக்காக, அவன் செய்தவைகளுக்காக, தேவனை நோக்கி தேவனே என்னை நினைத்தருளும் என்று வேண்டுகிறான். அதுபோல நாம் எளிமையான வேண்டுதலைச் செய்வோமா?

வசனம் 13:15

அந்த நாட்களில் நான் யூதாவிலே ஓய்வுநாளில் சிலர் ஆலைகளை மிதிக்கிறதையும், சிலர் தானியப் பொதிகளைக் கழுதைகள்மேல் ஏற்றிக்கொண்டு வருகிறதையும், திராட்சரசம், திராட்சப்பழம், அத்திப்பழம் முதலானவைகளின் பற்பல சுமைகளை ஓய்வுநாளிலே எருசலேமுக்குக் கொண்டுவருகிறதையும் கண்டு, அவர்கள் தின்பண்டம் விற்கிற நாளைப்பற்றி அவர்களைத் திடசாட்சியாய்க் கடிந்துகொண்டேன்.

மறுபடியும் நெகேமியா ஒரு ஒழுங்கீனத்தைக் காண்கிறான். யூதாவில் சில ஜனங்கள் ஓய்வுநாளிலே, பிரமாணத்தின் கட்டளையை மீறி வேலைசெய்கிறதை அவன் பார்க்கிறான். சிலர் ஆலைகளை மிதிக்கிறதையும், சிலர் தானியப் பொதிகளைக் கழுதைகளின்மேல் ஏற்றிக்கொண்டு வருகிறதையும் திராட்சைரசம், திராட்சைப்பழம், அத்திப்பழம் முதலானவைகளின் பற்பல சுமைகளை ஓய்வுநாளிலே எருசலேமுக்குக் கொண்டு வருகிறதையும் கண்டான். நெகேமியா நேரே அவர்களிடத்தில் சென்று

அவர்களைத் திடசாட்சியாய்க் கடிந்துகொண்டான். இம்மாதிரியான ஒழுங்கீனங்களும் நெகேமியா எருசலேமைவிட்டுச் சென்றிருந்தபோதுதான் ஏற்பட்டிருந்தது. யோவாஸ் இராஜாவின் நாட்களிலும் இதுபோலவே இஸ்ரவேலின் மக்களிடையே நடந்தது. அக்காலத்தில் யோய்தா ஆசாரியனாய்க் கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான். யோவாஸ் சிறுவனாக இருந்தபோது அவனுக்கு ஏற்படவிருந்த ஆபத்திலிருந்து அவனைக் காப்பாற்றி அவனை இராஜாவாக்கி அபிஷேகம் பண்ணினான் ஆசாரியனான அந்த யோய்தா. இராஜாவாக இருந்தபோது, யோவாஸ் சில நல்ல காரியங்களைச் செய்தான். தேவனுடைய ஆலயத்தைச் சீர்படுத்தி பலப்படுத்தினான். ஆலயத்தின் பணிமுட்டுகளையும் மறுபடியும் செய்வித்து ஆலயத்தில் சேர்ப்பித்தான். அப்பொழுது ஜனங்கள் தேவனைத் தொழுது துதித்து, சர்வாங்க தகனபலிகளை இடைவிடாது செலுத்திவந்தனர். யோய்தாவின் நாளெல்லாம் நித்தம் இவை செய்யப்பட்டனவென்று வேதம் கூறுகிறது (2.நாளா.24:14). ஆனால் யோவாஸ் இராஜாவாக இருந்த நாளெல்லாம் இது நடைபெறவில்லை. ஏனென்றால் யோய்தா இறந்து, அடக்கம் செய்யப்பட்டுப் போனபின் யோவாஸ் தேவனுடைய ஆலயத்தைவிட்டுப் புறப்பட்டுத் தோப்பு விக்கிரகங்களையும், சிலைகளையும் சேவிக்கச் சென்றுவிட்டான். தேவன் கடுங்கோபங்கொண்டு, யோய்தாவின் குமாரனான சகரியாவின்மேல் தேவனுடைய ஆவி இறங்கி, அவர்களைக் கடுமையாய் எச்சரித்து அந்தக் குற்றத்தை வெளிப்படுத்திக் காட்டினார். ஆனால் யோவாஸ் சகரியாவின் வார்த்தையை அசட்டைபண்ணி, சகரியாவைக் கல்லெறிந்து கொல்ல உத்தரவிட்டான். தனது உயிரை பகைஞரிடமிருந்து காப்பாற்றி, இராஜாவாக அபிஷேகம் பண்ணினவன் யோய்தா. அதை மறந்து அவனுடைய மகனை இப்போது கல்லெறிந்துகொல்ல உத்தரவிட்டான். சகரியா கல்லெறிந்து கொல்லப்பட்டான். கர்த்தரை விசுவாசமாய்ப் பின்பற்றும் ஒருவன் கொடூரமான மற்றொருவனால் கொல்லப்படுதல் எவ்வளவு துயரமான செய்தியன்றோ! நாம் தேவனைப் பின்பற்றுவது உறுதியானதுதானா அல்லது நமது நண்பர்கள், குடும்பத்தினருக்காகச் செய்யும் செயலா?

வசனம் 13:16-18

மீனையும் சகலவித சரக்குகளையும் கொண்டுவந்து, ஓய்வுநாளிலே யூதா புத்திரருக்கும் எருசலேமில் இருக்கிறவர்களுக்கும் விற்கிற சில தீரியரும் உள்ளே குடியிருந்தார்கள். ஆகையால் நான் யூதாவின் பெரியவர்களைக் கடிந்துகொண்டு: நீங்கள் ஓய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிற இந்தப் பொல்லாத செய்கையென்ன? உங்கள் பிதாக்கள் இப்படிச் செய்ததினாலல்லவா, நமது தேவன் நம்மேலும் இந்த நகரத்தின்மேலும் இந்தத் தீங்கையெல்லாம் வரப்பண்ணினார். நீங்களோவென்றால் ஓய்வநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறதினால், இஸ்ரவேலின்மேலிருக்கிற உக்கிரத்தை அதிகரிக்கப்பண்ணுகிறீர்கள் என்று அவர்களுக்குச் சொன்னேன்.

ஓய்வுநாளிலே, மீனையும் சகலவித சரக்குகளையும் கொண்டுவந்து யூதா புத்திரருக்கும் எருசலேமில் இருக்கிறவர்களுக்கும் விற்கிற சில தீயரும் அங்கே இருந்தனர். அதற்காக நெகேமியா நகரத்தில் இருந்த தலைவர்களிடம் சென்று நீங்கள் ஓய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிற இந்தப் பொல்லாத செய்கை என்ன? உங்கள் பிதாக்கள் இப்படிச் செய்ததினாலல்லவா தேவன் உங்கள் மேலும் இந்த நகரத்தின்மேலும் இந்தத் தீங்கையெல்லாம் வரப்பணினார். நீங்கள் அதையே மறுபடியும் செய்கிறீர்களே என்று கடுமையாகக் கண்டித்துக் கூறினான்.

வசனம் 13:19

ஆகையால் ஓய்வுநாளுக்கு முன்னே எருசலேமின் பட்டணவாசலில், மாலைமயங்கும்போது, கதவுகளைப் பூட்டவும், ஓய்வுநாள் முடியுமட்டும் அவைகளைத் திறவாதிருக்கவும் வேண்டுமென்று கட்டளையிட்டு, ஓய்வநாளிலே ஒரு சுமையும் உள்ளே வராதபடிக்கு வாசலண்டையிலே என் வேலைக்காரரில் சிலரை நிறுத்தினேன்.

அந்தத் தலைவர்கள் ஏதாகிலும் பரிகாரம் செய்வர் என்று நெகேமியா காத்திருக்கவில்லை. அவனே செயல்படத் துவக்கினான். ஓய்வுநாளுக்கு முன்னே, மாலை மயங்கும்போது, எருசலேமின் பட்டண வாசலின் கதவுகளைப் பூட்ட அவன் கட்டளையிட்டான். ஓய்வுநாள் முடியுமட்டும் அவைகளைத் திறக்கக்கூடாதென்று அக்கட்டளையிலே கூறினான். அடுத்து அவனுடைய சொந்த வேலைக்காரரை, காவலர்களாகவும் வாசலண்டையிலே நிறுத்தி ஓய்வுநாளிலே ஒரு சுமையும் உள்ளே வராதபடிக்குப் பார்த்துக்கொள்ளச் செய்தான். யாதொன்றும் நிச்சயமாக இருக்கவேண்டும் என்று திட்டம் பண்ணிக்கொண்டான்.

வசனம் 13:20-21

அதினால் வர்த்தகரும், சகலவித சரக்ககளை விற்கிறவர்களும், இரண்டொருதரம் எருசலேமுக்குப் புறம்பே இராத்தங்கினார்கள். அப்பொழுது நான் அவர்களைத் திடசாட்சியாய்க் கடிந்துகொண்டு, நீங்கள் அலங்கத்தண்டையிலே இராத்தங்குகிறது என்ன? நீங்கள் மறுபடியும் இப்படிச் செய்தால், உங்கள்மேல் கைபோடுவேன் என்று அவர்களோடே சொன்னேன். அதுமுதல் அவர்கள் ஓய்வுநாளிலே வராதிருந்தார்கள்.

ஆனால் சில வர்த்தகர்கள் தங்கள் தவறுகளை விட்டுவிடவில்லை. வெள்ளிக்கிழமை இரவுகளில் எருசலேமின் அலங்கங்களுக்கு வெளியிலே வந்து தங்கியிருக்க முயன்றனர். அவர்கள் அடுத்தநாள் காலையில் கதவுகள் திறக்கப்படும்போது உள் சென்றுவிட எண்ணினர். அவர்களுக்கு நெகேமியாவைப்பற்றித் தெரியாதுபோலும். அவன் நேரே அந்த வர்த்தகர்களிடம் சென்று, நீங்கள் அலங்கத்தண்டையிலே காலைவரை இராத்தங்குகிறதென்ன? நீங்கள் மறுபடியும் இப்படிச்செய்தால் உங்கள்மேல் கைபோடுவேன் என்று திடசாட்சியாய் அவர்களைக் கடிந்துகொண்டான். அதுமுதல் அவர்கள் ஓய்வுநாளில் வராதிருந்தார்கள்.

வசனம் 13:22

ஓய்வுநாளைப் பரிசுத்தமாக்கும்படிக்கு, உங்களைச் சுத்தம்பண்ணிக்கொண்டு வாசல்களைக் காக்கவாருங்கள் என்று லேவியருக்கும் சொன்னேன். என் தேவனே, இதைக்குறித்து நீர் என்னை நினைத்தருளி, உம்முடைய மிகுந்த கிருபையின்படி எனக்கு இரங்குவீராக.

அடுத்து நெகேமியா வாசலைக் காக்கும்படி லேவியரை நியமித்தான். அவர்கள் நியமனப்பணி ஒய்வு நாளை ஆசரிக்க துணைசெய்வதேயாகும். முதலில் அவர்கள் தங்களைச் சுத்தம்பண்ணிக்கொண்டு, பின் வாசலைக் காக்கும் பணிக்கு வரும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டான். நாம் தேவனுக்கடுத்த எந்தத் திருப்பணியைச் செய்யும் முன்பும் நம்மை நாமே நன்கு சுத்தம் பண்ணிக்கொண்டு பின் பிற பணிகளைச் செய்வது சாலச்சிறந்தன்றோ? அப்பம் பிட்குதலைப்பற்றி, பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு, பவுல்: அப்போஸ்தலனும் நம்மை நாமே சோதித்தறிந்து இந்த அப்பத்தில் புசித்து இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன் என்று கூறியுள்ளார் அல்லவா? (1.கொரி.11:28)

மறுபடியும் நெகேமியா, தனது ஜெபத்தில் என்னை நினைத்தருளும் என்று வேண்டுகிறான். உமது மிகுந்த கிருபையின்படி எனக்கு இரங்குவீராக என்று அவன் கூறி தேவனுடைய கிருபையில் சார்ந்து நிற்கிறான். நெகேமியா தேவனை நன்கு அறிந்தவன்.

வசனம் 13:23-25

அஸ்தோத், அம்மோன், மோவாப் ஜாதிகளான ஸ்திரீகளைச் சேர்த்துக்கொண்ட சில யூதரையும் அந்த நாட்களில் கண்டேன். அவர்கள் பிள்ளைகள் பேசின பேச்சில் பாதி அஸ்தோத் பாஷையாயிருந்தது. இவர்கள் அந்தந்த ஜாதிகளின் பாஷையைத்தவிர, யூதபாஷையைத் திட்டமாய்ப் பேச அறியாதிருந்தார்கள். அவர்களையும் நான்

கடிந்துகொண்டு, அவர்கள்மேல் வரும் சாபத்தைக்கூறி, அவர்களில் சிலரை அடித்து, மயிரைப் பிய்த்து: நீங்கள் உங்கள் குமாரத்திகளை அவர்கள் குமாரருக்குக் கொடாமலும், அவர்கள் குமாரத்திகளில் ஒருவரையும் உங்களுக்காகிலும் கொள்ளாமலும் இருக்கவேண்டுமென்று அவர்களைத் தேவன்மேல் ஆணையிடப்பண்ணி, நான் அவர்களை நோக்கி:

நெகேமியா மற்றொன்றையும் விட்டு வைக்கவில்லை. சில யூதர்கள் அஸ்தோத், அம்மோன், மோவாப் ஜாதிகளான ஸ்திரீகளைச் சேர்த்துக்கொண்டு இருந்ததை அவன் கண்டான். அவர்களின் பிள்ளைகள் யூதருடைய மொழியை அறிந்து பேசமுடியவில்லை. அவர்கள் தங்கள் தாய்மொழிகளை வேறுமொழிகளிலேயே பேசினர். நெகேமியா கடுங்கோபங்கொண்டு, அவர்களைக் கடிந்துகொண்டு, அவர்கள்மேல் வரும் சாபத்தைக்கூறி, அவர்களில் சிலரை அடித்து, மயிரைப்பிய்த்து, அவர்களும் அல்லது அவர்கள் பிள்ளைகளும் ஒருபோதும் அதுபோல் இனிச் செய்யமாட்டோம் என்று அவர்களைத் தேவன்மேல் ஆணையிடப்பண்ணினான்.

வசனம் 13:26-27

இஸ்ரவேலின் ராஜாவாகிய சாலொமோன் இதினாலே பாவஞ்செய்தானல்லவா? அவனைப்போன்ற ராஜா அநேகம் ஜாதிகளுக்குள்ளே உண்டாயிருந்ததில்லை. அவன் தன் தேவனாலே சிநேகிக்கப்பட்டவனாயிருந்தான். தேவன் அவனை இஸ்ரவேலனைத்தின்மேலும் ராஜாவாக வைத்தார். அப்படிப்பட்டவனையும் மறுஜாதியான ஸ்திரீகள் பாவஞ்செய்யப்பண்ணினார்கள். நீங்கள் மறுஜாதியான ஸ்திரீகளைச் சேர்த்துக்கொள்ளுகிறதினால், நம்முடைய தேவனுக்குத் துரோகிகளாகி, இந்தப் பெரிய பொல்லாப்பையெல்லாம் செய்யும்படி, உங்களுக்கு இடங்கொடுப்போமோ என்றேன்.

இதேபோன்ற குற்றத்தைச் செய்தவர்களிடம் எஸ்றா நடந்து கொண்ட விதம் வேறு. நெகேமியா நடந்து கொண்ட விதம் வேறு. எஸ்றா இது போன்றதொரு செயலைப் பார்த்து அழுதான். அழுது அந்நிய ஜாதியரான மனைவியரை அவர்கள் மணந்துகொண்ட யூதர்கள் ஒதுக்கிவிடவேண்டும் என்று பணித்தான். நெகேமியாவோ கடுங்கோபத்துடன் பாய்ந்து, உரக்கப்பேசி, அவர்களை அடித்து இனி அவ்வாறு செய்வதில்லையென்று ஆணையிடுவித்தான். இது ஏன் ஒரு பெரிய பாவச் செயல் என்றும் நெகேமியா இந்த வசனங்களில் விளக்குகிறான். தேவனாலே சிநேகிக்கப்பட்டவனான சாலோமோன் இராஜா இத்தகைய பெரிய பாவத்தைத்தான் செய்தான். தேவன் எல்லாவற்றையும் அவனுக்குக் கொடுத்திருந்தார். ஞானம், செல்வம், சமாதானம், யாவற்றிலும் அவன் மிகுந்திருந்தான். என்றபோதிலும் அவனை அந்நிய ஜாதியான ஸ்திரீகள் பாவம் செய்யப்பணினார்கள். அவன் கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்யாமல் பொல்லாப்பானதைச் செய்தான் (1.இராஜா.11:1-4). தேவன் சாலோமோனை நோக்கி, உன் குமாரனுடைய கையிலிருந்து உனது இராஜ்ய பாரத்தைப் பிடுங்கிக்கொள்வேன் என்று அதனால்த்தான் சொன்னார். இப்போது நெகேமியா யூதர்களைப் பார்த்து சாலோமோன் செய்ததைப்போல நீங்களும் அந்நிய ஜாதியாரான ஸ்திரீகளை விவாகம்பண்ணப்போகிறீர்களா? என்று கேட்டான். சாலோமோனின் வரலாறு அவர்களுக்கு நன்கு தெரிந்திருந்த உதாரணமாகும். நெகேமியா அவர்களை எச்சரித்து அவர்கள் சாலோமோனைப்போலத்தான் இருந்தனர் என்று கூறிய தேவன் எப்போதும் மாறாதவர் என்றும் அவர்கள் செய்த பாவம் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமான பாவம் என்றும் விளக்கிக் கூறினான்.

வசனம் 13:28

யொயதாவின் புத்திரரிலே பிரதான ஆசாரியனாகிய எலியாசிபினுடைய குமாரன் ஒருவன் ஓரோனியனான சன்பல்லாத்துக்கு மருமகனானான். ஆகையால் அவனை என்னைவிட்டுத் துரத்தினேன்.

இப்போதாவது நெகேமியாவின் பணிமுடிந்துவிட்டதா? அவன் ஓய்வெடுத்துக்கொள்ளக்கூடுமோ? முடியவில்லையே! இப்போது ஒரு பெரிய தவறைக் கண்டான். பிரதான ஆசாரியனான எலிபாசின் பேரனான ஒருவன் சன்பல்லாத்தின் மகளை மணந்துகொண்டு அவனுக்கு மருமகனானான். சன்பல்லாத்தைப்பற்றி 6ம் அதிகாரத்திற்குப் பின் நாம் வாசிக்கவில்லை. அவன் கொடுத்த தொல்லைகளை நிறுத்திவிட்டான் என நாம் நினைத்தால் அது அப்படியல்ல. அவன் கொடுத்த தொல்லைகள் போதாதென்று வேறு வழியிலே இப்போது தொல்லைகொடுக்கத் துவங்கியுள்ளான். சாத்தான் எப்போதும் ஓய்ந்துபோவதில்லை. அவன் ஒரு வழியில் ஜெயிக்க முடியாவிட்டால் வேறுவழியில் தன் கையை ஓங்குவான். இங்கு சன்பல்லாத்தும் தொபியாவைப்போலவே ஆசாரியப்பணியின்மூலம் தனது தீயகரங்களை நீட்ட முற்படுகிறான். அவனுடைய மகள் எலியாசீபின் பேரனை மணந்துகொண்டாள். இது சத்துருக்களுக்குக் கிடைத்த மற்றொரு வெற்றியே. முதலில் தொபியா எலியாசீபின் மூலம் தேவாலயத்தில் ஓர் அறையைப் பெற்றான். இப்போது சன்பல்லாத்து, திருமணஉறவினால் அவனோடு சம்பந்தம் ஏற்படுத்திக்கொண்டான். சன்பல்லாத்தும், தொபியா ஆகிய இருவருமே தேவாலயத்தின் உள்விவகாரத்தில் மிக்க ஆதீனம் செலுத்தும் தகைமையைப் பெற்றுவிட்டனர். சன்பல்லாத்திற்குப் பெருமகிழ்ச்சியன்றோ? இல்லை. இல்லை நெடுநாளைக்கு அல்ல. நெகேமியா விடவில்லை. எலியாசிபின் பேரன் செய்த குற்றத்திற்காக நெகேமியா அவனை எருசலேமைவிட்டே துரத்தினான்.

நெகேமியாவின் வேகம், விவேகம், இவைகளைப் பார்க்கும்போது, அவன் வயது சென்றவனாக இருந்தும் தேவனுடைய காரியங்களைச் செய்ய அவனுக்குள்ள திறனைப் பாராட்டவேண்டியுள்ளது. எந்த ஒரு சந்தர்ப்பத்திலும், மனம் தோய்ந்து, தன் கரங்களை அவன் சாய்க்கவில்லை. அல்லது நான் என்ன செய்யுமுடியும் ? என்று எப்போதும் கூறியதுமில்லை. அந்தக் காரியத்தையும் மற்றோர்வசம் விட்டதுமில்லை. எப்போதும் சுறுசுறுப்பாகவே துணிந்து செயலாற்றி வந்துள்ளான். அவன் திரும்பி எருசலேமுக்கு வந்தபின், அந்தக் குறுகிய காலத்தில் எத்தனை முக்கிய அலுவல்களை அவன் செய்துள்ளான்.

தொபியாவின் தட்டுமுட்டுகளை அந்த அறையைவிட்டு வீசியெறிந்து, அந்த அறையைச் சுத்தம் செய்வித்தான்.

லேவியர்களை அவர்களின் பணிகளில் மறுபடியும் கொண்டுவந்து அமர்த்தி தசமபாக காணிக்கைகள் ஒழுங்காகச் செலுத்தப்படும்படி செய்தான்.

பொக்கிஷ பாதுகாவலர்களை முறைப்படி நியமித்தான்.

ஓய்வுநாளில் நடைபெறும் வர்த்தகத்தை முழுவதுமாக நிறுத்தச்செய்தான்.

வாயிற்கதவுகளை அடைக்கச் செய்தான்.

வாசலில் காத்திருக்க முயன்ற வர்த்தகர்களை எச்சரித்து விரட்டியடித்தான்.

வசனம் 13:29-30

என் தேவனே, அவர்கள் ஆசாரிய ஊழியத்தையும், ஆசாரிய ஊழியத்துக்கும் லேவியருக்கும் இருக்கிற உடன்படிக்கையையும் தீட்டுப்படுத்தினார்கள் என்று அவர்களை நினைத்துக்கொள்ளும். இப்படியே நான் மறுஜாதியாரையெல்லாம் நீக்கி, ஆசாரியரையும் லேவியரையும் சுத்திகரித்து, அவரவரை அவர்கள் வேலையின் முறைகளில் நிறுத்தி,

மேற்கூறிய அனைத்துக் காரியங்களையும் பார்க்குமிடத்து அவைகளில் ஏதேனும் ஒன்றுமட்டமேயானாலும் ஒரு பெரிய சாதனையாகவே கருதமுடியும். ஆனால் நெகேமியாவோ சுற்றிச்சுழன்று, அவன்தானே இவை அனைத்துக் காரியங்களையும் வெற்றியுடன் செய்துமுடித்தான். தனக்குக் களைப்பாக உள்ளதென்றோ, அல்லது

கடினமென்றோ எதையும் குறித்து முறுமுறுக்கவில்லை. அவனுடைய அக்கறையெல்லாம், தான் ஓர் ஆசாரியானாக பணியாற்றவேண்டுமே என்பதும் தேவனாகிய கர்த்தரோடு செய்துகொண்ட உடன்படிக்கையை நிறைவேற்றவேண்டுமே என்பதுமேயாகும். அவனுடைய எண்ணம் எல்லாம் தேவனுடைய ஆலயத்தைப்பற்றியதாகவேயிருந்தது. அதனைச் சிதைக்க வேறெந்த எண்ணமும் அவனில் இல்லை. ஆகையால் ஜனங்களையும் லேவியரையும் ஆசாரியரையும் அவன் தூய்மைப்படுத்த அவரவர் கடமைகளை அவரவர் நன்கு உணரும்படி செய்துவிட்டான்.

வசனம் 13:31

குறிக்கப்பட்ட காலங்களிலே செலுத்தப்படவேண்டிய விறகுகாணிக்கையையும், முதற்பலன்களையுங்குறித்துத் திட்டம்பண்ணினேன். என் தேவனே எனக்கு நன்மையுண்டாக என்னை நினைத்தருளும்.

அவனுடைய கடைசிப்பணி விறகுகாணிக்கை. அது குறிக்கப்பட்ட காலத்தில் செலுத்தப்பட அவன் திட்டம் பண்ணினான். அதுமட்டுமின்றி ஜனங்கள் செலுத்தவேண்டிய முதற்பலன்களான காணிக்கைகளும் செலுத்தப்பட திட்டம்பண்ணினான். அவைகள் ஒழுங்காகக் கொண்டுவரப்பட திட்டம்பண்ணினான். நெகேமியாவிற்கு ஒழுங்கு திட்டத்தில் அதிக அக்கறையுண்டு. தேவனும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படவேண்டுமென்று விரும்புகிறார். நாமும், அவ்வாறே செய்யவேண்டும். வேதமும் அவ்வாறே கூறுகிறது. சகலமும் நல்லொழுக்கமும் கிரமமாயும் செய்யப்படக்கடவது (1.கொரி.14:10).

நெகேமியாவின் கடைசி வார்த்தைகள் இந்தப் புத்தகத்தில் உள்ளபடி தேவனே எனக்கு நன்மையுண்டாக என்னை நினைத்தருளும் என்பதாகும். கர்த்தர் சொல்லியுள்ளபடி கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராது (1.கொரி.15:58). ஆதலால் நெகேமியாவின் பிரயாசங்கள் விருதாவாயிராபடி தேவன் அவனுடைய வேண்டுதலை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார்.

எஸ்றா, நெகேமியா ஆகிய இருவருமே தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற தங்கள், தங்களின் வெவ்வேறான முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்திக் காட்டி இருவரும் செயல்பட்டனர். அர்களின் தேவ திருப்பணிக்கான தெய்வீக வாழ்க்கை நமக்கு பயனுள்ள ஆன்மீக படிப்பினையன்றோ!

தேவனே எனக்கு நன்மையுண்டாக, என்னை நினைத்தருளும், ஆமென்.